# தவேந்தல்

குகதாசன் தவேந்திரன்

1962 - 2022




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தவேந்தல்



## குகதாசன் தவேந்திரன்

## 21.04.1962. - 22.01.2022

---

அரியாலை - யாழ்ப்பாணம்

ஒஸ்லோ - நோர்வே

14023 CC
289502
289502 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

920

நூல் : தவேந்தல்
(அமரர் குகதாசன் தவேந்திரன் - நினைவுத் தொகுப்பு)
பதிப்பாளர் : மேகலா தவேந்திரன்
தொகுப்பாசிரியர் : என்.சரவணன் (நினைவுத் தொகுப்பு சார்பில்)
மலர்க்குழு : சர்வேந்திரா தர்மலிங்கம்,
பரமநாதன் ஸ்ரீஸ்கந்தன்,
ராஜன் செல்லையா,
பாலசிங்கம் யோகராஜா,
சஞ்சயன் செல்வமாணிக்கம்,
அருணன் சரவணமுத்து,
நேதாஜி நடராஜா
வடிவமைப்பு : என்.சரவணன்
பதிப்பாண்டு : 2022
பக்கங்கள் : 116
நாடு : நோர்வே

---

*Book* : *"Thaventhal"*
*(A memorial anthology of Kugathasan Thavendren)*
*Published by* : *Mehala Thavendren*
*Author* : *Sarawanan Komathi Nadarasa*
*Editorial team* : *Sarvendra Tharmalingam*
*Paramanathan Sriskandara*
*Rajan Chelliah*
*Balasingham Yogarajah*
*Sanjayan Selvamanickam*
*Arunan Saravanamuthu*
*Netha Nadarajah*
*Layout* : *Sarawnan Komathi Nadarasa*
*Year* : *2022*
*Pages* : *116*
*Printed* : *Norway*
*ISBN* : *9788230353981*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஜனவரி 26. தவேந்திரன் அவர்களை அன்று நல்லடக்கம் செய்து வழியனுப்பிவிட்டு வந்த நாள். அன்றே நண்பர்கள் சேர்ந்து எடுத்த முடிவு தான் அவருக்கு நினைவு மலரொன்றை செய்து முடிப்பது என்பது.

உலகில் விடைபெற்று மறைகிறவர்கள் எல்லோரும் மகான்களாக மறைவதில்லை. மகான்கள் பிறப்பதில்லை. சமூகத்தில் அவர்கள் ஆற்றிவிட்ட உயரிய பாத்திரங்களால் தான் மகான்கள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களே மகான்களாக அறியப்படுகிறார்கள். தவேந்திரன் அப்பேர்பட்ட ஒரு மகானாகவும், முன் உதாரணராகவும் வாழ்ந்து; தான் சார்ந்த உலகுக்கு கடன் இல்லாத மனிதனாக விடைபெற்றுச் சென்றிருக்கிறார்.

அப்பேர்பட்ட மனிதனுக்கு அந்த உலகம் செய்யும் கைமாறு; அவரை நினைவு கூருவதும், அவரை முன்னுதாரணமாகக் கொண்டு அப்பணிகளை விட்ட இடத்தில் இருந்து தொடர்வதுமே.

அதற்கு இந்த நினைவு மலர் அவரின் நினைவுப் பதிவுகளின் தொகுப்பாக மட்டுமன்றி அவர் நமக்கு விட்டுச் சென்ற பணிகளை நினைவுறுத்தும் பதிவுகளாகவும், அத்தகைய பணிகளை ஊக்குவிக்கின்றவையாகவும் நிலைத்து நிற்கும்.

தவேந்திரன் ஒரு கணவராக, தந்தையாக, உறவினராக, நண்பராக, மற்றவர்களால் விரும்பப்படுபவராக எல்லோர் இதயங்களில் எப்படி குடியேறினார் என்பது இந்த நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

"மரணத்தைவிட உண்மையான வேறெதுவும் இந்த உலகத்தில் இல்லை!" என்பார்கள். ஆனால் உலக உண்மைகள் பல நமக்கு கசப்பானவை. இழப்பை விட கசப்பான வேறெதுவும் நமக்கு இருக்கப் போவதுமில்லை. இறப்பு என்கிற கசப்பான உண்மையை எப்படி ஏற்றுக்கொள்வது என்பது பற்றிய புத்த பகவானின் போதனைகளை நாம் அறிந்திருக்கிறோம். இந்த இழப்பையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய வலுக்கட்டாயம் நம்மனைவருக்கும் உண்டு. சில இழப்புகளை கடக்கலாம், ஆனால் மறத்தல் சாத்தியமில்லை. தவேந்திரன் அந்த வகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மூன்று வாரங்களாக ஏறத்தாள இரு நாட்களுக்கு ஒரு தடவையாவது கூடி இம்மலருக்கான கட்டுரைகளை ஆக்குவது, சேகரிப்பது, தொகுப்பது, சரி பார்ப்பது, வடிவமைப்பது, மேம்படுத்துவது என்பதை கூட்டாக மேற்கொண்டோம். பலரையும் திருப்தி செய்யக்கூடிய ஒரு பணியை ஜனநாயக தாராளவாத வழிமுறைகளுக்கு ஊடாக சிறந்த பொறிமுறைகளைக் கையாண்டு முடிப்பது பற்றிய சிறந்த அனுபவங்களை பரஸ்பரம் பெற்றோம்.

தவேந்திரன் அவர்களின் துணைவி மேகலா தனியான "கல்வெட்டு" மலரை தவிர்த்துவிட்டு இந்த நூலின் பணிகளுடன் முழுமையான குடும்ப ஒத்துழைப்பை தந்தார். இந்த மலரின் உள்ளடக்கமும், வடிவமும் முதலில் குடும்பத்தினருக்கு திருப்தி தரவேண்டும் என்பதில் நாங்கள் அனைவரும் ஏகமாக உடன்பட்டிருந்தோம். அதையே நிறைவேற்றியிருக்கிறோம்.

இதோ தவேந்திரனின் நினைவேந்தல் "தவேந்தல்" மலராக உங்கள் கரங்களில்...

---

**நினைவுமலர் குழு சார்பில்**

**என்.சரவணன் - ஆசிரியர்**

- சர்வேந்திரா தர்மலிங்கம்,
- பரமநாதன் ஸ்ரீஸ்கந்தன்,
- ராஜன் செல்லையா,
- பாலசிங்கம் யோகராஜா,
- சஞ்சயன் செல்வமாணிக்கம்,
- அருணன் சரவணமுத்து,
- நேதாஜி நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

முன்னுரை ........ *1*

அன்புக் கணவருக்கு! ........ *8*

*Dear Dad*........ *12*

சகோதர சகோதரிகளிடமிருந்து........ *15*

தவேந்திரன் மச்சான்...! ........ *17*

*To our dearest*........ *18*

*Thavendren mama/Sitthappa/Periappa,*........ *18*

*We are also very proud of the achievements*........ *19*

உறவு வழி........ *21*

அமரர் தவேந்திரனுக்கான அஞ்சலி........ *33*

இன்னும் பல காலம் வாழ்ந்திருக்க வேண்டியவர் தவேந்திரன்.... *35*

வாராது போல் வந்த மாமணி........ *52*

பிறரை நேசித்த மனிதன்........ *60*

ஒரு முழுமையான மனிதன்........ *62*

எதைச் சொல்லி விடைபெறுகிறான் எமது தவேந்திரன்?........ *66*

முடிந்தால் திரும்பி வா நண்பனே! ........ *68*

"இப்புவி காணா இனியோன்"........ *72*

அற்புதங்களின் அற்புதம் ........ *74*

ஈர விழிகளுடன்........ *75*

நம்ப மறுக்கும் மறைவு........ *77*

செய்யும் தர்மம் தலை காக்கும்........ *79*

சின்னத்தம்பியின் இழப்பு........ *81*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையுடன் கூடிய வாழ்வு ........................................................................ 82

அமரர் தவேந்திரனுக்கான அஞ்சலி ........................................................... 83

ஒளிர்ந்த வழிகாட்டி அணைந்ததேனோ அண்ணலே ................................... 85

ஒன்றிய நினைவுகள் .................................................................................. 89

பல்துறையாற்றல் மிக்க சமூக சேவையாளன் .............................................. 90

தொட்ட பணி தொடர்வோம் ....................................................................... 91

அமரர் தவேந்திரன் அவர்களுக்கு அஞ்சலி .................................................. 93

தவேந்திரனை நினைவு கூறுகிறோம் ........................................................... 94

தவேந்திரன் குகதாசன் என்றும் எம்முடன்......! ........................................... 95

அரியாலை உதவும் கரங்களுக்காக ............................................................... 96

தவேந்திரன் எனும் தவப்புதல்வன் .............................................................. 97

*In memory of our dear colleague and friend, Kugathasan Thavendren.* 98

நினைவுக் குறிப்பு ....................................................................................... 100

அழியாப் புகழோடு ..................................................................................... 104

கலாசாதனா கலைக்கூடத்திற்கு தவேந்திரன் மாமா பேரிழப்பு!.. 106


தோழர் தவேந்திரன் குகதாசனுடன் சில நொடிகள் .................................... 109

அஞ்சலிக் குறிப்பு ........................................................................................ 111

தவேந்தல் .................................................................................................. 113

நன்றி நவிலல் ............................................................................................ 114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் தவேந்திரன் அவர்களின் வாழ்க்கை வழித்தடம்

- யாழ். புலத்தில் கல்வியாளர்களும் கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும் நிறைந்த புகழ்பூத்த அரியாலையூரில் குகதாசன் முத்தையா - புனிதவதி குகதாசன் தம்பதிகளுக்கு இரண்டாவது புத்திரனாக *21.04.1962* அன்று தவேந்திரன் பிறந்தார்.

- இவருக்கு புரந்தரன், இராஜேந்திரன், உருத்திராங்கன் என மூன்று சகோதரர்களும், பத்மினி, சாந்தினி, தர்மினி மூன்று சகோதரிகளும் உள்ளனர். ஏற்கனவே தர்மினி என்னும் சகோதரியையும் பெற்றோரையும் இழந்திருந்தார்.

- தனது ஆரம்பக் கல்வியினை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றார். அந்நாள்களில் சிறந்த குறுந்தூர ஓட்ட வீரனாகவும், அரியாலை இந்து இளைஞர் ஒன்றியம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் முக்கிய உறுப்பினராகவும் திகழ்ந்திருந்தார்.

- *1983*இல் நோர்வேக்கு கல்விகற்பதற்காக இடம்பெயர்ந்து, *1983/84* ஆம் ஆண்டுகளில் Gauldal Folkehøgskole (Trøndertun) இல் தனது, மொழிக்கல்வியைப் பெற்றார்.

- *1985/86* ஆண்டுகளில் Maskin -og mekaniker - இயந்திரப் பொறிமுறையாளர் துறையை Leksvik videregående skole இல் கற்றார்.

- *1987/88* ஆம் ஆண்டு Bleiker videregående skole - håndverk og industrifag - கைவினைத் தொழில்நுட்பவியல் துறையினைக் கற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◉ *1989/91* ஆம் ஆண்டு Sogn videregående skole - flymekaniker - விமானப் பொறிமுறையாளர் துறையினைக் கற்றார்.

◉ இதன்பின் பல மேற்பயிற்சிகளைப் பெற்று இத்துறையில் சிறப்புத் தேர்ச்சிபெற்றார்.

◉ *1987 Oslo*வுக்கு இடம்பெயர்ந்த அவர், Bærum பகுதியில் வசித்து வந்த காலத்தில், அரியாலையைச் சேர்ந்த மயில்வாகனம் - தங்கலட்சுமி இணையரின் மகளான மேகலாவை *1990* ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். இவர்களது இனிய இல்லறத்தின் பயனாக ஜீவந்தி, டிசாந்தி, துசாந்தி ஆகிய பிள்ளைச்செல்வங்கள் கிடைத்தனர். பிள்ளைகள் தாய்மொழியைக் பேசவல்லவர்களாக, சங்கீதம், நடனம் போன்ற எமது கலாச்சாரத்தில் ஈடுபாடு உள்ளவர்களாக வளர்ப்பதில் மிகுந்த அக்கறையுடன் இவர் செயற்பட்டார்.

◉ தவேந்திரன் அவர்கள் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து பெரும் சமூகத் தொண்டுகளைச் செய்துவந்தார். *1993 — 2006* ஆண்டு வரையான காலத்தில் Asker og Bærum தமிழர் ஒன்றியத்தில் அங்கத்தவராக இருந்துள்ளார். இங்கு தலைவராகவும், நிர்வாக உறுப்பினராகவும் இயங்கி வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது..

◉ *2007*ஆம் ஆண்டளவில் அரியாலை மக்கள் மன்றத்தின் நோர்வே கிளையினை ஆரம்பித்தவர்களில் ஒருவர். தொடர்ந்தும் *2019* வரை அங்கத்தவராக இருந்தார்.

◉ *2010* ஆம் ஆண்டளவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நோர்வே கிளையினை ஆரம்பித்தவர்களில் ஒருவர். தொடர்ந்தும் *2022* வரை அங்கத்தவராக இருந்தார்..


◉ *2013 - 2022* ஆம் ஆண்டு நோர்வே தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகத்தில் இணைந்து, நிர்வாகசபை உறுப்பினர், உப கலைச்செயலாளர், பொருளாளர், உபதலைவர், தலைவர் என பல்வேறு பதவிகளை வகித்து சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

◉ *2021* ஆம் ஆண்டு சர்வதேச ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும் கடமையாற்றினார்.

◉ தவேந்திரன் அவர்கள் குறுகியகால சுகயீனத்தின் பின் *22.01.2022* சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தொழில் | நிறுவனம் |
|---|---|---|
| *1991 - 2000* | Serviceingeniør<br>பொறியியலாளர் | *Hydronic AS* |
| *2000 - 2005* | Teknisk konsu-<br>lent/lab-ingeniør<br>(தொழில்நுட்பத்துறை<br>வல்லுனர்) | *FRAS Teknologi AS* |
| *2005 - 2006* | *Inneselger -hydraulikk*<br>விற்பனையாளர் | *Maskin K. Lund storm Martens AS* |
| *2006 - 2022* | *Inneselger -hydraulikk*<br>விற்பனையாளர்- நீரமுக்கப்<br>பொறிமுறை | *Parker Hannifin AS* |



இயல்பாகவே தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் ஆர்வமுள்ள தவேந்திரன் புதிது புதிதாக எதையாவது வடிவமைத்துவிடுவார். அவரின் வீட்டிலேயே அதற்கான ஒரு ஏற்பாட்டையும் செய்துவைத்திருந்தார். அவரால் சொந்த திட்டத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு Hydraulic கருவியை பரீட்சித்துப் பார்க்கையில் எடுக்கப்பட்ட படம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் கணவருக்கு!

-மேகலா

முப்பத்தி இரண்டு வருட திருமணவாழ்க்கை... உங்களின் இறப்பின்பின் முடிவுக்கு வந்துள்ளது.

1989 ஆம் ஆண்டுக்காலத்தில் நோர்வேயில் உங்களை முதலில் சந்தித்தேன். அதற்கு முன் ஊரில் உங்கள் குடும்பத்தினரை நான் அறிந்திருந்தும் உங்களுடன் பழகியதில்லை.

அதன்பின், நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, 1990ஆம் ஆண்டு பதிவுத்திருமணத்தின் பின் 1991இல் திருமணம் முடித்து வாழ்க்கையை ஆரம்பித்தோம்.அந்தநாள்களில் அதிகமாகப் பாடசாலைக்குச் செல்வதும் வேலைக்குச் செல்வதுமாகவே எமது காலங்கள் கடந்தன.

இந்நாட்களில் ஒரு சில தமிழ்ப்பெண்களே வாகனங்களைச் செலுத்திய காலத்தில், நீங்கள் என்னையும் வாகன சாரதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள ஊக்குவித்து, அதற்குரிய பயிற்சிகளைத்தந்து, நான் வாகன சாரதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள உறுதுணையாக இருந்தீர்கள். இதன் காரணமாக எமது தினசரி வாழ்க்கை மிகவும் இலகுவாக அமைந்தது.

எமக்கு மூன்று பெண்குழந்தைகள்! 1993, 1996, 2000 ஆம் ஆண்டுகளில் பிறந்தனர். குழந்தைகளை மிகவும் பாசத்துடனும் பரிவுடனும் பராமரித்ததில், பெரும்பங்கு உங்களையே சாரும். மூவரும் பெண் குழந்தைகளாக இருந்தாலும், எமக்கு ஆண் குழந்தைகள் இல்லையென்ற குறையில்லாமல், நீங்களே எமது குழந்தைகளுக்கு அனைத்தையும் கற்றுக்கொடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை ஆண்குழந்தைகளுக்குச் சமனாக வளர்த்திருந்தீர்கள். இன்று அவர்கள் சுயமாக உங்களது சுய விருப்பப்படி வளர்ந்திருக்கிறார்கள். இவ்விடத்தில் எமது குழந்தைகள் அனைவரும் தங்களது உல்லாசப் படகினைச் செலுத்துவதற்கும் நீங்கள் பயிற்சியளித்து, அவர்கள் தனியே கடற்பயணங்களை மேற்கொள்வதற்குமுரிய துணிவினைக் கொடுத்திருப்பதையும் மறக்க முடியாது.

நீங்கள் விரும்பியபடி இரண்டு மூத்த பிள்ளைகளின் திருமணவாழ்விற்கான தெரிவுகளை ஏற்றுக்கொண்டு, அவர்களது எதிர்காலத் துணைவர்களையும் சந்தித்திருக்கிறீர்கள். உங்களின் மிகக் குறுகிய நோய்க்காலத்தின் காரணமாக அவர்களின் திருமணங்களை உங்களினால் காணமுடியாதுபோனது எங்களது துரதிர்ஷ்டமே.

உங்களது குடும்பத்தவர்களை எவ்வாறு அன்புடனும், அக்கறையுடனும் கவனித்துக்கொண்டீர்களோ, அதேபோன்று எனது சகோதர சகோதரிகளையும் அவர்களது குடும்பத்தவர்களையும் பேரன்புடன் கவனித்துக்கொண்டீர்கள். அதுமட்டுமல்ல, எனது சகோதரிகளின் திருமண வாழ்வுக்கும் பெரும் பங்காற்றியுள்ளீர்கள்.

நான் எனது தாதியருக்கான மேற்கல்வியை 2006ஆம் ஆண்டு தொடங்கியிருந்தேன். அக்காலத்தில் எங்கள் குழந்தைகள் மிகவும் சிறியவர்களாக இருந்தனர். இந்நிலையில், மூன்று குழந்தைகளை வளர்ப்பதும், கல்விச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு அழைத்துச்செல்வதும் பின்பு வேலைக்கும் அத்துடன் மேற்கல்விக்கும் சென்றுவருவதென்பது இலகுவானதாக இருக்கவில்லை. இந்தநாள்களிலும் நீங்களே குழந்தைகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக இருந்தீர்கள். அதுமட்டுமல்ல, எனது கல்விக்கும் உதவிசெய்தீர்கள்.

இவ்வாறான உங்களின் உதவியின்றி, என்னால் எனது மேற்கல்வியினை முடித்திருக்க முடியாது. ஒரு பெண், கல்வியின் மூலம் சுயமரியாதையுடன் வாழலாம் என்பதற்கும், அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெரும் உறுதுணையாக நீங்கள் இருந்துள்ளீர்கள். இது உங்களின் விசாலமான மனதை எடுத்துக் காட்டுகிறது.

எமது திருமணவாழ்க்கையில் நான் எதையும் பற்றாக்குறையாக நினைக்காத அளவிற்கு, நீங்கள் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்து தந்திருப்பதோடு, எனக்கு அவசியமான அனைத்து நாளாந்தத் தேவைகளுக்குரிய உதவிகளையும் நீங்களே செய்திருக்கிறீர்கள்.

உங்களின் இரக்க குணத்தினை அனைவரும் அறிந்திருந்தாலும், மற்றையவர்களை விட நானே அதனை என் வாழ்வினில் தினம் தினம் அனுபவித்து உய்ந்திருக்கிறேன். யார் என்ன உதவியினை எந்த நேரத்தில் கேட்டாலும், அவர்களது தேவையை உங்களது தேவையாக நினைத்து, உனடியாகவே செய்து கொடுக்கும் மனம் உங்களிடம் இருந்தது. நேர காலத்தினையும், குடும்பத்தின் சிரமங்களையும் கவனத்தில் எடுக்காது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மற்றையவர்களின் தேவைகளை முன்னின்று முடித்துக்கொடுக்கும் மனம் உங்களுடையது.

உங்களின் இறப்பின்பின், கிடைக்கும் பல செய்திகளை நோக்கும்போது, குடும்பத்தவராகிய நாம் அறியாமலேயே நீங்கள் பலருக்கு உதவி செய்திருப்பதை தெரியக்கூடியதாக இருக்கிறது.

நீங்கள் உங்களைக் கவனிக்காது குடும்பம், சமூகம், சக மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததை நாம் பலமுறை எடுத்துச் சொன்ன பின்பும், நீங்கள் உங்களின் செயற்பாடுகளில் மாற்றங்களைச் செய்துகொள்வில்லை. இது உங்களின் ஆழ்மன விருப்பம் என்பதை நான் இப்போது புரிந்துகொள்கிறேன். ஏன் இறைவன் இப்படியான குணம் கொண்டவர்களை மிகக்குறைந்த வயதில் அழைத்துக்கொள்கிறார்? என்பதும் எனக்குப் புரியவில்லை.

மிகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் சென்றுகொண்டிருந்த எமது வாழ்வில், *2021* ஆம் ஆண்டின் ஆனி மாதத்தில் கிடைத்த நோய்பற்றிய செய்தி பேரிடியைத் தந்தது.

வருட ஆரம்பத்தில் உங்களின் குரலில் மாற்றங்கள் ஏற்பட்டன. நாம் அவை இலைதுளிர் காலத்தில் உங்களுக்கு ஏற்படும் அழற்சியின் காரணமாகவே வந்துள்ளது என்று நினைத்திருந்தோம். ஆனால், அவை சுவாசப்பையில் ஏற்பட்ட புற்றுநோயின் அறிகுறிகள் எனப் பின்பே புரிந்துகொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் நாங்கள் செய்யும் நன்மைகள் எம்மை ஒருபோதும் கைவிடமாட்டாது... என்று நாம் நம்பினோம்.

உங்களுக்குக் கிடைத்த மருத்துவ உதவியின் காரணமாக நான்கு மாதங்களில் உங்களின் நோய் ஏறத்தாழ குணமாகும் அறிகுறிகளை நாம் கண்டிருந்தோம். உங்களுக்கும் அது மிகுந்த மனமகிழ்ச்சியினைத் தந்திருந்தது. இதன் காரணமாக நாம் நோய்பற்றி எவருக்கும் அறியத்தருவதில்லை என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தோம்.

இந்நாள்களில் நோர்வேயிலும் வெளிநாடுகளிலும் பல உதவிகளைப் பெற்று நோய்க்கான மருத்துவ உதவிகளை நாடியிருந்தோம்.

புரட்டாதி மாதமளவில் உங்களின் நோய் மீளவும் பரவ ஆரம்பித்து. இதன் காரணமாக குறுகிய காலத்தில் நோய்க்கான மருந்துகளை உடல் ஏற்றுக்கொள்ள மறுத்தமையினால், நீங்கள் பெருந்துன்பத்தினை அனுபவித்தீர்கள்.

இருப்பினும், நோயில் இருந்து நீங்கள் மீண்டு வருவீர்கள்... என்று நாம் எல்லோரும் நம்பியிருந்தோம். இவ்வருடத்தின் நத்தார் பண்டிகையின் போதும் நீங்கள் நோயில் இருந்து மீண்டு வருவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன.

இருப்பினும், தைமாதத்தில் உங்களின் உடல்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் நோய் தீவிரமடைந்து, இறுதியில் நீங்கள் இறைவனடியில் சேர்ந்து விட்டீர்கள்.

இதனை நாம் எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எமது குடும்பத்தினருக்கு இது மிகுந்த வேதனையையும், ஈடுசெய்ய முடியாத இழப்பையும் தந்திருக்கிறது.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" எனும் கொள்கையுடையவர் நீங்கள். இப்பண்பினை நான் உங்களிடம் இருந்துதான் கற்றுக்கொண்டிருக்கிறேன்.


எனது மிகுதி வாழ்க்கையினை, நீங்கள் எனக்குக் கற்பித்த வகையிலும், உங்களின் சிந்தனைகளின் வழிகாட்டலிலும் துவண்டுபோகாது என் பிள்ளைகளுடன் நான் வாழ்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Dear Dad....*

Dear Dad. It is with a heavy heart and unbelievable sadness to come to terms with the fact that you are no longer with us. Words cannot describe the pain we feel, that we will never again hear you call us chellam, that we will never again give you a hug. You were an unbelievably good father with infinite love. You had a big heart, not just for us kids, but for everyone around you. We always heard warm words from others, that we had a dad who was so kind, patient and helpful.


Dad, you were keen to help those in need. You yourself came from difficult circumstances and grew up with limited resources. You moved to Norway as a 19-year-old and told us that you cried every day for the first two weeks, but still chose to stay. You met Mom and started a family. When you had the three of us, you were skeptical of the discipline in the Norwegian school system and considered whether it would be better to move back to Sri Lanka instead. But you saw how happy we were, and how excited we were when we went to school, something you had never felt or experienced, so you decided that Norway was the best country for our family.



You had a great interest in mechanics, computers, construction, hydraulics and sea life. We remember you well as an all-rounder, and often found you in the shed or garage with tools in hand and machine oil on your fingers. You stayed with four girls, which was certainly not easy for you. You wanted boys, to whom you could teach your interests, but then realised that you were lucky to have three beautiful and healthy daughters. You were very happy for the three girls you got and often joked that it would have been much worse with three boys. We often watched you repair the cars and tried hard to teach us your skills.

It was always you who showed great joy and engaged us in outdoor activities, such as skiing, sledding, boat trips, and we will always remember how eager you were to take your

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




289502

boat out from the pier. We will also not forget the times you took us to museums, motor shows and all the amazing trips abroad. These memories can never be forgotten. You and mom created a happy life together for our family here, while your dream to return to Sri Lanka was put on hold until you retire. You had a plan. You built a house in Sri Lanka that you were going to move to, and you were going to spend your time doing charity work. You never forgot where you came from, so it was very important for you to give back to those in need in Sri Lanka. You helped start several charities, including for your primary school and for children and youths in Ariyalai. Until the last moment, you worked hard for this to continue. During one of our many trips to Sri Lanka, you asked if we could do something nice for your primary school when we were there. After many ideas and input from you, we ended up renovating a classroom at the primary school. There was a lot of praise and gratitude from the locals and the Tamil community afterwards, but all this was really thanks to you. The quality you had to always think of those in need is something we are very proud to have inherited from you.

Dad, because of you and your love, we stand here today, as four independent women. We'll make it, thanks to you. You were the perfect dad - good, kind and caring. You were always proud of us kids and we hope you know we were incredibly proud of you too. We remember so well from when we were little that you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

always kissed us on the cheek and said "kavanama poittuvango". Now it's our turn to give you a kiss on the cheek and say rest in peace dear dad.


A excerpt from Dads

eulogy by

Jeevanthi,

Disanthi,

Thusanthi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகளிடமிருந்து...

பாசமிகு சகோதரன் தவேந்திரனுக்கு...

உங்களது இழப்பு எமது குடும்பத்திற்கு பாரிய பேரிழப்பாகும். நாம் ஏழு சகோதர சகோதரிகள். ஏற்கனவே நாம் எமது இளைய சகோதரியையும் இழந்திருந்தோம். தற்போது உங்களையும் இழந்துவிட்டோம்.

1983 ஆம் ஆண்டு எமது குடும்பத்தில் இருந்து நோர்வேக்கு வந்த நீங்கள், சில காலங்களின் பின், பெரிய அண்ணாவையும் எங்கள் அனைவரையும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பெரும்பாடுபட்டு, வெளிநாடுகளுக்கு அழைத்து எங்களின் வாழ்வு சிறப்பாக அமைவதற்கு உதவி செய்திருந்தீர்கள்.

யுத்தக் காலத்தின் மத்தியில் 1996ஆம் ஆண்டு எமது தாயார் மிகவும் சுகயீனமுற்றிருந்தபோது, அவருக்கான மருத்துவ உதவிகளை மேற்கொள்வதற்காக சிறுகுழந்தையாக இருந்த மூத்த மகளுடனும், மூன்று மாதக் கர்ப்பிணியாக இருந்த மேகலாவுடனும் கொழும்பிற்கு வந்திருந்தபோது, எமது தாயார் யாழ்ப்பாணத்தில் காலமானதைக் கேட்டு நீங்களும் மேகலாவும் கதறியழுத நாளினை நாம் இன்னும் மறக்கவில்லை.

பின்பு தம்பிகள் இருவரும் வெளிநாட்டுக்கு வரும் வழியில், டென்மார்க்கில் மிகுந்த சிரமங்களுக்கு உட்பட்டிருந்த வேளையில், நோர்வேயில் இருந்து உடனடியாகப் புறப்பட்டு அங்கு சென்று அவர்களுக்கு உறுதுணையாக இருந்துள்ளீர்கள். இது தமக்குப் பெரும் மனத்தைரியத்தினையும் நம்பிக்கையையும் தந்ததாக அவர்கள் இருவரும் எப்போதும் நினைவு கூறுகிறார்கள். இந்நாட்களில் சாந்தினி விபத்துக்குள்ளான நிலையில், பிரான்ஸ் சென்று அவருக்கு உறுதுணையாக இருந்ததையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

எமது வாழ்வு மட்டுமல்ல... அப்பா, அம்மாவின் வாழ்க்கையும் அவர்களது இறுதிக்காலம் மகிழ்ச்சியாக அமைவதற்கும் நீங்கள் உறுதுணையாக இருந்தீர்கள்.

நாம் மிகவும் வறிய குடும்ப சூழ்நிலையில் எமது வாழ்க்கையினை ஆரம்பித்திருந்தோம். நோர்வேயில் உங்களது முதலாவது சம்பளத்தில் எமது வீட்டுக்கான மின்சார வசதிகளை ஏற்படுத்தும் வழிமுறைகளை நாம் செய்வதற்கு நீங்கள் உதவியதை நாம் மறக்கவே முடியாது.

அதன்பின்னரான காலத்தில், உங்களின் உதவியுடன் எமது வீட்டிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக வானொலிப்பெட்டியும் பின்பு தொலைக்காட்சிப்பெட்டியும் கிடைத்த நாட்களையும் எண்ணிப் பார்க்கிறோம். இவ்விடத்தில் உங்களுக்கு 15 வயதாக இருந்த காலத்தில் நீங்கள் பல உதிரிப்பாகங்களை இணைத்து ஒரு வானொலிப்பெட்டியினை உருவாக்கியிருந்தீர்கள். இது அந்தநாள்களிலேயே உங்களுக்கு தொழில்நுட்பத்திறமை இருந்திருக்கிறது என்பதைக் காண்பிக்கிறது.

எங்களை மட்டும் நீங்கள் உயர்த்திவிடவில்லை. உங்களின் இரங்கும் குணத்தின் காரணமாக, நீங்கள் பலருக்கும் பல உதவிகளைச் செய்து அவர்களின் வாழ்க்கையின் தரத்தினையும் உயர்த்தியிருக்கிறீர்கள்.

சக மனிதனின் வேதனைகளை, துயரங்களை உங்களது வேதனைகள், துயரங்கள் போன்று கருதி சிரமம் பாராது பல உதவிகள் செய்து, மற்றையவர்களின் வலிகளைத் நீக்கியிருக்கிறீர்கள்.

இதுமட்டுமல்ல, எமது அரியாலை ஊரின் பல முன்னேற்றங்களுக்கும் நீங்கள் காரணமாக இருந்திருப்பதோடு, நோர்வேயிலும் பல அமைப்புக்களுடன் இணைந்து, எமது சமூகத்திற்குப் பெரும் பணியாற்றியுள்ளீர்கள்.

எமது குடும்பத்தவர்களின் விடுமுறைகளை ஒன்றாகக் கழிப்பதற்குரிய அனைத்துத் திட்டமிடல் நடவடிக்கைகளையும் நீங்களே மேற்கொண்டு, நாம் அனைவரும் ஒன்றாக மகிழ்ச்சியாக இருப்பதற்கு நீங்களே காரணமாக அமைந்துள்ளீர்கள். அனைவரையும் அரவணைக்கும் இப்படியான உங்களது செய்கைகளை நாம் என்றென்றும் மறக்க மாட்டோம்.

இப்படியானதொரு உன்னதமான மனிதனை எமது சகோதரனாகப் பெற்றமைக்கு நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதோடு, நீங்கள் எமது பெற்றோரையும் பெருமைப்படுத்தியுள்ளீர்கள்.

உங்களின் இழப்பினால் இப்போது நாம் எல்லோரும் பரிதவிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவேந்திரன் மச்சான்...!

**- மைத்துனிகள்**

1990 ஆம் ஆண்டு ஏழு பெண் சகோதரிகளையும் ஒரு சகோதரனையும் கொண்ட எமது குடும்பத்தில் மேகலாவைத் திருமணம் செய்து நான்காவது மருமகனாக இணைந்து கொண்டீர்கள்.

அன்றில் இருந்து இன்று வரை எமது குடும்பத்தில் நடைபெறும் எல்லா விடயங்களையும் முன்னின்று நடத்துவது மட்டுமல்லாது, வாழ்வின் கடினமான நாட்களிலும் எமக்கு உறுதுணையாகவும் இருந்திருக்கிறீர்கள்.

1997 இல் கைக்குழந்தையுடன் இலங்கை வந்து மேகலாவின் சகோதரிக்குத் திருமணம் செய்து வைத்தீர்கள். எமது தம்பி நோர்வேயில் இருந்த போது அவருக்குத் தேவையான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். 2003 இல் நாம் எமது தந்தையை இழந்து நின்றபோது, எங்கள் அப்பாவுக்கு மகனைப் போல் இறுதிக் கிரியைகளைச் செய்து, எமக்கு ஆறுதலாக இருந்தீர்கள். உங்களின் நற்குணமே உங்கள் குடும்பத்தில் எங்கள் கடைசிச் சகோதரியை வாழ வழிவகுத்தது. இவ்வாறாக மாற்றுக் கல்யாணங்கள் எமது ஊரில் அரிதாகவே நடக்கும், ஆனாலும் உங்களின் புரிந்துணர்வால் இது சாத்தியமானது. இதனால் குடும்பத்தின் நெருக்கமும் ஒற்றுமையும் அதிகரித்தன.

ஊர்ப்பற்றுக்கொண்ட நீங்கள், 2003ஆம் ஆண்டளவில் யுத்தகாலத்தின் மத்தியிலும் கனரக Excavator இயந்திரங்கள் இரண்டினை கொழும்பில் வாங்கி, ஊரினைச் சுத்திகரிக்கும் நடவடிக்கைகளுக்கு எமது தந்தையுடன் இணைந்து செயற்பட்டீர்கள். எமது தந்தையாரின் திடீர் மறைவின்பின் இப்பணி நிறுத்தப்பட்டது எங்கள் ஊரின் துரதிர்ஷ்டமே.

கலையில் ஆர்வமுள்ள நீங்கள், எங்கள் பிள்ளைகளின் அரங்கேற்றத்தில் உங்களின் திறமையினால் மேடை அலங்காரம் செய்து நிகழ்ச்சியை மெருகூட்டினீர்கள். பிள்ளைகளின் திருமண வைபவங்களையும் முன்னின்று நடாத்தி வைத்திருக்கிறீர்கள். பிள்ளைகளுடன் கதைக்கும் போது நீங்களும் பிள்ளையாக மாறி அவர்களுக்கு வழிகாட்டியுள்ளீர்கள்.

இத்தனை சிறப்புக்குணங்களையும் திறமைகளையும் கொண்ட மைத்துனரான உங்களை இறைவன் அழைத்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளார்.

---

**நிர்மலா, மஞ்சுளா, அமிர்தா, சகிலா, பிரமிளா, தர்மிளா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To our dearest

# Thavendren mama/Sitthappa/Periappa,

*- Kugathasan grandchildren*

Words can't express our sadness as you are no longer with us today. We're struggling to come to terms with your passing, due to how quickly it all unfolded. You were an active, healthy person, and it seems unfair that you were taken from us so soon.

Some of our happiest childhood memories were with you. You organised our family holidays to Sri Lanka, you took us to Denmark, Sweden and around Norway. Even though most of our families live in different countries, you brought us all together through countless number of trips to see each other, so distance was never a barrier. We have unforgettable memories with you and the girls and we'll cherish them for the rest of our lives.

You were a kind and caring brother to our parents, always happy to help and had a lot of patience when doing so. You treated us like your own children and were always so happy for us and proud of our accomplishments.

After your passing, we heard so many wonderful things from your friends and family about you. The amount of charity work you did, and your efforts to build our Tamil community. You were an inspiration to us all, and we are so proud to be your nieces and nephews.

We miss you Thavendren mama, we miss your smile, your kindness, your love, your selflessness, and our jokes together. You'll forever be in our hearts. Rest in peace our dearest Mama/Sitthappa/Periyappa

Lots of love,

***Kugathasan grandchildren***

***Sivanthan, Yasinthan, Nitha, Bruntha, Nivetha, Tharannjah, Benita, Theophil, Lavankky, Ashvini, Shaalavi and Anushan***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *We are also very proud of the achievements*

Dearest Thavendran Thambi, Anna, Machan,

Your loss is unbearable to our family. We have always been very close and affectionate as one family. You were always pleasant and with a smile.

You are a true gentleman and a multi-talented good-hearted person. You have helped the community in countless ways. You were also well known for your honesty and hard work. We are very proud to have had you as our first cousin.

Since childhood, you wanted to help your relatives and Ariyalai community whenever possible. You donated money to improve the standard of Sri Parvathy Vidyasalai and the library in Ariyalai. You were also a member of so many charitable organizations which provide care for many Sri Lankans. You were also active in community activities in the Norway Tamil Community.

You built a brand-new house in Ariyalai and you wanted to live in Ariyalai at a later age.

You always participated and helped with all our family functions. You had played an important role in organizing Sasi's wedding that we cannot never forget.

You enjoyed music and cultural events from a young age. You provided full support and encouragement to your children, and they participated in the 2018 Kalai Vizha in Ariyalai and had their Arangetram in 2015 in Oslo Norway.

You were well known in Ariyalai due to your grandfather being the temple manager and your father serving in the temple. Everyone had very high regard for you due to your very good character and noted how bright you were from a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

very young age.

We had lots of fond memories of our time with you which we will cherish forever.

We all got together in Jaffna during school holidays. This was usually Thiruvizha season with us all walking together to Nallur and back having a lot of fun. We never missed going to East Ariyalai visiting our ancestral temple, bathing in the sea, and having fun. Boys had fun cycling to Jaffna Town, visiting friends and watching movies.

You also spent some time in Colombo during A-levels staying Kosala Aunty. We played homemade monopoly for days on end. You were a pretty good singer who would keep singing and drumming a lot and went through a phase asking us to do "Iyesa" for a song. During this time we used to go swimming at the Hendala beach.

We are very happy and proud that that you have had a successful career in Norway. We are also very proud of the achievements of your wife and children.

While we are spread out in Sri Lanka, UK, Norway and Australia we have been very fortunate to have spent time with you, your wife and children for which we are eternally grateful. We are thankful to God that you have had a happy married family life and feel for the great loss of your wife and children. We extend our heartfelt condolence to Mehala, Jeevanthi, Thusanthi and Disanthi and we will always be there for them.

Our thoughts and prayers are always with you and your family.

Om Shanthi from your first Cousins.


***Kala Acca, Sasi Acca, Kugalingam; Sivakumar, Ratnakumar, Raja, Chutty; Vithya, Thivya, Komala, Ramesh, Sathya; Nehrujee, Kuharathy,***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உறவு வழி...

| | |
|---|---|
| பாட்டனார்<br>பாட்டி | கார்த்திகேசு முத்தையா - அமரர்<br>தங்கம்மா முத்தையா - அமரர் |
| தந்தையார் | முத்தையா குகதாசன் - அமரர் |
| தாயார் | புனிதவதி குகதாசன் - அமரர் |
| மனைவிவழி மாமன் | மயில்வாகனம் முத்துக்குமார் - அமரர் |
| மனைவி வழி மாமி | தங்கலட்சுமி மயில்வாகனம் |
| மனைவி | மேகலா |
| பிள்ளைகள் | ஜீவந்தி, டிசாந்தி, துசாந்தி தவேந்திரன் |
| சகோதரர்கள் | புரந்தரன், பத்மினி, சாந்தினி, தர்மினி (அமரர்),<br>இராஜேந்திரன், உருத்திராங்கன் |
| சகோதர வழி மைத்துனர்கள் | குகரதி, பிரபாகரன், சந்திரமோகன், தர்மிளா,<br>ஹேமராணி |
| மனைவி வழி மைத்துணிகள் | நிர்மலா, மஞ்சுளா, அமிர்தா, சகிலா, பிரமிளா,<br>தர்மிளா, வாசுகன் |
| உடன்பிறவாத சகோதரர்கள் | மேகலா, சசீலா, குகலிங்கம், சிவகுமார், ரட்ணகுமார்<br>யோககுமாரி, தனேந்திரகுமார் |
| மாமா வழி மைத்துணர்கள் | வித்தியா, திவ்யா, ரமேஸ், நித்தியா, சத்தியா, நேருஜீ<br>குகரதி |
| சகோதர வழி பெறாமக்கள் | தரண்யா, சிவந்தன், யசிந்தன், பிருந்தா, நிசுர்நிதா,<br>நிவேதா, பெனிற்றா, விசுவாசன், லவங்கி, சாலவி,<br>அஸ்வினி, அனுஷன் |
| மனைவி வழி பெறாமக்கள் | பிரசாந்தி, பிரியந்தி, பிரியந்த், ஸ்ரீபன், ஸ்ரீபனி,<br>அனோஜன், அஞ்சலி, அஞ்சனா, அபிசன், கபினா,<br>மிதுன், தபிதா, லவங்கி, சாலவி. |
| பெரியதாய்மார்கள் | சிவபாக்கியம் முத்துக்குமாரசூரியர் - அமரர்<br>சாரதாதேவி செல்லத்துரை<br>கோசலாதேவி ஸ்ரீகணேசா - அமரர் |
| தாய் வழி மாமன் | சண்முகலிங்கம் - அமரர்<br>குகதாசன் - அமரர் |
| சகலர் | மகேந்திராஜா, நிமலதாஸ், ரமேஸ் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







289502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பின் வரிசையில் நிற்கின்ற நான்கு பேரில் இரண்டாவதாக இருப்பவர் தவேந்திரன். அவருக்கு அடுத்ததாக அவரின் சகோதரர் புரேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"We remember so well from when we were little that you always kissed us on the cheek and said "kavanama poittuvango". Now it's our turn to give you a kiss on the cheek and say rest in peace dear dad..!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தவேந்திரனுக்கான அஞ்சலி

**-செ. பத்மநாதன்**

அமரர் குகதாசன் தவேந்திரன் அவர்கள் கொடியநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என எனது மைத்துனர் ஒரு சில வாரங்களுக்கு முன்னர் எனக்குத் தெரிவித்த பொழுது என்னால் நம்பமுடியவில்லை. திடகாத்திரமான உடல் நிலையும், தளரா மனத்துணிவும் கொண்டிருந்த தவேந்திரன் அவர்கள் மேற்கத்தைய நாடுகளில், குறிப்பாக அவர்கள் வாழ்ந்து வந்த நோர்வே நாட்டில், உள்ள வைத்திய நடைமுறையில் அவர் விரைவில் குணமடைந்துவிடுவார் என்று எண்ணியிருந்தேன். ஆனால் ஒரு வாரத்திலேயே அவர் தனது குடும்பத்தையும் எமது சமூகத்தையும் விட்டுப்பிரிந்த செய்தி எமக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

குகதாசன் குடும்பம் அரியாலையில் எல்லோருக்கும் பிரபல்யமான குடும்பம். எனது திருமணத்தின் பின்னர் அவர்களது வீட்டுக்கு முன்வீடே எனது நிரந்தர வசிப்பிடமாகியது. அப்பொழுது யாழ் இந்துக் கல்லூரியில் ஆறாம் ஆண்டு மாணவன் மூத்த சகோதரன் புரந்திரன். மற்றைய பிள்ளைகள் எல்லோரும் அப்போது சிறுவர்கள். சிலர் பின்னர்தான் பிறந்தார்கள். எனது மனைவி வீடு அவர்கள் வீடு போன்றது. அவ்வளவு அந்நியோன்ய கிராம வாழ்க்கை. அந்தப் பிள்ளைகளுக்குத் தவேந்திரன் உட்பட எனது துணைவி பாடம் சொல்லிக்கொடுப்பார். ஆலோசனைகள் கூறுவார்.

அவர் GCE A/L படித்துக்கொண்டிருந்த காலம் நாட்டில் மிகவும் அவலமான காலம். இளைஞர்கள் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆயுதம் ஏந்தக் கட்டாயப்படுத்தப்பட்ட காலம். இயற்கையாவே பயந்த சுபாவமும் அமைதியும் விரும்பிய தவேந்திரன் அன்றைய சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்.

எமது கிராம இளைஞர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற பொழுது அவரும் அந்தக் குழுவினருடன் சேர்ந்துகொண்டார். அப்போது பயணத்தடை இருக்கவில்லை. நான் அப்பொழுது யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்ததால் அவர்களது பயணத்திற்கு பல உதவிகளைச் செய்யக் கூடியதாக இருந்தது. அதன்பின் அவர் நோர்வே சென்றுவிட்டார். பல வருடங்கள் தொடர்பு நேரடியாக இருக்கவில்லை. பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் நடந்து முடிந்துவிட்டன.

இங்குள்ள இளைஞர்களின் எதிர்காலம் என்பனவை பற்றியே தொடர்ச்சியாக என்னுடன் கலந்துரையாடினார். ஸ்ரீபார்வதி வித்தியாசாலை அபிவிருத்தியில் நேரடியாக அதிபருடன் கலந்துரையாடி வேண்டிய உதவிகளைச் செய்வதோடு தொடர்ந்து ஆலய அபிவிருத்திக்கான கோயில்குழுவின் பிரதான பாகத்தை வகித்து, செயலாற்றி, உதவிகள் புரிந்தார்.

சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கணினி கற்கை நெறியை 2010 காலங்களில் தனது சொந்தச் செலவில் ஆரம்பித்து கணினிகள், குளிரூட்டிகள், தளபாடங்கள், ஆசிரியர்களின் வேதனம் என்பவற்றை 5 வருடங்களாகப் பொறுப்பேற்றிருந்தார்.

நாடு ஓரளவு சுமூகமான பின்னர், நாட்டுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்த ஒவ்வொரு வருடமும் இங்கு வருகைதந்து பாடசாலை, சித்திவிநாயகர் ஆலயம், சரஸ்வதி சனசமூக நிலையம் போன்றவற்றின் வளர்ச்சி உதவினார்.

அவர் அரியாலையில் புகழ்பெற்றிருந்த அமரர் கிராமசேவையாளர் திரு மயில்வாகனத்தின் மகள்களில் ஒருவரைத் தனது வாழ்க்கைத் துணைவியாகக்கொண்டு மூன்று பெண் பிள்ளைகளை தனது வாரிசாகக்கொண்டு அவர்களின் உயர்கல்வியில் பங்கு கொண்ட பண்பாளர் ஆவார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் எமது வீட்டுக்கு முன் உள்ள தனது காணியில் தனது எதிர்காலத்திற்கென ஒரு வீட்டைக் கட்டி மேல்மாடியை பிறகு முடிப்போம் என்று திட்டமிட்டு அது முடிய முன்னரே எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரது இத் திடீர் மறைவுஎமது சமூக நிறுவனங்களனது முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும் பாதிப்பாகும்.

அவரது மறைவால் துயருரும் அவரது மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்களது துயரில் நானும் எனது குடும்ப உறுப்பினர்கள் கலைமதி, மயூரன், ஆரூரன் ஆகியோரும் பங்கேற்கிறோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

---

**செ. பத்மநாதன் :**

**ஓய்வுநிலை அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் / வவுனியா**

**தலைவர், வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் பல காலம் வாழ்ந்திருக்க வேண்டியவர் தவேந்திரன்

**-சஞ்சயன்**

மரணத்துடனான நெருக்கம் அற்றுப்போகும் போதெல்லாம், "நான் இருக்கிறேன்" என்று மரணம் தன்னிருப்பை எனக்குக் காண்பிப்பது வழமை.

தாமதிக்க முடியாத அழைப்பு மரணம். அது தன் வருகையை அறிவிப்பதில்லை. நாமும் அவ்வறிவிப்பை விரும்புவதில்லை. அதனால்தான் அது எப்போதும் அதிர்ச்சியைத் தந்துகொண்டே இருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன் மரணத்தை வலிந்து வலிந்து அழைத்த தோழனையும் பெற்றிருந்தேன். மரணம் வலிந்து அழைத்துக்கொண்ட தோழமையையும் இப்போது பெற்றிருக்கிறேன்.

காலம் நியாயமற்றது. நிராதரவான, கையறு நிலை உணர்வைத் தரக்கூயது மரணம். வாழ்வின் வலிமிகுந்த கணங்களும் அதுதான். அவற்றைக் கடந்துகொள்ளும் வரையில் அது மிகவும் கனதியானது.

"இதுவும் கடந்துபோகும்..." என்பதுதான் பெரும் ஆறுதல்.

ஒஸ்லோவுக்கு குடிபெயர்ந்த காலத்தில் நண்பர்கள் என்று எவரும் இருக்கவில்லை. 2013ஆம் ஆண்டு நோர்வே தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வொன்றில்தான் முதன் முதலாகத் தவேந்திரனைச் சந்தித்தேன்.

மனிதர்களிடம் கண்ணுக்குத் தெரியாதவொரு அலைவரிசை இருக்கிறது என்று நம்புபவன் நான். அவ்வலைவரிசை எனது மனதின் அலைவரிசையுடன் இணையவில்லை என்றால், அதனை மனது உடனேயே உணர்ந்துகொள்ளும். நானும் அதற்கேற்றவாறு நடந்துகொள்வேன். காலத்திடம் விழுந்தெழும்பிக் கற்றுக்கொண்ட பாடம் இது.

தவேந்திரனைப் பார்த்தவுடனேயே பிடித்துப்போயிற்று. கனிவான முகமும், சிநேகமான சிரிப்பும், பேரமைதியுடைய தன்னடக்கமும் கொண்டவர். அதிகம் பேசமாட்டார். ஆயிரம் முட்டையிட்ட ஆமையைப்போன்று ஆர்ப்பாட்டமில்லாத, உன்னதமாக மனம் அவருக்கிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு, காலம் தன் வலையைப் பின்னியிருந்தது. வாழ்வு எம்மிருவரையும் பல ஆண்டுகள் இணைக்கப்போகிறது என்பது புரியாமல் முதலாவது நாளே இருவரும் அதிகம் உரையாடிக்கொண்டிருந்தோம்.

எம்மை இணைப்பதற்குக் காலம் போடும் இன்னொரு புதிராக, 2013 இல் நான் இடம்பெயர்ந்தபோது, அது தவேந்திரனின் வீட்டுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. அதுமட்டுமல்ல, எனது மகள்களின் வயதில் அவரது இரண்டு மகள்கள் இருந்தார்கள். நான் என் குழந்தைகளைப் பிரிந்து மன அயர்ச்சியுடன அலைந்த நாட்களில், தன் குழந்தைகளை, என் குழந்தைகள்போல் கண்டு, பேசி, உரையாடி, விவாதித்து, தனகி, விளையாடி, வழிகாட்டி மகிழ்ந்திருக்க அனுமதித்தவர் அவர்.

தனிப்பட்ட முறையில் நாம் இருவரும் வெவ்வேறு திசையில் பயணிக்கும் பயணிகள். இருவருக்கும் தொடர்பே இல்லை என்றே சொல்லவேண்டும். அவரது பொழுது போக்குகளில் எனக்கு ஆர்வம் இல்லை. கலை, இசை, தொழில்நுட்பம், வாகனம் திருத்துதல், கணினியில் தொழில்நுட்ப வரைபுகளைச் செய்தல், வீட்டைத் திருத்துதல் என்று பல்துறை ஆர்வலர் அவர்.

எனது பொழுதுபோக்குகளான வாசிப்பு, புகைப்படக்கலை, நடை ஆகியவற்றில் அவருக்கு ஆர்வம் இல்லை.

ஆனால், கடந்த ஒன்பது வருடங்களில் நாம் சந்தித்துக்கொள்ளாத நாட்களை இலகுவாக எண்ணிவிடலாம். இருவருக்கும் தன்னார்வலச்செயற்பாடுகளிலும் சமூகம் சார்ந்த மற்றும் தாயகம் சார்ந்த நடவடிக்கைகளில் இருந்த ஆர்வமுமே எம்மை நண்பர்களாக்கி இயக்கியது.

நானோ கோபத்தின் உன்பிறப்பு. அவரோ சாந்தத்தின் மறுவடிவம். நான் சினத்தின் உச்சியில் நின்று காட்டுக்கத்து கத்தியபொழுதிலும், நாம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டபொழுதிலும் நட்பினை ஒருபோதும் உதறித்தள்ளாதவர்.

2013 தொடக்கம் தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகள் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கி வந்திருக்கிறோம். தலைவராகவும், உப தலைவராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும் தமிழ்ச் சங்கத்தின் இன்றைய வளர்ச்சியில் தவேந்திரனின் பங்கைத் தவிர்த்துவிட்டுப் பேசவே முடியாது. அத்தனை பெரும் உழைப்பைக் கொடியிருக்கிறார் அவர். அவரது அர்ப்பணிப்பு, செயற்பாடுகள், கரிசனம், செலவிட்ட நேரம், உழைப்பு ஆகியவற்றை அறிந்தவர்களுக்கு இது நன்கு புரியும். அதிலும், மற்றையவர்களை விட நான் அருகிருந்து கண்டிருக்கிறேன்.

அவர் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர். அரியாலை மக்கள் மன்றம் - நோர்வே, அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் - நோர்வே ஆகிய நிறுவனங்களை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். சர்வதேச ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும், Asker og Bærum தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும், நிர்வாக உறுப்பினராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கிறார். இவை தவிர, தாயகத்தில் இயங்கும் பல நிறுவனங்களின் திட்டங்களுக்கு அளவற்ற பொருளுதவியும், தன்னாலான பங்களிப்பையும் இறுதிவரை செய்து வந்துள்ளார்.

விமானத் தொழில்நுட்பத்துறையில் Hydraulic பகுதியில் சிறப்புத்தேர்ச்சி பெற்று, Hydraulic பொருட்களுக்கு பிரபல்யமான Parker Hannifin நிறுவனத்தில் பல ஆண்டுகளாக உயர் தொழில்நுட்ப அதிகாரியாகத் தொழில்புரிந்தவர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் Hydraulic துறைக்கு பயற்சி அளிப்பதற்கான பல உயர்தொழில்நுட்ப இயந்திரங்களை சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு அனுப்பியிருந்ததோடு, தாயத்திற்குச் செல்லும்போது பல்கலைக் கழகத்தில் பயிற்சிப் பட்டறைகளையும், தொழில்நுட்ப அறிவுப்பரிமாற்றங்களையும் செய்திருக்கிறார்.

நூலக நிறுவனத்தின் "ஊர் ஆவணப்படுத்தல்" திட்டத்தின் கீழ் அரியாலையை ஆவணப்படுத்தும் திட்டத்திற்கு உதவிய அனைவரையும் அறிமுகப்படுத்தி, அத்திட்டத்தினைச் சாத்தியமாக்க உதவியவர்.

குடும்பத்தைவிட சமூகத்தைப்பற்றி அதிகம் சிந்தித்தவர் என்பேன் நான். கடந்த ஒன்பது வருடங்களாக ஏறத்தாழ தினமும் மாலைநேரங்களில் பல மணிநேரங்களை நாம் ஒன்றாகவே கழித்திருக்கிறோம். அப்பொழுதுகளில் பொதுவேலைகள், தன்னார்வலத் தொண்டுகள், எமது கனவுத்திட்டங்களைப்பற்றியே அதிகம் பேசியிருப்போம்.

கடந்த வருடத்தின் பனிக்காலத்தின் இறுதியில் பூனையின் கால்களுடன் நோய்மை அவரிடம் வந்திருந்ததை எவரும் அறிந்திருக்கவில்லை. தெரிந்த அறிகுறிகளும் பாரதூரமானவையாகத் தெரியவில்லை. அது விதியின் விளையாட்டு அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

இலைதுளிர் காலத்தின் ஒருநாள் மாலைவேளையின்போது, "சஞ்சயன், உடன் வரமுடியுமா?" என்றார். அவர் அழைத்த சற்று நேரத்தில் நாம் கடற்கரையோரமாக நடந்துகொண்டிருந்தோம்.

"புற்றுநோய் கண்டிருக்கிறது. குழந்தைகளுடன் உரையாடவேண்டும்..." என்றார்.

"இல்லை, வேண்டாம். புற்றுநோய்க்கு நோர்வேயில் சிறந்த மருந்துகள் உண்டு. குழந்தைகளை வீணே பயப்படுத்தவேண்டாம்" என்று பின்னர் இருவரும் தீர்மானத்துக்கொண்டோம்.

மென்மையான மனம் கொண்டவரால் இத்தனை பாரதூரமான செய்தியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நோய்மை கொள்ளும் மனிதர்கள் எல்லோரும் பெரும் மனச்சுமைக்கும், மனச்சோர்வுக்கும், அந்தரிக்கும் மனநிலைக்கும் உள்ளாகிறார்கள். எந்த மனிதனுக்கும் தனக்குத் தீராப் பெருநோய் கண்டிக்கிறது என்பதை உணர்ந்து, அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை என்றே நம்புகிறேன். எப்போதும் நம்பிக்கை என்ற மெல்லிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழையைப் பற்றிக்கொண்டே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவரின் மன அந்தரிப்பினைத் தீர்ப்பதற்கான உரையாடலுக்காக "புற்றுநோய் கண்டிருக்கிறது, சஞ்சயன்" என்று அவர் கூறிய நாளில் மாலை நேரம் நண்பர் பாஸ்கரனின் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தேன். பாஸ்கரன் புற்றுநோய்வாய்ப்பட்டிருந்தவர். இப்போது முற்றிலும் குணமாகி இருப்பவர். மருத்துவத்துறையில் உளவளத்துறைப் பகுதியில் தொழில்புரிபவர்.

தவேந்திரன் நோயுற்ற நாளில் இருந்து அவரின் இறுதிக் கணம்வரை கரிசனை, தோழமை, வாஞ்சை, அறிவுரைகள், வழிகாட்டல்கள்... என்று அவர் காண்பித்த மனிதநேயமும் தோழமையும் எனக்குப் பலதையும் கற்றுத் தந்திருக்கின்றன. உங்களைத் தோழணைக்கிறேன் பாஸ்கரன். மிக உன்னதமான மனித மனம் உங்களிடம் இருக்கிறது.

புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கான மருந்துகள் கொடுக்கப்பட்டன. உடற்பயிற்சி செய்யுமாறு கிடைக்கப்பெற்ற கட்டளைக்கு ஏற்ப, தினமும் நாம் உடற்பயிற்சிசெய்தோம். ஒரு வேளை நடப்பதற்கே தயங்கும் தவேந்திரன், ஒரு நாளைக்கு இருமுறை அதிக தூரம் நடந்தார்.

இளவேனிற்காலத்தின்போது நடைபெற்ற வைத்தியப் பரிசோதனையில் புற்றுநோய் பாதியாகக் குறைந்திருக்கிறது என்ற செய்தியைக் கேட்ட நாளில், அவர் புதிய மனிதராக மாறியிருந்தார். மனஅயர்ச்சி அகன்று, பெரும் உற்சாகம் குடிபுகுந்திருந்தது.

இளவேனிற்காலம் மகிழ்ச்சியாகவே கழிந்தது. தனது படகில் அதிக நேரத்தைக் கழிக்கவே அவர் விரும்பினார். நண்பர்களுடன் கடற்பயணங்களை மேற்கொண்டு வந்தார்.

இளவேனிற்காலத்தின் இறுதியில், மீண்டும் நோய் முற்றத்தொடங்கியிருக்கிறது என்ற செய்தி கிடைத்தது. அவர் மெலிந்துகொண்டே சென்றார். உடலில் மாற்றங்கள் தெரிந்தன. இந்நாட்களில் குழந்தைகளுடன் நோய்பற்றி உரையாடினார். அப்போதும் நான் மீண்டு வந்துவிடுவேன்... என திடமாகவே நம்பியிருந்தமையினால், நோய்பற்றி மற்றையவர்களுடன் பேச அவர் விரும்பியிருக்கவில்லை.

புதிய, கனதியான மருந்துகள் உட்செலுத்தப்பட்டன. அவற்றில் ஒன்று அவருக்கு ஒவ்வாமையைக் கொடுத்தது. அதன் காரணமாக வேறு மருந்துகள் கொடுக்கப்பட்டன.

கடந்த ஒன்பது வருடங்களாக எனது நத்தார் தினம் தவேந்திரனின் குடும்பத்தவருடனேயே கழிந்திருக்கிறது. இம்முறையும் அழைத்திருந்தார்.

நோயின் தாக்கமும் மருந்துகளின் கனதியும் அவரிடம் இருந்த சக்தியை உறுஞ்சிவிட்டிருந்தது. அவர் படுக்கையில் படுத்திருந்தபடி அரியாலையில் திட்டமிடப்படும் ஒரு கடற்கரைத்திட்டமொன்றுபற்றிப் பேசினார். வேறு பல திட்டங்களும் அவரிடமிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தவர்கள் குழந்தைபோல் அவரைத் தாங்கிக் கொண்டனர். நண்பர்கள் சிலருக்கு நோய்மைபற்றி அறியத்தந்தார்.

புத்தாண்டு பிறந்தது. அன்றும் அவருடன் இருந்தேன். அதன்பின்னரான நாட்கள் சீட்டுக்கட்டு சரிவதுபோன்ற நாட்களாயின. வீடும் வைத்தியசாலையுமாக மாறி மாறிச் சென்று வந்து கொண்டிருந்தார். உடல்நிலை மோசமடைந்தது. நண்பர்களுக்குச் செய்தியை அறியத்தந்தோம்.

இரண்டு நாட்களுக்கு முன் வைத்தியசாலையில் அவரின் இளைய மகளுடன் அவருகே நின்றபடி "தவேந்திரன்" என்றேன். சில கணங்களின் பின் கண்களைத் திறந்து பார்த்து "சஞ்சயன்" என்றபடியே கையை நீட்டினார்.

அருகே உட்கார்ந்து கையைப்பற்றிக்கொண்டேன். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மகள் அழுதாள். நானும் அழுதேன். அவர் கண்களை மூடிக்கொண்டார். ஓரிரு வார்த்தைகள் தொடர்பின்றி வந்தன. நினைவுக்கும் கனவுக்கும் இடையில் அக்கணம் நடமாடிக்கொண்டிருந்தார்.

அன்று வீடுவந்தபின் பாஸ்கனுக்குத் தொலைபேசியை எடுத்து, "ஏதேனும் அதியசங்கள் நடந்து சுகம் வருவதற்குச் சந்தர்ப்பம் உண்டா?" என்றேன். அப்போது வரையிலும் மீண்டு வந்துவிடுவார் என்ற நம்பிக்கை என்னிடமிருந்தது.

"மனதைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள்..." என்று பாஸ்கரன் ஓரிரண்டு மாதங்களாகவே சொல்லி வந்திருந்தவர், அன்று "இல்லை, சஞ்சயன், அதிசயங்கள் நடைபெறும் காலம் கடந்துவிட்டது" என்றார்.

மறுநாள் நண்பர்கள், உறவினர்கள் வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். மாலைநேரம் வேலை முடிந்ததும் செல்வது என்று திட்டமிட்டிருந்தேன்.

அற்புதமான, மனிதநேயம் கொண்ட, தன் சமூகம்மீது பெரும் பற்றையும், செயலையும் காண்பித்த, முன்னுதாரணமான மனிதன் விடைபெற்றுக்கொண்ட செய்தி வந்தது.

காலம் பரிசளித்த அன்பான, பண்பான மனிதர்களில் எங்களுக்கு முக்கியமானவராகியிருக்கிறார் தவேந்திரன்.

---

**சஞ்சயன் செல்வமாணிக்கம் :**

***பத்தி எழுத்தாளர் (blogger). சமூக ஆர்வலர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவேந்திரன் (1962 - 2022)
# ஒரு தலை சிறந்த மானுடனின் இழப்பு

-என்.சரவணன்

***"1883-ம் ஆண்டு மார்ச் 14-ம் தேதி பிற்பகல் இரண்டே முக்கால் மணிக்கு நம்மிடையே வாழ்ந்த மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இம்மகத்தான மனிதருடைய பிரிவினால் ஏற்பட்டிருக்கின்ற இடைவெளியை நாம் சீக்கிரமாகவே உணருவோம்."***

இது கார்ல் மார்க்ஸ் இறந்தபோது அவரது உயிர் நண்பர் ஏங்கெல்ஸ் லண்டன் ஹைகேட் இடுகாட்டில் ஆற்றிய உரையின் தொடக்கம்.

இன்று நாமும் ஒரு சிறந்த நண்பனை இழந்து தகித்துக் கொண்டிருக்கிறோம். கார்ல் மார்க்ஸ் ஒரு சிந்தனையாளர் எனவே அவர் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார் என்று ஏங்கெல்ஸ் கூறியது சரி. நமது தவேந்திரன் ஒரு களச் செயற்பாட்டாளர். காலம் முழுவதும் திட்டங்களை மட்டுமே தீட்டிக்கொண்டிருந்தவர்கள் திடீர் என்று நம்மிடையே இருந்து விடைபெற்றுச் சென்ற சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம்.



அடிக்கடி செல்லும் கொல்சோஸ் மலை : தவேந்திரன், சரவணன், சிவபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



தவேந்திரன் அப்பேர்பட்ட வாய்ப்பேச்சு வீரர் அல்ல. அவர் நேரடியாக ஒரு செயல் வீரர். ஓயாத செயல் வீரர். தன்னை 'மேடைக்கு அழைக்கத் தேவயில்லை; திரைக்குப் பின் இருந்து இயக்குங்கள்' என்று நேரடியாகவே சொல்பவர்.

ஏங்கெல்ஸ் மார்க்சின் இழப்பைப் பற்றிக் கூறியது போல "இம்மகத்தான மனிதருடைய பிரிவினால் ஏற்பட்டிருக்கின்ற இடைவெளியை நாம் சீக்கிரமாகவே உணருவோம்.". இந்த நாட்களில் எங்கெங்கும் அவரை அந்த இடைவெளிகளுக்குள் தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

***

என் இனிய நண்பர் தவேந்திரனின் இழப்பால் சொல்லனா வேதனையில் மூழ்கியிருக்கிறேன்... இருபத்தொரு ஆண்டுகால உறவு. எனது முதற் தர நண்பர். அவர் இல்லையென்றால் எனக்கு என்ன நேர்ந்திருக்குமோ என்று நான் நினைத்ததுண்டு. எனது வளர்ச்சியில் அத்தனை பங்கு கொண்டவர்.

சுமார் முதல் பத்தாண்டுகள் நாங்கள் இருவரும் வாரத்தில் தொடர்புகொள்ளாத நாட்கள் குறைவு. இருவருமே சொந்தக் காரியங்களுக்காக தொடர்புகொண்டது மிக மிக சொற்பம். பொதுக் காரியங்களை இரவு பகலாக மேற்கொண்ட காலம் ஒன்று இருந்தது. பொதுப் பணிகளில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களின் காரணமாக நான் அதிலிருந்து சற்று ஒதுங்கி தூரச் சென்று என் எழுத்தில் முழுக் கவனத்தையும் குவிக்கத் தொடங்கினாலும், அவர் இன்னும் அதிகமாக பொதுக் காரியங்களில் ஈடுபட்டிக்கொண்டே இருந்தார்.

எந்தவொரு பொதுப் பணிகளிலும் தன்னை முதன்மைப்படுத்தும் நபர் அல்ல... ஒருபோதும் தற்பெருமை, சுயநலம், சுயவிளம்பரம் அற்ற ஒரு மனிதர் அவர். வெற்றிகரமான பணிகளுக்கு பின்னால் அவர் இருப்பார். பின்னால் இருந்தபடி அதன் வெற்றியைக் கொண்டாடுவார். தனது பாத்திரம் இது என்று உரிமை கோரமாட்டார். அந்த வெற்றிகளுக்கு சொந்தம் கொண்டாட மாட்டார்.

திரையின் பின்னால் இருந்து நன்மையை செய்து மற்றவர்களின் மகிழ்ச்சியிலும், வெற்றியிலும் இன்பம் காணும் மனிதர்களைக் காண்பது அரிது. இந்த விடயத்தில் தவேந்திரனுக்கு நிகராக வேறெவரையும் நான் கண்டதில்லை.

நோர்வே - சன்விக்கா பகுதியில் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கியதிலும், அதன் பாடசாலையை உருவாக்கி வழிநடத்தியதிலும் முக்கிய பங்கு அவருக்குண்டு. 2001 இல் என்னையும் அதன் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி என்னை மீண்டும் என் கணினி துறைசார்ந்த ஆசிரியர் பணியை மேற்கொள்ள உந்தினார்.கணினி வகுப்புகளை நடத்தத் தொடங்கிய போது அவரும் ஒரு மாணவர்களில் ஒருவராக என்னிடம் கற்றார். அவரின் துணைவி, பிள்ளைகளும் என்னிடம் கற்றார்கள். எனக்கு வகுப்பறைகளை ஒழுங்கு செய்வது, என்னை வகுப்புகளுக்கு ஏற்றி இறக்குவது என அவர் என் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு அந்த நன்மைகளை பெற்றுக்கொண்டுத்தார்.

அதன் பின்னர் அந்த சங்கம் அரசியல் காரணங்களுக்காக பிளவுபட்ட வேளையில் நோர்வேயிலேயே 'இங்கு மட்டும் தான் அரசியல் பின்னணி இல்லாமல் ஒரு தமிழ் கல்விக் கூடமும், சங்கமும் எஞ்சியிருக்கிறது. அதை பாதுகாக்கவேண்டும்' என்று விடாப்பிடியாக இருந்து என்னையும் அதில் முக்கிய பாத்திரமேற்கச் செய்ததன் மூலம் அந்த சங்கமும் பள்ளிக்கூடமும் காப்பாற்றப்பட்டது. அந்த சங்கம் அப்படியே முழுக்க விழுங்கப்படுவதில் இருந்து பாதுகாத்ததுடன், பெரிய பிளவைத் தவிர்ப்பதற்காக போராடினோம். கல்வி நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிப்பதற்காக அந்த சங்கத்தில் பல நடவடிக்கைகளை அதிகரித்தோம். அதற்கு காரணமானவர்கள் பலர் இருந்த போதும் தவேந்திரனின் பாத்திரம் சொல்லித் தீராது. அவரது நேரம், உழைப்பு, சக்தி, சிந்தனை, பொருள் என எதையும் அவர் அதற்காகவே செலவிட்டார்.

அச்சங்கத்துக்கு யாப்பு எழுதி முடிக்கும் பணியும் என் தலைமையில் விடப்பட்டது. அதற்கென்று இணையத்தளத்தையும் *(www.abtc.no)*, அதற்கென்று ஒரு பத்திரிகையையும் "ஒன்றியத்தின் குரல்" என்கிற பெயரில் ஆரம்பித்தோம். என்னை அச்சங்கத்தின் தலைமைப் பதவிக்கு கொண்டுவர அவர் ஆவல் கொண்டிருந்தபோதும் நான் கல்வி நடவடிக்கைகளை மட்டும் என்னிடம் பொறுப்பாகத் தந்துவிடுங்கள் என்று கோரி பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தேன். சன்விக்கா சினிமா மண்டபத்தில் நாங்கள் நடத்திய கல்வி மாநாட்டுக்கு வெளிநாடுகளில் இருந்தெல்லாம் கலந்துனர்களையும், வளவாளர்களையும் வரவழைத்திருந்தோம். அவர்களை அழைப்பது, தங்குமிட ஏற்பாடு, அவர்களுக்கு வழங்க வேண்டிய கோப்புகளை அழகாக வடிவமைத்து அச்சு செய்து முடிப்பது, மண்டப ஏற்பாடுகள் என அதிகமான பணிகளை அவரே சுமந்தார். சீடியொன்றில் தமிழ், தமிழ் கற்பித்தல் சார்ந்த நூற்றுகணக்கான ஆவணங்களை இட்டு வருகையாளர்களுக்கு வழங்கலாம் என்ற போது அதை இரவு பகலாக இருந்து பல பிரதிகளை எடுக்கும் பணிகளை அவர் தான் மேற்கொண்டார்.

2000 ஆம் ஆண்டு அவருடன் சேர்ந்து "பறை" சஞ்சிகை தொடங்கிய போது அதன் ஆசிரியர்களில் ஒருவராக அவரை இணைத்துக்கொண்டேன். தனக்கு இந்தளவு எழுத்துப் பணிகள் வராது எனவே தன்னை அதில் இணைப்பதில் அர்த்தமில்லை என்று மறுத்தார். எவரும் எழுத்தாளராக பிறப்பதில்லை. உங்களை எழுத வைப்பது எனது பொறுப்பு, இப்போது சஞ்சிகையைக் கொணர்வதில் பெரும் பங்கை ஆற்றிவருகிறீர்கள்; அதுவே ஆரம்பமாக இருக்கட்டும் என்று அவரின் பெயருடன் தான் பறை சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தோம்.

சுனாமி பேரழிவு வந்தபோது இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக உடனடியாகவே வீடு வீடாக உதவி கேட்டு அழைந்தோம். நல்ல நிலையில் உள்ள பயன்படுத்திய உடைகளையும் வீடு வீடாக சேகரித்தோம். ஜேம்ஸ், தவநாதன், தங்கன், உள்ளிட்ட இன்னும் பல நண்பர்கள் அந்தப் பணியில் தவேந்திரனுடன் இணைந்து கொண்டார்கள். தவேந்திரனின் வீட்டில் தான் இலங்கைக்கு அனுப்புவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கலனும் நிறுத்தப்படிருந்தது. வேகவேகமாக அதனை அனுப்புவதற்கு இரவுபகல் பாராது தலைமை கொடுத்தார்.

*2009* முள்ளிவாய்க்கால் பேரழிவின் போதும் அகதிமுகாம்களில் சிக்குண்டு தவித்த மக்களுக்கு உடனடியாகவே உதவிசெய்யும் பொருட்டு இதுபோன்றே சேகரித்து கொள்கலனை அனுப்பினோம். அங்குள்ளவர்களுக்கு தொடர்ச்சியாக உதவும் பொருட்டு கடனளிப்பு திட்டமொன்றையும், விவசாய நடவடிகைகளுக்கும், மீள்கட்டுமான வேலைகளுக்கு கருவிகளையும், இயந்திரங்களையும் குறைந்த வாடகைக்கு கொடுக்கக் கூடிய ஒரு திட்டத்தை ஆரம்பிப்பதற்காக நண்பர்களுடன் சேர்ந்து *North Aid* என்கிற அமைப்பை உருவாக்கினோம்.

*2008* ஆம் ஆண்டு International Network of Sri Lankan Diaspora (INSD) மாநாட்டை நோர்வேயில் நடத்தினோம். அதன் ஏற்பாட்டுப் பொறுப்புகளிலும் பலவற்றை அவர் சுமந்தார். இலங்கையில் இருந்து அம்மாநாட்டுக்கு இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான *(71* கிளர்ச்சியின் தலைவர்களில் ஒருவர்) பெட்ரிக் பெர்னாண்டோவை தனது சொந்த பொறுப்பில் *(Sponser)* அந்த மாநாட்டுக்கு அழைத்தார்.

எப்போதும் கமராவுடன் திரியும் நான் பல பதிவுகளை ஆண்டு ரீதியாகவும், தலைப்புகளிட்டும் ஒழுங்கு செய்து வைத்திருக்கிறேன். இப்போது அந்தப் படங்களில் அவரைத் தேடுகிறேன். அவரை அதிகளவு காணோம். பெரும்பாலும் படங்கள் எடுக்கின்ற சமயங்களில் நிச்சயம் சீரியஸாக வேறு பணிகளில் இருந்திருப்பார். எப்போதும் திரைக்குப் பின்னால் இருந்து அதிகப் பணிகளை ஆற்றிப் பழகியவர் அல்லவா.

*2009* ஆம் ஆண்டு இலக்கிய சந்திப்பை ஒஸ்லோவில் நடத்திய போது அதன் ஏற்பாட்டுக்குழுவில் அவரையும் இணைத்துக்கொண்டதால் தான் அதை சாத்தியப்படுத்த முடிந்தது. மேலும் அந்த இலக்கிய சந்திப்புக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருந்து எழுத்தாளர் ஆத்மாவை அழைப்பதற்கு அவர் தனது பொறுப்பில் ஸ்பொன்சர் செய்து வந்திறங்கும் வரை சகல பொறுப்புகளையும் செய்து முடித்தார். வெளிநாடுகளில் இருந்து வந்த தோழர்களை அவர் வீட்டில் தான் வரவேற்று ஒரு உணவு விருந்தையும் ஏற்பாடு செய்து அவரது வீட்டிலேயே சிலரை தங்க வைத்தார்.

மீண்டும் 2015 இல் இலக்கிய சந்திப்பை நடத்தியபோதும் அவர் மீண்டும் ஏற்பாட்டுக்குழுவில் தனது பங்களிப்பை ஆற்றினார்.

சதா திட்டங்களைப் போட்டுக்கொண்டே இருக்கும் அபாராமான தூரநோக்குள்ள மனிதர் அவர். அதுபோல அத்திட்டங்களில் பலவற்றை தகுந்தவர்களை அணுகி அவர்களின் ஒத்துழைப்பை பெற்று நிறைவேற்றிவிடும் வினைத்திறன் படைத்தவர் அவர்.

தனது அரியாலை ஊருக்கு அவர் பெரும் பணியாற்றியிருக்கிறார். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தை மையமாக வைத்து பல பணிகளை அவர் நண்பர்களுடன் இணைந்து நிறைவேற்றினார். அப்படி சில நடவடிக்கைளில் என்னையும் இணைத்திருக்கிறார். தனது செலவில் ஒரு கணினி வகுப்புக்கான அறையை அரியாலையிலுள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஒரு அறையை திருத்தி ஆரம்பித்தார். பெரும் பொருட்செலவு உருவாகியிருந்தது. வகுப்புகளை என்னை வைத்துத் தான் தொடக்கினார். ஒன்லைன் மூலம் முதல் கூட்டத்தையும் வகுப்பையும் நானும் அவரும் சேர்ந்து தான் ஆரம்பித்தோம். ஊரில் அதை பராமரிக்காது இல்லாமல் ஆக்கிவிட்டார்கள் என்பது வேறு கதை. ஆனாலும் அரியாலைக்கான வேறும் சில திட்டங்களில் என்னை ஈடுபடுத்தியிருக்கிறார்.

அவ்வமைப்புகளுக்கு யாப்பை எழுதுவது, கூட்டங்களுக்கு அவர் ஆற்ற வேண்டிய உரையைத் தமிழில் தயாரிப்பது, அறிக்கை தயாரிப்பது, அறிவித்தல்கள், விளம்பரங்கள் என அனைத்துக்கும் அவர் என்னை நாடுவார். நிச்சயம் அவரின் நடவடிக்கைகளுடன் நான் மட்டுமல்ல இப்படி பலரும் சம்பந்தப்பட்டிருப்பார்கள். என்னோடு மட்டும் இத்தனை நடவடிக்கை என்றால் மொத்தம் அவர் ஈடுபட்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் எத்தனை என்று உங்களால் ஊகிக்க முடியும்.

பெரும்பாலும் அவர் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்வதாயின் நிச்சயம் அது ஒரு பொது விடயத்துடன் சம்பந்தப்பட்டதாகத் தான் இருக்கும். மற்றும்படி சொந்த விடயங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

***

சன்விக்காவுக்கு நான் குடியேறியபோது எனது முதல் விலாசம் அவரின் வீட்டு விலாசம் தான். சுமார் மூன்று ஆண்டுகள் எனக்கு வரும் கடிதங்கள் அத்தனையும் அங்கே தான் வந்தன. 2013இல் நான் ஒஸ்லோவில் ஒரு வீட்டை வாங்கியபோது பணப்பற்றாக்குறையை அவரிடம் தெரிவித்தபோது உடனடியாகவே எனக்கு உதவி செய்தார். திருப்பி செலுத்த மூன்று வருடங்களாக ஆனது. அதற்காக என்னை அவர் நிர்ப்பந்தித்தது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருவரும் சேர்ந்து பல இடங்கள் திரிந்திருக்கிறோம். பல உல்லாசப் பயணங்கள், நீண்ட நடை, சைக்கிள் ஓட்டம், வசந்தகாலங்களில் அருகிலுள்ள தீவுகளுக்கு சென்று உணவு தயாரித்து உண்பது, அவரின் வீட்டு வளவில் சேர்ந்து சுத்தம் செய்வது, சரிசெய்வது என ஒன்றாக அதிக காலத்தைக் கழித்திருக்கிறோம். அவரும் நானும் சன்விக்கா தமிழ் சமூகத்தினர் மத்தியில் கணினி திருத்தத்தில் நன்றாக அறியப்பட்டவர்கள் என்பதால் பலரும் எங்கள் இருவரையும் தொடர்புகொள்வார்கள். தனியாகவோ இருவரும் ஒன்றாகச் சென்றோ திருத்தி கொடுப்பது அப்போது வழக்கமாக இருந்தது. அதற்காக நாங்கள் ஒருபோதும் பணம் அறவிட்டதில்லை. அதேவளை இருவரும் ஒருவரிடம் இருந்து ஒருவர் அத்துறை சம்பந்தமான நிபுணத்துவத்தை பரஸ்பரம் பரிமாறிக்கொண்டு கற்றுக்கொள்வோம். எங்களை கணினி திருத்துவது தொடர்பான விடயங்களில் புதுப்பித்தே வந்தோம்.

இருவரும் ஒரு கணினி திருத்தும் கடையைத் திறக்கும் திட்டமும் இருந்தது. அது தொடர்பாக ஒரு விளம்பரத்தையும் ஒரு நாள் எழுதினோம். இது வெளிவந்தால் அடுத்த நாள் அதிகாலையில் அவரின் வீட்டு வாசலில் பலர்; நான் நீயென வரிசையில் நின்று ஆரவாரப்படுத்துவதைப் போல கற்பனை செய்துகொண்டு இருவரும் ஒருவரையொருவர் கலாய்த்தோம். இதைப் பல சந்தர்ப்பங்களில் அவர் என்னிடம் நகைச்சுவையாக நினைவு கூர்ந்து சிரிப்பார்.

நான் மீண்டும் ஒஸ்லோவுக்கு இடம்பெயர்ந்ததன் பின்னர் அவருக்கும் எனக்கும் இடையில் நேரடி சந்திப்புகள் குறைந்துபோயின. எங்கள் உரையாடல்கள் தொலைபேசி வழியாகவும், மின்னஞ்சல், குறுஞ்செய்தி வழியாகவும் சுருங்கின. ஒஸ்லோ வரும்வேளையில் அவர் எப்போதாவது வீட்டுக்கு வந்து செல்வார். சில தடவைகள் எங்களைக் குடும்பமாக அழைத்து விருந்து கொடுத்தார். ஈராண்டுகளுக்கு முன்னர் தனது படகில் எங்களை குடும்பமாக அவரின் துணைவி மேகலாவுடன் அழைத்துச் சென்றார்.

இலங்கையில் அவர் தனிப்பட்ட ரீதியில் பெரும் செலவு செய்து முன்னெடுத்த பணிகள் பல அங்குள்ளவர்களின் அக்கறையீனத்தால் தோல்வியில் முடிந்தன. ஆனாலும் அவரின் சோர்வு சில நாட்கள் தான் இருக்கும். அடுத்த திட்டத்துக்கு தயாராகிவிடுவார். யுத்த காலத்தில் அவர் *Excavator* இயந்திரங்களை நோர்வேயில் இருந்து ஏற்றுமதி செய்து ஊருக்கு கொண்டு போய் சேர்த்தார். அப்போது அவர் அதற்காக இலங்கை சுங்கத்துக்கும் பாரிய வரியைக் கட்டினார். விடுதலைப் புலிகளுக்கும் ஏராளமான பணத்தை வரியாக செலுத்த வேண்டி ஏற்பட்டது. ஊரில் அவருக்கு நம்பகமானவர்களிடம் அதை ஒப்படைத்து அங்கே குறைந்த வாடகைக்கு கொடுத்து, காடு மண்டிப்போன வயல்வெளிகளையும் விவசாயத்தையும் மீட்கும் பணிகளுக்கும் உதவுவதே அவரின் திட்டம். கூடவே யுத்தத்தால் இடிந்துபோன கட்டிட எச்சங்களை அப்புறப்படுத்தி மீள் கட்டுமானங்களுக்கு உதவும் என நம்பி அதைத் தொடங்கினார். கடும் நட்டத்தில் அந்தத் திட்டத்தை அவர் கைவிட நேரிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயிலும், மேற்கு நாடுகளிலும் அவர் வியப்பாக காணும் தொழில்நுட்பங்களை எல்லாம் நாட்டில் இவை கிடைத்தால் எப்படி இருக்கும் என்றே சிந்திப்பார். அவர் பணிபுரிந்த துறை *Hydrolic* துறை. இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் *hydrolic* துறை சார்ந்த கற்கை கிடையாது என்பதை அங்கு சென்று அலைந்து தேடி அறிந்து முடிவுக்கு வந்தார். ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அவர் யாழ் பல்கலைக்கழகம் சென்று பொறியியல் பீட மாணவர்களுக்கு அது தொடர்பில் ஒரு உரையாடலையும் செய்தார். இதுவரை *hydrolic* தொடர்பான கற்கைக்கு படங்கள் மூலமும், காணொளி மூலமும் தான் விளக்கமளிக்கப்படுகின்றன என்பதையும் அவர் கண்டுகொண்டார். நோர்வே வந்ததும் தான் பணிபுரியும் கம்பனியிடம் பேசி மில்லியன் பெறுமதியான *Hydrolic* கருவியொன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தனது சொந்தச் செலவில் அனுப்பினார். ஆனால் பல்கலைக்கழகத்தினரின் அசட்டையால் சுங்கத்தினரிடமிருந்து அதை உடனடியாக எடுக்காமல் பல காலம் இழுபறிப்பட்டு அது கிடைக்காமல் போனதாக அறிந்தபோது இந்த மனிதன் எத்தனை ஏமாற்றங்களைத் தான் பொது விடயங்களில் எதிர்கொள்வார் என்று ஆதங்கப்பட்டேன்.

அவர் சேகரித்து வைத்திருந்த சுமார் பதினைந்து லெப்டாப் கணினிகளை எனக்குத் தந்து அவற்றை இல்லாதவர்களுக்கு என்னைக் கொடுக்கும்படி என் மூலம் அனுப்பினார். அவரின் கம்பனியில் வைத்துத் தான் அனுப்புவதற்கான பெட்டியை நிரப்பிக் கட்டினோம்.

சன்விக்காவில் எனக்கு கிடைத்த மோசமான அனுபவங்களால் நொந்து இனி இங்கே எந்த பொதுக் கருமங்களிலும் ஈடுபடுவதில்லை என்கிற முடிவுடன் தமிழ்ச் சமூகத்தின் கண்களில் படாத இடத்தில் வாழவேண்டும் என்று தனித்து ஓரிடத்தில் வாழ்ந்து வந்தேன். எனது இருப்பிடத்தை தவேந்திரன் மட்டுமே அறிந்திருந்தார். என்னை தேடியவர்கள் தவேந்திரனைத்தான் தொடர்புகொண்டார்கள். அவசரமாக தொடர்பு கொள்ள முயற்சித்தவர்களின் விபரங்களை அவர் தான் என்னிடம் சேர்ப்பித்தார். அவருக்கு அருகாமையில் நான் தனியாக வாழ்ந்துவந்த போது அடிக்கடி என்னைத் தன்னுடன் உணவுண்ண அழைப்பார். என் தனிமையைப் போக்கியிருக்கிறார். அவரை ஒரு அப்பாவின் ஸ்தானத்தில் வைத்து நான் பார்த்திருக்கிறேன்.

தனி வீட்டை வைத்திருப்பவர்களுக்கு உள்ள வேலைச்சுமைகளை இங்கு வாழும் பலர் அறிவர். அதைப் பாராமரிப்பதும், சரிசெய்வதும், புதுபிப்பதற்கும் தனி வசதியும், சக்தியும், நேரமும் தேவை அத்தனையையும் செய்து கொண்டு, ஒரு புறம் தொழில், மூன்று பெண் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக கூட்டித்திரிவது என்பவற்றுக்கு மேலாகத் தான் பொது வேலைகளையும் செய்து வந்தார். இதற்கிடையில் பலரும் பல தேவைகளுக்காகவும் அவரைத் தொடர்புகொள்வார்கள். ஒருபோதும் மறுக்காமல் தன்னால் இயன்றதை செய்து கொடுக்க தனது உழைப்பையும் நேரத்தையும், சக்தியையும் கொடுப்பார். அதனால் அவர் எதிரிகளை சம்பாதிக்கவில்லை. ஏராளமானோரின் இதயங்களை வென்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்விக்காவில் பல தமிழ் குடும்பங்களின் இரண்டாந் தலைமுறையினரின் வளர்ச்சியிலும், பண்பாட்டுப் பேணலிலும் திரைமறைவில் தவேந்திரன் என்கிற மாமனிதரின் பங்கு எத்தகையது என்பதை நானறிவேன். அதை எவராலும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

அவரை நோயாளியாக்கியதில் இந்தப் பொதுப் பணிகளுக்கு நிச்சயம் பங்குண்டு என்பது எனது கணிப்பு. அவரை நன்றாக அறிந்ததால் இதனை என்னால் கூற முடியும். பத்தாண்டுகளுக்கும் மேலாக அவர் ஒரு நீரிழிவு நோயாளி. பொது வேலைகளில் அவர் காட்டிய தீவிரத்தின் விளைவாக; நேரத்துக்கு உணவு, நேரத்துக்கு ஓய்வு, நித்திரை எதுவும் அவருக்கு இருக்கவில்லை. தனது மனைவியின் ஆலோசனையையும், கண்டிப்பையும் மீறி மறைவாக பல காரியங்களில் தீவிரமாக ஈடுபடுவார். தன்னைக் கவனிக்காமல் ஓய்வு ஒழிச்சலின்றி அவர் ஆற்றிய பணிகள் அவரின் துணைவியை விட வெளியார்களுக்கே அதிகம் தெரியும்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் காலியில் உள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் வறுமை மிகுந்த தோட்டமொன்றில்; ஒரு பாடசாலையின் கூரைகளும், மதில்களும் இடிந்து விழுந்தபோது அதற்கு உதவி செய்வதற்காக முகநூலில் பதினைந்து நண்பர்களைத் தெரிவு செய்து ஒரு குழுவை உருவாக்கி அவர்களிடம் உதவுமாறு கோரினேன். இரண்டே நாட்களில் ஆறு பேர் உதவியதன் மூலம் இலக்கு எட்டப்பட்டுவிட்டதால்; அத்தோடு நிறுத்திவிட்டு அந்த கட்டிடத்தை திருத்த உதவினோம். உடனடியாக உதவியர்களில் ஒருவர் தவேந்திரன். என்னிடம் தொலைபேசியில் அவர் இன்னொன்றைக் குறிப்பிட்டார். நிதிப் பங்களிப்பை செய்தவர்களின் பட்டியலை நீங்கள் வெளியிட்டபோது அதில் எனது பெயரைத் தவிர்த்திருக்கலாம். அப்படி செய்திருந்தால் அந்தக் குழுவில் இருந்த எனது மனைவியும் உதவியிருப்பார், நான் உதவிவிட்டதால் தானும் கொடுக்கத் தேவையில்லை என்று தன் மனைவி எண்ணியிருக்கக் கூடும் என்றார். மலையகப் பகுதிகளில் கஷ்டப்படுவோர் மீது அவருக்கு அதிக அக்கறை இருந்தது.

சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் எனது தகப்பனார் திடீர் என்று இருந்துபோனார். அப்போது நான் இலங்கையில் இருந்தேன். விரக்தியுடன் இனி நோர்வே திரும்புவதில்லை என்று அங்கே மீள சென்றிருந்த சமயம் தான் அந்த இழப்பு நேரிட்டிருந்தது. இந்த நிலையில் நான் என்ன செய்வேனோ என்று எண்ணி அவர் சில நண்பர்களிடம் பணம் சேர்த்து நான் எதிர்பார்க்காத வேளை எனக்கு அந்த நேரத்தில் கிடைக்கச்செய்திருந்தார்.

என்னோடு தொடர்புடைய அனுபவங்களை மட்டும் தான் நான் இங்கே பகிர்ந்திருக்கிறேன். அவரின் பொதுநல பங்களிப்பில் நான் பகிர்ந்தது மிகச் சிறிய அளவு தான். இதற்கு வெளியில் நான் அறியாதது, அல்லது நான் இங்கே பகிராதது பல. அதை இன்னும் பல நண்பர்கள் நிச்சயம் பகிர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

கடந்த இரண்டாண்டுகளாக எனது உடல் நலம் சற்று மோசமாகி வந்தது. மருத்துவ அறிக்கைகள் சில எனது உடல் – உயிர் பற்றிய சில ஆபத்தான சமிக்ஞைகளை தந்திருந்தன. எனக்கு என்ன நேர்ந்துகொண்டிருகிறது என்பது பற்றி எனது துணைவிக்கு கூட நான் தெரிவிக்காமல் பல மாதங்கள் இருந்தேன். ஆனால் என் நண்பர் தவேந்திரனோடு பகிர்ந்துகொள்ளத் தவறவில்லை. அவர் அதைப் பற்றி அறிந்தவுடனேயே எனது வீட்டுக்கு அவரின் துணைவி மேகலாவுடன் வந்து என்னைப் பார்த்தார். அவருக்கு எதுவும் தெரியும் என்பதை என் துணைவிக்கு அவர்கள் காட்டிக்கொள்ளவில்லை. மிகச் சமீபத்தில் சில சிகிச்சைகளை முடித்துக்கொண்டதன் பின்னர் தான் எனது துணைவியோடு அவற்றைப் பகிர்ந்துகொள்ள முடிந்தது.

***

இறுதியாக அவர் கடந்த ஒக்டோபர் 8ஆம் திகதி என் வீட்டுக்கு வந்தார். ஒரு லெப்டொப் ஒன்றில் பழைய "விண்டோஸ் 7"ஐப் நிறுவ வேண்டும் என்று இருவரும் முயற்சித்தோம். இப்போதெல்லாம் "விண்டோஸ் 7" கிடைக்காது என்பதால் அதை சற்று சிர்மப்பபட்டு தேடி எடுத்து இன்ஸ்டால் செய்தோம். ஒரு கண் தெரியாத மாணவி ஒருவருக்கு அனுப்புவதற்காக அதனைக் கொண்டு வந்திருந்தார். கட்புலனற்றவர்கள் பயன்படுத்துவதற்கென்று ஒரு புரோகிராம் இருப்பதாகவும் அதை புதிய சிஸ்டத்தில் நிறுவ முடியாதென்றும், பழைய விண்டாஸ் 7 இல் தான் அதை நிறுவ முடியும் என்றும் கூறினார். அங்கு இப்படியே அனுப்பிவிட்டால் இதை தயார் செய்வதில் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டுவிடும் என்றும் நாமே அதை முடித்து அனுப்பிவிடுவோம் சரா என்றார். அப்படியே செய்தோம். என் துணைவி தயாரிக்கும் பால்சோறும் கட்டச்சம்பலும் அவருக்கு வெகு பிரியம் அதை இன்னொரு நாள் வந்து சாப்பிடுகிறேன் என்றார். எதையும் உண்ண மறுத்துவிட்டார். காப்பி மட்டும் சற்று குடித்தார்.

அன்று அவருக்கு குரல் அவ்வளவாக வெளியில் வரவில்லை. கொஞ்சம் தொண்டையில் தொற்று என்றும், சரியாகிவிடும் என்றும் கூறினார். உடல் மெலிந்திருப்பதைப் பற்றி என் துணைவியும் கேட்டார். சில சிகிச்சைகளின் காரணங்களால் மெலிந்திருப்பதாகச் சொன்னார். வாசலில் அவரிடம் இருந்து விடைபெற்றபோது "கவனம் சேர" என்றேன். (தனிப்பட கதைக்கும் வேளைகளில் அவர் என்னையும், நான் அவரையும் அன்பின் நிமித்தம் அவ்வப்போது சேர் போட்டு அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தோம்) இரவு வீடு சென்று அந்தக் கணினி பற்றி சில விபரங்களை டெக்ஸ்ட் செய்திருந்தார்.

அதன் பின்னர் ஒக்டோபர் 17 ஆம் திகதி மதியம் 11.49 நாங்கள் இருவரும் இருந்த ஒரு படத்தை எனது முகநூல் தகவல் பெட்டிக்கு அனுப்பியிருந்தார். அவரும் நானும் ஒன்றாக ஒரு படகுப் பிரயாணத்தில் எடுத்த படம் அது.

“Sweet ♥ memories thanks sir”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நான் பதிலுக்கு பதில் அனுப்பியிருந்தேன்.

அது தான் அவர் எனக்கும் நான் அவருக்கும் அனுப்பிய இறுதி செய்திகள். இறுதிப் பரிமாறல். இறுதி விடைபெறல்.

தனது முகநூலில் அவர் இறுதியாக பகிர்ந்த படம் அது தான்.

***

சஞ்சயன் சனிக்கிழமை பின்னேரம் சரியாக 6.50 க்கு எனக்கு தொலைபேசியில் தவேந்திரன் தவறிவிட்டார் என்ற போது அந்த அதிர்ச்சியை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. தவேந்திரன் அப்படித் தவறி ஒரு மணித்தியாலத்தைக் கடந்திருந்தது.

சஞ்சயனிடம் மேலதிகமாக என்ன கேட்பது என்றும் தெரியவில்லை. அப்படியே குளிர் மேலிட இருட்டாகிவிட்டேன். என் படுக்கையறைக்குச் சென்று அழுதுகொண்டிருந்தேன். மனைவி வந்து என்னைத் தேற்றிக்கொண்டிருந்தார். என் சிறு குழந்தைகள் இருவரும் வந்து என் கண்ணீரை துடைத்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எவர் கேட்கும் கேள்விக்கும் என்னால் எதுவும் கதைக்க முடியாமல் இருந்தது. எட்டு நிமிடங்களின் பின் மீண்டும் சஞ்சயனுக்கு தொலைபேசி செய்து மேலதிக சுருக்க விபரங்களை அறிந்துகொண்டேன். வீட்டில் அவரின் உறவினர்கள் நிறைந்திருப்பார்கள். இன்று இரவு நீங்கள் போகத் தேவையில்லை. நாளை செல்லுங்கள் என்றார்.

ஆனால் அவரைப் பற்றிய நினைவுகளையும், அவர் இனி இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. சில நிமிடங்களில் ரவி மாஸ்டர் என்னோடு தொடர்புக்கு வந்தார். அவர் வேறெதையும் நீட்டவில்லை. தவேந்திரனைப் பார்க்கச் செல்கிறேன். ரெடியாக இருங்கள் இன்னும் சில நிமிடங்களில் அங்கு வந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறேன் என்றார்.

பயணித்துக் கொண்டிருந்தவேளை இருவருமே வெறுமையாக உளறிக்கொண்டிருந்தோம். போகும் வழியிலேயே சஞ்சயனிடம் இருந்து அழைப்பு நீங்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு வராதீர்கள் நேராக வீட்டுக்கு செல்லுங்கள். இங்கே எவரையும் விடமாட்டார்கள். நாங்களும் அப்படியே முடிவெடுத்தோம். ஆனால் அந்த ஆஸ்பத்திரியைத் தாண்டித் தான் தவேந்திரனின் வீட்டை அடைய வேண்டும். இடையில் ஆஸ்பத்திக்கு சென்று முயற்சி செய்து பார்ப்போம் என்று முடிவெடுத்தோம். அங்கே சென்றிருந்தபோது ஏற்கெனவே பலர் வந்து ஆஸ்பத்திரிக்கு வெளியில் குளிரில் காத்துக்கொண்டிருந்தார்கள். முகமூடிக் கவசமணிந்திருந்த பலரை யார் என்று அடையாளம் கூட காண முடியாமல் இருந்தது. பிரதான வாசலின் அருகில் இருந்த ஒரு தாதி அனைவரையும் வெளியே செல்லுமாறு கட்டளையிட்டுக்கொண்டிருந்தார். உள்ளே ஏற்கெனவே சுமார் பதினைந்து பேர் இருந்தார்கள். ஒருவர் தவேந்திரனுக்கு மாற்று வேஷ்டி கொண்டு வந்து கொடுத்ததை உள்ளே இருந்தவர் எடுத்துக்கொண்டு போனார்.

எங்களுக்கு முன் வந்தவர்கள் சிலர் இனி எப்படியும் எவரையும் உள்ளே அனுமதிக்கப் போவதில்லை நாங்கள் கிளம்புகிறோம் என்று திரும்பினார்கள். இன்னும் சிலர் வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள். குளிரிலும், சோகத்திலும் எங்கள் நெஞ்சைக் கட்டிபிடித்தபடி மேலே தெரிந்த அஸ்பத்திரி ஜன்னல்களை பார்த்துக்கொண்டிருந்தோம். சுமார் ஒரு மணித்தியாலம் கழித்து தவேந்திரனின் சகலன் ரமேஷ் இருவர் வாருங்கள் என்று வேறு வழியில் அழைத்தார். நாங்கள் வேகமாகப் படிகளைத் தாண்டி ஏறி நுழைந்தோம்.

உள்ளே அறையில் தவேந்திரன் மூச்சு முடிந்த நிலையில் கண்டேன். அருகில் அவரின் துணைவி மேகலா அவரின் தலையருகில் இருந்த கதிரையிலும் இளைய மகள் திஷாந்தி காலடியில் இருந்த கதிரையிலும் சலனமில்லாமல் உறைந்திருந்தார்கள்.

என் நண்பர் அல்ல அங்கே இருப்பது. மிகவும் மெலிந்த உடலைக் கொண்ட இன்னோர் மனிதர். அடையாளம் காண முடியாத அளவுக்கு அவர் மெலிந்திருந்தார். நெஞ்சு வெடிப்பதைப் போலிருந்தது. அவரின் உருவத்தில் அவரை விரித்துப் பார்த்தபடி தேடிக்கொண்டிருந்தேன். தேம்பித் தேம்பி அழ மட்டுமே முடிந்தது. இனி என் நண்பர் இல்லை. அவர் இல்லாத பொதுவுலகை இலகுவாக வரவேற்க முடியவில்லை. ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

என்னோடு வந்த ரவி மாஸ்டர் ஒரு சில செக்கன்கள் மட்டுமே தவேந்திரனைப் பார்த்தார். உடனடியாகவே திரும்பிச் சென்று ஜன்னலைப் பார்த்தபடி தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்.

மற்றவர்களுக்கு இடம் கொடுத்து நாங்கள் அங்கிருந்து தவேந்திரனின் வீட்டுக்கு திரும்பினோம். தவேந்திரனின் வீட்டில் அவரின் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே இருந்தார்கள். நாங்கள் இரவு 12.30 வரை அங்கிருந்தோம்.

அந்த வீட்டில் சில நிமிடங்கள் அந்த வீட்டுச் சுவர்களையும் மேசையையும் தொட்டுத் தொட்டு பார்த்தேன். அவரும் நானும் சந்திக்கும் வேளைகளில் கதவை மூடிக்கொண்டு உரையாடும் அவரின் கணினி அறையை கதவின் ஜன்னல் வழியே எட்டி; வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அந்த அறை இருட்டை மட்டுமே அன்று பதிலாகத் தந்தது. அங்கு வந்திருந்த நண்பர்களின் கதைகளில் சில நிமிடங்கள் கவனம் செல்லவில்லை. எப்போதும் அமரும் வீட்டின் வராந்தாவிலுள்ள சாய்விருக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கெல்லாம் தவேந்திரன் உலாவிக்கொண்டிருந்த தருணங்கள் காட்சிகளாக வருவதும் போவதுமாக இருந்தன. இந்த வீட்டுக்கு குடியேறிய காலத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக அதனை மாற்றி எடுக்கும் சந்தர்ப்பங்கள் பலவற்றின் போது நானும் இருந்திருக்கிறேன்.

கடைசி மகள் "துத்து" வளர்த்த அவளுக்கு பிரியமான எலி மரணித்த போது அதை முறையாக அடக்கம் செய்ய நான் இப்படி ஒரு குளிர்காலத்தில் தான் வளவில் பனியகற்றி, குழி தோண்டி புதைத்து அதற்கு ஒரு அடையாளமிட்டோம். வீட்டின் கூரையோடு ஒட்டிய மாடியை குழந்தைகளின் பொழுதுபோக்கிடமாக மாற்றுவதற்கு அவரோடு சேர்ந்து நான் தான் திட்டமிட்டேன். அதன்படி விளையாட்டிடம், சினிமா பார்க்கும் ஏற்பாடு, லைட் செட்டிங் எல்லாமே திட்டமிட்டது நினைவு. பிள்ளைகளுடன் விளையாடுவதற்கு ஒரு காலத்தில் நிறைய நேரம் செலவிட்டிருக்கிறேன். மூத்த மகள் ஜீவந்தியின் குரலிசை அரங்கேற்றத்தின் போது பல மாதங்கள் தவேந்திரனோடு அலைந்து திரிந்திருக்கிறேன். இங்கு வைத்துதான் அந்த அரங்கேற்ற மலரையும் செய்து முடித்தேன். எங்கெங்கும் அந்த வீட்டில் நினைவுகள் தேங்கிக் கிடந்தன.

தவேந்திரன் இனி இல்லை என்பது மாபெரும் வெறுமையைத் தருகிறது. இனி தொடர்புகொள்ள மாட்டார் என்பதை ஏற்க மறுக்கிறது. அவரின் குடும்பத்தினருக்கு அதனைத் தாங்கும் சக்தியைக் காலம் தரட்டும்.

என் அப்பாவின் இழப்புக்குப் பின்னர் அதிகம் நான் இடிந்து போயிருப்பது நண்பர் தவேந்திரனின் இழப்பில் தான்.

அவர் இந்த உலகத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டதை நாம் இனி நம்பத்தான் வேண்டும். அவர் தான் விரும்பிச் செய்ய வேண்டிய பலவற்றையும் செய்து முடித்த பின்பே இந்த ஓய்வை பெற்றிருக்கிறார்.

அவரைச் சூழ இருந்த இந்த உலகத்துக்கு அவர் கடன்படவில்லை.

இனி போதும் ஓய்வு கொள்ளுங்கள் நண்பனே.

---

**என்.சரவணன் - ஊடகவியாளாளர், எழுத்தாளர், அரசியல் ஆய்வாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராது போல் வந்த மாமணி

-த.சர்வேந்திரா

மனிதர்கள் எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்கின்றனர் என்பதனை விட அவர்கள் வாழந்த காலத்தில் எத்தகு வாழ்வினை வாழ்ந்தார்கள் என்பதும், தாம் வாழும் சமூகம் பயனுற எப்பணி புரிந்தார்கள் என்பதுமதான் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதனை நாம் உணர்ந்திருக்கிறோம்.

கடந்த மாதம் 25.01.2022 திகதி மாலை நண்பர் தவேந்திரனுக்கு கனத்த இதயத்துடன் இறுதி மரியாதை வணக்கத்தை செலுத்திய போது இந்த எண்ணம்தான் மனதில் எழுந்தது. இன்னும் பல வருடங்கள் வாழ்ந்து மானுடம் செழிப்புற பற்பல பணிகள் ஆற்றியிருக்க்க வேண்டிய நண்பர். இயற்கையின் கணக்கு அதற்கான வாய்ப்பை நம் சமூகத்துக்குத் தரவில்லை. அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தியபோது மனதில் பெருங்கவலை எழுந்தது. அவரைக் கைகூப்பி வணங்கினேன். 'எல்லாரும் வந்திருக்கிறார்கள் பாருங்கோ'என மனைவி மேகலாவின் அழுகுரலுடன் எழுந்த வேண்டுதல் மனதை உருக்கியது. தவேந்திரனின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி தமிழர் சமூகத்துக்கே பேரிழப்பு என்பதனை அவருக்கு இறுதி வணக்கம் செலுத்த அணியணியாக வந்த மக்கள்கூட்டம் உறுதி செய்தது. 26.01.2022 அன்று அவரது இறுதி நிகழ்வு கொரோணா விதிமுறைகளுக்குகமைய ஒஸ்லோவில் 50 பேர்களுடன் நடைபெற்றது. கொரோனா காலத்தில் இன்னுமொரு நண்பரை இறுதி நிகழ்வுக்குச் செல்லாமலே வழியனுப்பி வைத்தோம்.

தவேந்திரனும் நானும் ஊரில் ஒரே வீதியில் பிறந்து வளர்ந்தவர்கள். அவரது வீட்டுக்கும் எனது வீட்டுக்கும் 200 மீற்றர் இடைவெளி இருக்கும். அவருக்கும் எனக்குமிடையிலான நட்பு பெரிதும் பொதுப்பணி சார்ந்தே இருந்தது. வளர்ந்தது. இதனை தனிப்பட்டரீதியில் நெருங்கிய நட்பு எனக் கூறமுடியாது. இதனால் எமக்கிடையே ஒரு மரியாதை கலந்த உறவு எப்போதும் இருக்கும். அவரை (அவனை என்று என்னால் அழைக்க முடியவில்லை) நான் மதித்தேன். என்னை அவர் மதித்தார். இப் பரஸ்பர மரியாதை எமது நட்பின் அடித்தளமாக இருந்தது. தவேந்திரன் பொதுவிடயம் குறித்து என்னிடம் கேட்ட எல்லா விடயங்களையும் என்னால் இயன்றவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாச் செய்து கொடுத்தேன். எதனையும் மறுத்ததில்லை. இப்போது அவர் இன்னும் பலவற்றைக் கேட்டிருக்கலாமே என்ற எண்ணம்தான் மனதில் எழுகிறது.

பொதுப்பணி சார்ந்து தாயகத்திலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் குறைந்தது *1000* செயற்பாட்டாளர்களோடாவது நான் கூடிச் செயற்பட்டிருக்கிறேன். இவர்களில் தவேந்திரன் தனித்துவமான ஒருவர். நேர்த்தியாகக் கருமங்களை ஆற்ற வேண்டும் என்பதில் சிரத்தை கொண்டவர். ஊரினதும் தேசத்தினதும் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவர். திட்டமிட்டு வேலைகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த முனைப்புக் கொண்டிருந்தவர். அதிகம் பேசமாட்டார். உரத்துப் பேசவும் விரும்பாதவர். அர்த்தமற்ற முறையில் எவரும் குதர்க்கம் செய்தால் பெருங்கோபம் அவரிடம் கிளம்பும். எனினும் தனது கோபத்தை அடக்க வேண்டும் என்பதில் தீர்மானமாகவிருந்து அதனைக் கட்டுப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். அல்லது கோபம் ஏற்படுத்தக்கூடிய சூழலைத் தவிர்த்துக் கொள்வார்.

தவேந்திரன் நல்ல கலாரசிகர். நல்ல படைப்புகளை நயந்து ரசிப்பார் தனது மூத்த மகளை நல்ல இசைக்கலைஞராகவும், ஏனைய இரு பிள்ளைகளையும் நடனக்கலைஞர்களாவும் வளர்த்தெடுத்தார். அவரது பிள்ளைகளின் கலைநிகழ்வுகளை அவர் இரசிப்பார். நாமும் அகமகிழ்ந்து இரசிப்போம். அத்தகைதொரு தரம் இவர்களின் கலை வெளிப்பாடுகளில் இருக்கும். நிகழ்வுகள் சுருக்கமாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டும் என்பது தவேந்திரனது விருப்பம். நோர்வேயிலும் சரி அல்லது எமது ஊரான அரியாலையிலும் சரி தான் தொடர்புபட்டுச் செயற்படும் அமைப்புகளது கலைநிகழ்வுகள் சிறப்பாக அமைய வேணடு;ம் என்பதில் அவருக்கு பெரிதும் அக்கறை இருந்தது. இதற்காகக் கரிசினை எடுத்துச் செயற்படுவார். பொதுவாக நீட்டி முழங்குவது அவருக்குப் பிடிக்காது. தனது பிள்ளைகளின் நடன அரங்கேற்றத்துக்கு சிறப்பு விருந்தினராக என்னை அழைத்த போது 3 நிமிடங்களில் நல்லதொரு பேச்சைத் தாருங்கள் என வேண்டினார். தவேந்திரனது வேண்டுதலை மதிக்கும் வகையில் நடனம் - கலை தொடர்பாகக் கவனம் கொள்ள வேண்டிய 10 செய்திகளை முன்வைத்து மிகச் சுருக்கமான உரையினை நிகழ்த்தினேன்.

நோர்வேயிலும் அரியாலையிலும் பல அமைப்புகளதும் செயற்திட்டங்களதும் சிறப்பான செயற்பாட்டுக்குத் தவேந்திரன் முதுகெலும்பாக நின்றார். திறமைகள் எங்கிருந்தாலும் அவற்றை மதித்து ஊக்குவித்தார். தன்னை முன்னிறுத்துவதை அவர் விரும்புவதில்லை. மற்றவர்களின் கருத்தை அவர்களின் நோக்குநிலையில் இருந்து புரிந்து கொள்ளும் ஆற்றலும் அவருக்கு இருந்தது. அமைப்புக்களின் செயற்பாட்டில் நிர்வாகரீதியாக முன்னேற்றத்தைக் கொண்டு வந்து அவற்றைச் சிறப்பாக இயங்க வைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். அமைப்புக்களின் செயற்பாடுகளில்; முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பயன்படுத்த வேண்டும் என்பதிலும் தவேந்திரன் முனைப்பாக இருந்தார். அமைப்புகளது நிதிவலுவை அதிகரிக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தினார். இவரது முயற்சி அமைப்புக்களது சிறப்பான செயற்பாடுகளுக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது.


நண்பர்களுடன் மகிழ்வாகப் பொழுதுதைக் கழிப்பதும் தவேந்திரனுக்கு பிடித்தமானதொன்று. நண்பர்களின் சந்திப்புகளில் பல்வேறு சமூக விடயங்களும் விவாதிக்கப்படும் போது அவற்றை ஆழ்ந்து கிரகிப்பார். தேவையான இடங்களில் தனது கருத்தைப் பகிர்ந்து கொள்வார். ஒவ்வொரு கோடையிலும் நண்பர்களுக்காக அவரது வீட்டில் ஒரு கூழ் விருந்தை ஏற்பாடு செய்வார். நண்பர்கள் நாம் மகிழ்வுடன் கூடிக் கழிக்கும் நாட்களில் இது சிறப்பானது. கூழ் குடித்து, கடற்குளிப்பும் முடித்து மீண்டும் தவேந்திரன் வீட்டில் கூடிக் களிக்கும் பொழுது மிக இனிமையாகக் கழியும். தவேந்திரனின் மனைவி மேகலா மலர்ந்த முகத்துடன் எம்மை வரவேற்று அரவணைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பார். இனி இந்த இனிய நாட்கள் நினைவுகளில் மட்டும்தான் நிலைக்கப் போகின்றன. நல்ல இனிய நினைவுகளை எவ்வளவுக்குச் சேகரிக்க முடியுமோ அவ்வளவுக்குச் சேகரிக்க வேண்டும். பணச் சேகரிப்பினை விட இதற்கு அரிய பெறுமதி உண்டு என நாம் நண்பர்கள் கூடும் போது பேசுவதுண்டு. தவேந்திரன் மறைவுக்கு பின்னர் எமது இந்தக் கருத்து மிகுந்த அரத்தம் கொண்டதாக எமக்கே தெரிகிறது. இனியும் கோடைகள் வரத்தான் போகிறன்றன. ஆனால் தவேந்தரன் இருக்கப் போவதில்லை. இனி வரும் கோடைகள் வறட்சி மிகுந்தவையாகத்தான் இருக்கப் போகின்றன.

கடந்த இரண்டு வருடங்கள் நண்பர்களுடன் Lillehammer அருகே Skeikampen பகுதியில் குடிற்பயணம் போனோம். தவேந்திரனும் இவற்றில் ஆர்வமாகப் பங்கேற்றார். கடந்த வருடம் இவரே பயணம் குறித்த பேச்சை ஆரம்பித்தார். *21.* பெப்ரவரி *2021* இல் குழுவுக்குள் அவர் எழுதிய பதிவில் «Når er neste hyttetur? Jeg er veldig tørst» *(*அடுத்த குடிற்பயணம் எப்போது*?* நான் மிகவும் தாகமாக இருக்கிறேன்*)* என எழுதியிருந்தார். குடிற்பயணங்களில் மலையேற்றமும் முக்கிய பகுதியாக இருக்கும். *2020* ஆம் ஆண்டில் நானும் தவேந்திரனும்தான் இறுதியாக மலையிலிருந்து இறங்கினோம். வழியைத் தவற விட்டுச் சுற்றுப்பாதையால் வந்து சேர்ந்தோம். *2021* இல் பாதிவழியில் தனது மலையேற்றத்தை தவேந்திரன் நிறுத்திக் கொண்டார். அப்போதே புற்று அவரைத் தின்னத் தொடங்கியிருக்க வேண்டும். நாம் அதனை அப்போது அறிந்திருக்கவில்லை. அப் பயணத்தின்போது சற்றுச் சோர்வாகத்தான் இருந்தார். இருந்தபோதும் உரையாடல்களில் ஆர்வமாகப் பங்கேற்றார்.

*2021* கோடையில் இவருடன் அவரது படகில் கடற்பயணம் போனோம். அப்போதும் நோய்வாப்பட்டுத்தான் இருந்தார். இதேவேளை நண்பர்களுடன் மகிழ்வாகப் பொழுதைக் கழிக்க விரும்பினார். படகு கடலில் விரைந்து செல்லும்போது உற்சாகமிகுதியில் "அதோ அந்தப் பறவைபோல..." பாடலை நான் பாடத் தொடங்கினேன். மெல்லிய புன்முறுவலுடன் பாடலை ரசித்தபடி படகோட்டினார். இக் காட்சியை இப்போது வீடியோவில் பார்க்கும் போது மனம் வெம்பிப் போகிறது. படகுப் பயணத்தின் நடுவழியில் படகைக் கரையொதுக்கி ஓர் உணவகத்தில் கூடி உணவுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தோம். படகுப்பயணம் முடிந்தவுடன் வீடு செல்லும் வழியில் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். அவரும் அவரது மனைவி மேகலாவும் வடையும் தேனீரும் தந்து உபசரித்தனர். அப்போதெல்லாம் தவேந்திரன் இவ்வளவு விரைவாக நம்மை விட்டு பிரிந்து விடுவார் என்பதனை நாம் எவரும் உணர்ந்து கொள்ளவில்லை.

ஈழம் சினிமாவின் முன்னோடி ந.கேசவராஜன் தவேந்திரனது பால்ய நண்பன். கேசவராஜனை நோர்வேக்கு அழைப்பதில் நானும் தவேந்தினும் இணைந்து செயற்பட்டோம். இதற்கான செவில் பெரும்பகுதியினைத் தவேந்திரனே ஏற்றுக் கொண்டார். கேசவராஜனின் திறமைமைத் தவேந்திரன் மெச்சிப் போற்றினார். கேசவராஜனுக்குப் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் விரும்பினார். இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். கேசவராஜனின் படைப்புகளுக்கு தவேந்திரன் ஆதரவு கொடுத்தமைக்கான காரணம் அவர் தனது நண்பர் என்பதற்காக அல்ல. தொழில்நுட்பம் உட்பட மிகக் குறைந்த வசதிகள் கொண்டதொரு சூழலிலிருந்து தரமான படைப்புகளைக் கொண்டு வருகிறார் என்பதே தவேந்திரன் வழங்கிய ஆதரவுக்குக் காரணமாக இருந்தது. மேலும் கேசவராஜன் ஒரு தீவிரமான அரசியற்படைப்பாளி. நான் அறிந்தவரையில் கேசவராஜனின் அரசியல் நிலைப்பாட்டுடன் தவேந்திரன் முழுமையாக ஒத்துப் போகக் கூடியவரல்ல. இருந்தும் இது கேசவராஜனின் கலைப்படைப்புகளுக்கு ஆதரவு வழங்குவதில் தவேந்திரனுக்கு என்றும் தடையாக இருந்ததில்லை. இத்தகைதொரு அரசியல் முதிர்ச்சி தவேந்திரனுக்கு இருந்தது.

கடந்த வருடம் கேசவராஜன் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தியபோது மிகவும் மனம் வருந்தினார். கேவராஜனுக்கு நினைவு வணக்க நிகழ்வொன்றை நடத்த ஏனைய நண்பர்களுடன் இணைந்து தவேந்திரன் முன்னிற்றார். நானும் தவேந்திரனுடனும் நண்பர்களுடனும் இணைந்து செயற்பட்டேன். கேசவராஜன் நினைவாக ஈழம் சினிமா குறித்துச் செயற்படும் கலைஞர்களுக்கு உறுதுணையாக அமையும் வகையில் ஒரு நினைவு அறக்கட்டளை உருவாக்கும் குடும்பத்தினரின் ஆர்வத்துக்குத் தவேந்திரன் துணையாக நின்றார். நண்பர்கள் நாமும் இம் முயற்சிக்கு ஆதரவு வழங்கினோம். பல்வேறு காரணங்களினால் இம் முயற்சி பிற்போடப்பட்டது. இன்று இதே நண்பர்களுடன் தவேந்திரனுக்கான நினைவு நிகழ்வொன்றை செய்வது குறித்துப் பேசி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தவேந்திரன் பெயரில் ஒரு நினைவு அறக்கட்டளை ஆரம்பிக்கும் எண்ணம் குறித்த கருத்துக்களை நண்பர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் இவ்வளவு விரைவாகப் பேச வேண்டி வரும் என்பதனை இயற்கை அறிந்திருக்கக்கூடும். அதனை உணரும் சக்தி எமக்கிருக்கவில்லையே!

புலம் பெயர் மக்கள் மத்தியில் அவர்களுக்கும் அவர்கள் பிறந்து வளர்ந்த தாயகத்துக்கும் இடையே உள்ள உறவுகள் குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் புலம் பெயர் மக்களால் தாயகத்துக்கு அனுப்பப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம், பொருட்கள் போன்ற பௌதிகரீதியியான மாற்றுக்களை Remittances என்ற வகைக்குள் உள்ளடக்கி ஆய்வு செய்வார்கள். இது மிகவும் விரிந்து பரந்த எவ்லைகளைக் கொண்ட ஆய்வுப்பரப்பாக இருக்கும். இதேபோன்று இன்னுமொரு உறவாக Social remittances என்று கூறப்படும் சமூக மாற்றுக்கள் என்பதனையும் ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளார்கள். இந்த சமூக மாற்று என்பது பணம் பொருட்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றம் செய்யப்படுவதனைக் குறிப்பதில்லை. மாறாக எண்ணங்கள், கருத்துக்கள், செயல்முறைகளின் பரிமாற்றம் நேரடித் தொடர்புகள் மூலம் இடம் பெறவதனை குறித்து நிற்கும். எனது அவதானிப்பில் ஊரோடு தவேந்திரன் கொண்டிருந்த தொடர்புகள் இந்த சமூக மாற்றுக்கள் என்ற வகையறைக்குள் உள்ளடக்கி ஆய்வு செய்யப்படக் கூடியவை. புலம் பெயர் சூழலில் நாம் கற்றுக் கொண்ட நல்ல சிந்தனைகளையும் செயன்முறைகளையும் தாயகத்தில் தான் தொடர்பில் இருந்த தனிநபர்களிடமும் அமைப்புகளிடமும் கொண்டு செல்வதற்கு தனது நேரடித் தொடர்பின் ஊடாகத் தவேந்திரன் பல்வேறு முயற்சிகள் எடுத்திருந்தார்.

தொழில்நுட்ட வளர்ச்சியை வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்து வளர்ச்சியடையும் நாடுகளுக்கு ஏற்படுத்த உழைப்போர் பலரும் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது வெறும் பொருட்களின் மாற்றமல்ல. அது அறிவுப்பண்பாட்டின் மாற்றமும்கூட என்பதனை துறைசார் கல்வி மூலமும், தமது பட்டறிவின் மூலமும் அறிந்திருப்பார்கள். ஒரு தொழில் நுட்பத்தை சரியான முறையில் அறிமுகப்படுத்தவும் அதனை உள்ளூர் சமூகம் உள்வாக்கிக் கொள்வதற்கும் உரிய முன்தயாரிப்புகள் செய்ய வேண்டியிருக்கும். ஊரில் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டு வருவதில் தவேந்திரன் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அதற்காக உழைத்தார். ஓரிரு சந்தர்ப்பங்களில் புதிய தொழில்நுட்பத்தையும் நடைமுறைகளையும் உள்வாங்கிக் கொள்வதில் உள்ளூரில் இருந்த தயக்கம் அவரைக் கவலை கொள்ள வைத்ததுமுண்டு. இது குறித்த தனது மனக்கவலையினை என்னிடம் பகிர்ந்து கொண்டதுமுண்டு. இருப்பினும் என்றும் அவர் தனது முயற்சிகளைக் கைவிட்டதில்லை.

ஊரை ஆவணப்படுத்தம் திட்டம் குறித்த நாம் நண்பர்களுடன் சில கூட்டங்களை நடாத்தியிருக்கிறோம். இக் கூட்டங்களில் தவேந்திரனும் பங்குபற்றுவார். இச் சந்திப்பொன்றில் உலகின் மிகப்பெரிய புத்தகச்சந்தையான Frankfurt புத்தகச் சந்தையில் ஒரு தடவை பங்கு பற்றியபோது எனக்குக் கிடைத்த அனுபவமொன்றினையும் குறிப்பிட்டிருந்தேன். இது மலேசியா தூதுரகத்தின் ஆதரவுடன் இப் புத்தகச் சந்தையில் இடம் பெற்ற 100 Heros of Malaysia என்ற புத்தக வெளியீட்டில் நான் பங்கு கொண்ட அனுபவம். சாதாரண மக்கள் மத்தியில் இருந்து பல்வேறு துறைகளிலும் மலேசியாவின் வளர்ச்சிக்கு, சிறப்புக்கு பங்களித்த *100* பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களைப் பற்றிய புத்தகமாக அவ் வெளியீடு அமைந்திருந்தது. நாமும் இத்தகைதொரு கருதுகோளின் அடிப்படையில் *100*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Heros of Ariyalai என்றதொரு நூலை வெளிக் கொண்டு வந்தால் என்ன என்ற கருத்தை; நான் முன்வைத்தேன். தவேந்திரன் உட்பட நண்பர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். இம் முயற்சியினை நிதானமாகச் செய்வதெனவும், கல்வி, கலை, விளையாட்டு, அரசியல், ஆன்மீகம், சமூக சேவை, தொழில் மற்றும் தொழில் முயற்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆட்களைத் தெரிவு செய்யலாம் எனவும் பேசிக் கொண்டோம். இத் திட்டத்தினை இனி செய்யும்போது தவேந்திரனின் நினைவுகளுடன்தான் செய்ய வேண்டி வரும். தவேந்திரன் எம்முடன் இருக்கப்போதில்லை என்பதனை நாம் எவருமே அப்போது கற்பனை கூடப் பண்ணியதில்லை.

*21.* டிசம்பர் *2021* தவேந்திரனிடம் இருந்து ஒரு *Zoom* கூட்டத்துக்கான அழைப்பு வந்தது. தவேந்திரனுடன் நானும் நண்பர்கள் நேதாஜியும் ஈஸ்வரனும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். தவேந்திரனின் கனவுத்திட்டங்களில் ஒன்றான கிழக்கரியாலை கடற்கரையில் ஒரு பகுதியினை மக்கள் ஓய்வாக, மகிழ்வாகக் கழிப்பதற்கான முறையில் வடிவமைபபது குறித்த திட்டமே இது. இத் திட்டம் குறித்து கடந்த வருடம் செப்டம்பர் மாதம் ஒரு நேரடிச் சந்திப்புக்குத் தவேந்திரன் அழைப்பு விடுத்து அந்தச் சந்திப்பிலும் நான் கலந்து கொண்டிருந்தேன். அந்த நேரடிச் சந்திப்பின் தொடர்ச்சியாகவே இந்த Zoom கூட்டம் அமைந்திருந்தது.. இக் கூட்டத்தில் இத் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாகக் சாதகமாகக் கிடைத்த தகவல்களை தவேந்திரன் பகிர்ந்து கொண்டார். திட்டத்தை ஆரம்பிப்பது குறித்துக் கலந்துரையாடினோம். இத் திட்டத்தை முழுமையாக ஊரில் இருப்பவர்களே நடைமுறைப்படுத்த வேண்டும். இங்கிருந்து இயக்க முடியாது என்ற கருத்தை நான் வலியுறுத்தினேன். இதனைத் தவேந்திரன் முழுமையாக ஏற்றுக் கொண்டார். ஊரில் வேறு ஒரு திட்டத்தில் கிடைத்த அனுபவத்தையும் குறிப்பிட்டு நான் வலியுறுத்திய கருத்துக்குத் தனது உடன்பாட்டை வெளிப்படுத்தினார்.

தலைமைத்துவம் குறித்த அறிஞரான Stephen Covey தனது கோட்பாடுகளில் ஒன்றாக First thins first என்பதனையும் முன்வைத்திருந்தார். இது ஒருவகையில் நேரத்தை ஒதுக்கீடு செய்வது குறித்த அணுகுமுறை பற்றிய கோட்பாடு ஆகும். பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய முடியாதவிடத்து எது முதன்மையானது என்பதனைக் கணித்து அதில் முழுமையான கவனம் கொடுக்க வேண்டும் என்பதனை இக் கோட்பாடு வலியுறுத்தும். இக் கூட்டத்தில் உரையாடிக் கொண்டிருக்கும் போது தவேந்திரன் குறித்து இக் கோட்பாடே எனது நினைவுக்கு வந்தது. தவேந்திரனிடம், 'உங்கள் உடல்நலனைப் பேணுவதே இப்போது முதன்மையான விடயம்' என்பதனை எடுத்துக் கூறினேன் ஏனைய நண்பர்களும் இதனை வலியுறுத்தினார்கள். தவேந்திரனும் இதனை ஏற்றுக் கொண்டார். இருப்பினும் திட்டத்தை ஊரில் உள்ளவர்களடம் பேசி அவர்களை உள்வாங்க விரும்பினார். இதற்காக அடுத்த கூட்டத்தை ஊரில் உள்ளவர்களோடு இணைந்து *26.12.2021* அன்று நடாத்துவது எனவும் முடிவு செய்தோம். பின்னர் தவேந்திரன் உடல்நிலை இன்னும் மோசமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்திருக்க வேண்டும். அடுத்த கூட்டத்துக்கான அழைப்பும் வரவில்லை. இதுவே தவேந்திரனுடனான இறுதி உரையாடலாகவும் அமைந்து விட்டது.

வாராது போல் வந்த மாமணி போல என அருமையாகக் கிடைக்கும் ஆளுமையாளர்களை பாரதியின் வரிகளில் குறிப்பிடுவார்கள். தவேந்திரனை ஆழந்து உணரும்போது இவ் வரிகள் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. தவேந்திரனின் இழப்பு ஒரு நல்ல மனிதனின் இழப்பு மட்டுமல்ல. சமூக வளர்ச்சிக்காக ஓய்வற்று உழைத்த ஒரு சமூகப் பேராளியின் இழப்பும்கூட. நாம் கூடித் துயர் பகிரந்து கலைந்து செல்லாமல் தவேந்திரனை நினைவில் இருத்தி சமூகம் குறித்த நற்பணிகளைச் செய்வதே அவருக்கு நாம் செய்யும் மரியாதை வணக்கமாக அமையும்.

---

**கலாநிதி சர்வேந்திரா :**

**சமூக நலன், கலை, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் இயங்கி வருபவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறரை நேசித்த மனிதன்

**- பாலசிங்கம் யோகராஜா**

தவேந்திரன் அண்ணருக்கும் எனக்குமான உறவு 2002-2003 சமாதானப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் ஏற்பட்ட ஒன்றாகும். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் கே.பி.றெஜி ஒஸ்லோவிற்கு வருகை தந்த ஒரு சந்தர்ப்பத்தில் தவேந்திரன் அண்ணருக்கும் றெஜிக்குமிடையில் ஓர் சந்திப்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு அமைந்தது. தாயகத்திற்கான தன்னாலான அபிவிருத்தி சார்ந்த பங்களிப்புப் பற்றிய கருத்துகளை அச்சந்திப்பில் பகிர்ந்துகொண்டிருந்தார்.

தாயக மக்களின் மேம்பாடு சார்ந்த செயற்திட்டங்களில் அவர் தொடர்ச்சியாக அக்கறையும் செயல்விருப்பும் கொண்ட மனிதராக இருந்துள்ளார் என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறியக்கிடைத்தது. அவரின் அக்கறைக்குரிய சமூகப் பணிகளுக்கு அவருடைய துணைவியும் பிள்ளைகளும் உறுதுணையாக இருந்துள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டு வட நோர்வேயில் தேவாலயத்தில் நீண்ட காலமாக இருக்கும் தமிழ் குடும்பத்தினரை விடுவிக்கும் முயற்சியிலும் மிகுந்த அக்கறையுடன் இருந்தார் அடிப்படையில் மனிதாபிமானப் பணிகள் மற்றும் சக மனிதர்கள் மீதான அவருடைய அக்கறையின் வெளிப்பாடாக இது போன்ற செயல்களை பார்க்கலாம்.

தவேந்திரன் அண்ணரின் குடும்பத்தினருடனான எனது நெருக்கம் என்பது சென்ற வருடம் ஜூன் மாதத்திலிருந்து தொடங்கியது. நானும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டவன்.

தவேந்திரனும் அவரது குடும்பத்தாரும் இறுதிக் கணம் வரை நோய்க்கு எதிராக போராடுகின்றார்கள். எப்படியும் நோயின் பிடியிலிருந்து விடுபட்டு மீண்டு வந்து விடுவேன் என்ற நம்பிக்கையை இறுகப் பற்றியபடி அவர் போராடினார். அதனை மிக நெருக்கமாக இருந்து கண்டிருக்கிறேன். தவேந்திரன் அண்ணர் மரணத்துடன் சமரசம் செய்யவில்லை.

அவருடைய இறப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. தவேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பிறர்மேல் அன்பு செலுத்துகின்ற, தன்னை சுற்றியுள்ளவர்களுக்கு கைகொடுக்கின்ற, சமூகத்தின் நலனுக்காக அயராது உழைக்கின்ற மிகச் சிலரே நம்மத்தியில் வாழ்கின்றார்கள்.

தாயக மாணவர்களின் கல்விப் பணியில் அரிவரி முதல் பல்கலைக்கழகம் வரையாக அவர் கல்வி முன்னேற்றப்பணிகளுக்கு பங்களித்திருக்கிறார்.

*சமூக மேம்பாட்டுப்பணி, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப்பணி என்று நோக்குமிடத்து யாழ் குடாவிலிருந்து மன்னார், முல்லைத்தீவு, தெற்கின் எல்லைக் கிராமமான பானமை மற்றும் மலையகம், காலி வரை வியாபித்திருந்திக்கிறது.*

தவேந்திரன் ஒரு நல்ல இதயமுள்ள மனிதராக சமூகத்தின் பால் அக்கறை கொண்ட ஆளுமையாக இனிய பல நினைவுகளை விட்டுச் சென்றுள்ளார். அந்த நினைவுகளில் அவர் நம்மோடு காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பார்.



**பாலசிங்கம் யோகராஜா :**

**சமூக அரசியற் செயற்பாட்டாளர். தவேந்திரனின் நாடுசார் செயற்பாடுகளை பல ஆண்டுகளாக நன்கு அறிந்தவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முழுமையான மனிதன்

- ராஜன் செல்லையா

சில நண்பர்களின் இயல்புகள், அவர்கள் தொடர்பாடும் முறைகள், அவர்களின் ஈடுபாடுகள் என்பன அவர்களுடன் ஒரு மரியாதை கலந்த உறவை ஏற்படுத்தும். அப்படியானதொரு உறவே எனக்கு தவேந்திரனுடன் இருந்திருக்கிறது. தமிழ்ச் சங்க நிகழ்வுகளில் பின்னணியில் நின்று சளைக்காமல் அவர் உழைப்பதைப் பல தடவைகள் கண்டிருக்கிறேன். ஒழுங்கு செய்யப் படுகின்ற விளையாட்டு நிகழ்வுகளிற்கான ஒருங்கமைப்பில் மைதானத்தில் நிற்பார், பின்னர் சிறிது நேரத்தில் பார்த்தால் சிற்றுண்டிச்சாலையின் உணவு விற்பனையில் மும்மரமாயிருப்பார். இத்தனைக்கும் அவர் ஐம்பதுகளின் நடுப்பகுதியைத் தாண்டி அறுபதை அண்மிக்கும் வயதுள்ளவர். இளவயது வேகத்தில் பல்வேறு அமைப்புக்களில் இருந்து கடுமையாக உழைத்த பலர் எம்மிடையே இருக்கின்றனர், ஆனால் இளமை கடந்து முதுமை தொடுகின்ற வயதில் இவ்வாறான ஈடுபாட்டுடன் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு ஒரு தனித் தன்மை வேண்டுமென தவேந்திரனைப் பார்க்கும் போது வியந்திருக்கிறேன்.

## பன்முகத் தன்மை

அந்தத் தனித்தன்மை, உத்வேகம் என்பவற்றிற்குப் பின்னால் தனது சமூகத்தை மதிக்கின்ற, அதற்காக முழுமையாக உழைக்கின்ற ஒரு பெரும்பக்குவம் தவேந்திரனிற்கு இருந்திருக்கவேண்டும். பலருக்கு அவருடைய சில பக்கங்களே தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கலாம். இந்த நினைவுநூல் உருவாகிக் கொண்டிருக்கும் போது வருகின்ற பதிவுகள் அவருடைய பன்முக ஈடுபாடுகளை உரத்துச் சொல்கின்றன. தான் வாழ்ந்த புலம்பெயர்சூழலை நன்கே விளங்கி வைத்திருக்கிறார் தவேந்திரன். பெரும் சமூகமாகிய நோர்வேச் சமூகத்தையும் இங்குள்ள நிறுவனங்களையும் அவர் நன்கு அறிந்திருக்கிறார். இங்கு வாழ்கின்ற எம்மவர்களைப் பற்றிய விரிவானதொரு பார்வையைக் கொண்டிருந்திருக்கிறார். எமது புலம்பெயர் வாழ்வு தருகின்ற வாய்ப்புகள், சவால்கள், மற்றும் இவற்றிற்கிடையே இயங்குகையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் யாவற்றையும் நன்கு புரிந்ததொருவராக மிளிர்ந்திருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர். புலம்பெயர்ந்த முதற் தலைமுறை எதிர்நோக்குகின்ற சவால்கள், அதற்குள் இரண்டாந்தலைமுறையின் வாழ்வு என்பன பற்றி ஒரு விமர்சன அணுகுமுறையைக் கொண்டிருந்திருக்கிறார் தவேந்திரன். எமது அடையாளம், எங்கள் தாயகத்துடன் பிணைக்கப்பட்ட எமது வாழ்வு பற்றிய பெரும் கரிசனை அவருக்கு இருந்திருக்கிறது. இந்தப் புரிதல்கள் மற்றும் பட்டறிவுடன் வெறும் சிந்தனை வயப்பட்டவராக மட்டும் தவேந்திரன் வாழ்ந்திருக்கவில்லை. மிக முக்கியமாக எங்கே, எது தேவை என்கின்ற நுண்ணறிவுடன் செயல்வேகம் கொண்டவராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

## எவரையும் இணைக்கின்ற வல்லமை

2014 அல்லது 2015ம் ஆண்டாக இருக்கவேண்டும், அரியாலை மக்கள் மன்றத்தின் நிர்வாகத்தில் அவர் தொழிற்பட்டபோது ஒரு ஒன்றுகூடலைத் தொகுத்து வழங்குங்களேன் என என்னை அணுகினார். அதற்குப் பொருத்தமான பலர் இருக்கிறார்களே என நான் மறுத்தபோதும் அவர் மீதிருந்த மரியாதை நிமிர்த்தம் பின்னர் அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். 2017 இல் தமிழ்சங்கம் ஒழுங்குசெய்த ஒரு தமிழ்-நோர்வேஜிய இணைஇசை *(fusion)* நிகழ்ச்சியொன்றையும் தொகுத்து வழங்குமாறு மீண்டும் கேட்டார். இசையை இரசிக்கமட்டுமே என்னால் முடியும்; தொகுத்து வழங்குவதற்கு விடயதான அறிவு மிக முக்கியம், எனவே விட்டுவிடுங்களேன் எனக் கெஞ்சாத குறையாகக் கேட்ட என்னை மீண்டும் மேடைக்குத் தள்ளினார். நான் கூறியபடியே எனது பங்கில் திருப்தியில்லாமல் இறங்கி வந்த என்னைப் பார்த்து வழமையான சிரிப்புடன் பரவாயில்லை இதனை ஒரு அனுபவமாக எடுங்களென்றார்.

## இளையோர் வாழ்வு பற்றிய பார்வை

தமிழ்ச்சங்கத்தின் பொங்கல்விழா ஒன்றில் இங்கு வாழ்கின்ற எமது இளையவர்களையும் முதலாம் தலைமுறையையும் வைத்து ஒரு சுவாரசியமான விவாத அரங்கை நடத்துங்களென்றார். எனக்குப் பரிச்சயமான வேலையென்பதால் சம்மதித்தேன். இந்த விவாத நிகழ்ச்சியில் இளையவர்கள் தமிழில்தான் தமிழ்ச்சங்கத்தில் பேசவேண்டுமென்றவர்களிற்கு; இல்லை இங்கு விடயமே முக்கியம் அவர்கள் நோர்வே மொழியையும் கலந்து பேசட்டுமென்று என்னுடன் ஒத்துழைத்தார் தவேந்திரன். இளையவர்களின் வாழ்க்கையையும் அவர்களின் உலகத்தையும் நன்கு புரிந்துகொண்டு அவர்களை உரியவகையில் இணைக்கவேண்டுமென்ற தவேந்திரனின் அணுகுமுறைக்கு இது நல்ல உதாரணமாக இருக்கிறது.

## மனித உறவின் மாண்பை மதிக்கின்ற பண்பு

இவற்றிற்கு பின்னால் சில காலம் கழித்து தவேந்திரன் சார்ந்திருந்த அமைப்பு ஒன்று குறிப்பிட்ட விடயமொன்றைக் கையாண்ட முறையை விமர்சித்து, தேவை கருதி பொதுவெளியில் எனது கருத்தை முன்வைத்தேன். ஒரு வேளை அவரிற்கு அது அதிருப்தியைக்கூடக் கொடுத்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமுண்டு. இருந்தபோதும் அதனைத் தொடர்ந்துவந்த வாரங்களில் நாம் சந்தித்துக் கொண்டபோதும் வழமையான அதே இன்முகத்துடன் பழகினார், கதைத்துக் கொண்டார், அன்பு பாராட்டினார். சாமானியர்களைப் போலல்லாது தவேந்திரன் விடயங்களையும் மனிதர்களையும் வேறுபடுத்திப் பார்த்து உறவுகளைப் பேணுகின்ற ஒரு உயர்ந்த பண்பினைக் கொண்டவர் என்பதை இது எனக்கு உணர்த்தியது. பலவிதமான பார்வைகளும் முரண்பாடுகளும் இடியப்பச் சிக்கல்களாக எம்மைச் சூழ்ந்து நிற்கின்ற இந்த வாழ்வில் தவேந்திரனைப் போன்றவர்களின் இந்தப் பண்பு எங்கள் சமூக மேம்பாட்டிற்கு மிக அத்தியாவசியமாகின்றது.

## சுற்றுலாவும் மலையேற்றமும்

நண்பர்கள் சேர்ந்து செல்கின்ற ஒரு மலைப் பகுதிச் சுற்றுலாவிற்கு தவேந்திரன் வருவது எப்போதும் நிச்சயமாக இருக்கும். 2020 கோடை காலச்சுற்றுலாவிற்கு வந்தவர் உற்சாகமாக எங்களுடன் மலையேறினார். பாட்டும் நடையும் கதையுமாக மலையேறிக் கொண்டிருந்தவேளை நீண்ட காலமாக எனக்கு இருந்த கேள்வியொன்றைக் கேட்டுவைத்தேன்: ஏன் என்னை அண்ணை என அழைக்கிறீர்கள் என்பதே அது. சில மாதங்களால் என்னைவிட மூத்தவர்தானே நீங்கள் எனச்சொல்லிச் சிரித்தார். எனது வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டார். தற்பொழுது கிடைக்கின்ற தகவல்களின்படி 2021 கோடைகாலப் பகுதியில் நோய்பற்றிய அறிகுறியை அவர் அறிந்திருக்கவேண்டும். இருந்தபோதும் அந்தக்கோடையின் சுற்றுலாவிலும் கல கலப்பாக இருந்தார். உற்சாகமாக உணவு தயாரித்தார். நினைவு இடுக்குகளில் அந்தக்கோடைக்கு ஒரு தனி இடமுண்டு.

தொடர்ந்து வந்த மாதங்களில் சில நெருங்கிய நண்பர்கள் தவேந்திரனின் படகில் சவாரியொன்றிற்கு அழைத்தனர். கோடை தனது அழகை விரித்து வைத்திருந்த ஒரு முன்மாலைப் பொழுதில் நீண்டதொரு படகுப் பயணம் போனோம். சிலர் கிண்டல்கள் விட்டார்கள். சிலர் பாடினார்கள். சிலர் கதைகள் சொன்னார்கள். சிலர் கடலில் குதித்து மீண்டுவந்தார்கள். தவேந்திரன் இலாவகமாகத் தனது படகை ஓட்டிக்கொண்டிருந்தார். அவரின் முகம் வழமைபோல நிர்மலமாகவே இருந்தது. படகை நீங்கி வந்தவர்களை வீட்டிற்குத் தேனீருக்கு அழைத்தார் தவேந்திரன். நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தவர்கள் ஒரு அஸ்தமனவேளையில் விடைபெற்றோம். நான் எண்ணியிருக்கவில்லை அதுவே தவேந்நிரனுடனான எனது இறுதிச் சந்திப்பென்று.

## இசை ஆர்வம்

இந்தப் பதிவை நான் நிறைவு செய்துகொண்டிருக்கும்போது மேலே நான் குறிப்பிட்ட இணையிசை நிகழ்வில் எனக்கு அறிமுகமாகிய சூடான் நாட்டு சக்சபோன்-Saxophone- வாத்தியக் கலைஞர் மோட்டன் சக்கறியா தவேந்திரனின் மறைவை அறிந்து தொடர்புகொள்கிறார். தவேந்திரனின் மறைவு அவரை மிகவும் பாதித்திருக்கிறது. இந்தியாவில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்திருந்த இரண்டு வாத்தியக் கலைஞர்களுடன் தவேந்திரன் தன்னைத் தேடிக் கண்டுபிடித்து வந்திருந்தாராம். அந்தத் தருணம் முதல் அந்த நிகழ்ச்சி அரங்கேறும் வரை தவேந்திரன் பழகிய முறை, தமது தேவைகளை அவர் கவனித்துக் கொண்ட பாங்கு என்பன தான் ஒரு இடமும் கண்டிராத அனுபவமென்கிறார் மோட்டன். மனம்கோணாமல் பழகுகின்ற நற்பண்புடன் தவேந்திரனிற்கு இசையிலிருந்த ஆர்வம் காரணமாக பங்குபற்றிய அனைவரையும் இணைக்கின்ற ஒரு பசைபோல அவர் செயற்பட்டிருந்தார் என உணர்வுபூர்வமாக நினைவுகூர்கிறார் அந்த சூடான் நாட்டு இசைவல்லுனர். ஒஸ்லோவில் ஒழுங்குசெய்யப்படுகின்ற நினைவு நிகழ்வில் தவேந்திரனிற்குச் சமர்ப்பணமாக ஒரு சிறு இசைஅஞ்சலியை தான் வழங்கவிரும்புகிறேன் என்ற செய்தியையும் சொல்லிவைத்தார் மோட்டன்.

தவேந்திரனின் நல்ல பல இயல்புகளைப் பலரும் நினைவுகொள்கின்றனர். இவைகளைச் சேர்த்து ஆராய்ந்தால் தவேந்திரன் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தை ஆழமாக நேசித்துள்ளார் என்பது புலப்படும். அந்த நேசிப்பின்காரணமாகத்தான் அவர் பல தளங்களில் அற்பணிப்புடன் இயங்கியிருக்கிறார். தவேந்திரன் புலம், தாயகம் அதிலும் தான் வாழ்ந்த ஊர் எனத் தனதுசெயற்பாடுகளை விரித்துள்ளார். இந்தச் செயற்பாடுகளின்போது அவர் சந்தித்த மனிதர்களுடன் ஒருவித வாஞ்சையுடன் கூடிய உறவைப் பேணியிருக்கிறார் தவேந்திரன்.

சில மனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மீட்டுவது வெறுமனே அவர்களை நினைந்து உருகுவதற்காக மட்டுமல்ல. அவர்கள் வாழ்ந்த வாழ்வின்மூலம் அவர்கள் எமக்கு விட்டுச்செல்வன எவையென்கின்ற கேள்வியை எழுப்பி அதன்மூலம் எம்மை செழுமைப்படுத்திக் கொள்ளவும்தான். தவேந்திரன் ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்து எமக்குப் பலதை விட்டுச்சென்றுள்ளார். அவருக்கிருந்த சமூகப் பற்றும் மனித உறவுகளை அவர் மதித்த பாங்கும் அவற்றில் மிக முக்கியமானவையாகின்றன.

---

**ராஜன் செல்லையா :**

**முன்னாள் நோர்வேஜியத் தேசிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்.**
**சமூக அரசியற் செயற்பாட்டாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதைச் சொல்லி விடைபெறுகிறான் எமது தவேந்திரன்?

- ச. அருணன்

தவேந்திரன் - அன்பானவன், நேர்மையானவன், அமைதியானவன் எனது பள்ளித்தோழன்.

யாழ் இந்துவிற்கு ஒன்றாய் பயணித்தோம்.

இவன் எனது அயவலன்.

பிள்ளையார் வீதியில் கிளித்தட்டு விளையாடினோம்.

இவன் எனது சக ஒன்றிய உறவு.

ஒன்றாய் இணைந்து ஒற்றுமையாய் உழைத்தோம்.

இன்று இழப்பின் வலி உணர்கிறோம்.

பரந்த மனமுள்ள நல்ல மனிதனை இழந்துவிட்டோம்.

சமூக சேவையாளனை சடுதியாக பிரிந்துவிட்டோம்.

மனித மேம்பாட்டிற்காய் உழைத்த மனிதனை நிரந்தரமாகவே தொலைத்துவிட்டோம்.

நமது நண்பனின் வாழ்வும் மரணமும் நமக்குச் சொல்லும் செய்திகள் எவை?

நன்றியுணர்வு *(sense of gratitude)*

தவேந்திரன் தனது பாலர் பாடசாலையின் நிலைகண்டு மனம் வருந்தினான். 'எனக்கு அழுகைகூட வந்துவிட்டது' என உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான். தனது ஆரம்பக் கல்விக்கு அத்திவாரமிட்ட பார்வதி அன்னைக்கு உதவிடவேண்டுமென்று துடித்தான். அதன் வளர்ச்சிக்காய் கடுமையாக இறுதிவரை உழைத்தான். நன்றியுணர்வு என்பது அதி உயர் மனித விழுமியம் *(human values)*. உங்களை உயர்த்திய பள்ளிகளுக்கு உழையுங்கள் என்று சொல்லிச்செல்கிறானா எமது நண்பன்?

உதவும் கரங்கள் உயர்ந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட சேவை செய்யும் கரங்கள் உயர்வானவை *(Hands that serve are holier than lips that pray)* என்ற கோட்பாட்டுக்கு அமைய இறுதிவரை வாழ்ந்தவன் இவன். கொடிய நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் வேளையிலும் அவனது சேவை ஓயவில்லை. நான் இரண்டு மாதங்களுக்கு முன்பு இரு பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி கோரியபோது உடனடியாவே, மூன்று நிமிடத்துள் பதிலளித்து உதவிட முனவந்த உத்தமன் நமக்கு கூறும் செய்திகள்தான் எவை?

சேவையே ஆன்மீக வளர்ச்சியில் (spiritual development) உயர்ந்த படியாக கருதப்படுகிறது. அன்னை தெரேசா குறிப்பிட்டது போல, ஏழைகளின் புன்சிரிப்பில் இறைவனைக் காணுங்கள் என்று சொல்லிச்செல்கிறானா எமது நண்பன்?

மனிதாபிமான செயற்பாட்டாளன்

அரியாலையிலிருந்து அம்பாறை வரை அவனது சேவை வியாபித்திருந்தது.

மலையகத்திலிருந்து மன்னார் வரை அவனது மனிதாபிமானம் பரந்திருந்தது.

மனிதாபிமான செயற்பாட்டாளனான தவேக்கு நமது போராட்ட அணுகுமுறைகள் சிலவற்றில் உடன்பாடுகள் இருக்கவில்லை. ஆனாலும் போராளிகளை முழுமையாக நேசித்தான். மாற்றுத்திறனாளிகள் ஆகிவிட்ட போராளிகளுக்கு தானாகவே முன்வந்து உதவியமை அவன் போராளிகள் மீது கொண்டிருந்த அன்பையும் அவனது மனிதாபிமானப் பண்பையும் வெளிப்படுத்த போதுமானது. மானிடதர்மத்தோடு மனித மேம்பாட்டுக்கு உழையுங்கள் என்று சொல்லிச்செல்கிறானா எமது நண்பன்?

நண்பனின் வாழ்வும் பல செய்திகளைச் சொல்கின்றன.

நண்பனின் இழப்பும் பல பாடங்களைத் தருகின்றன.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

---

**ச. அருணன் (UK) :**

**சமூக நலன், மற்றும் பண்பாட்டுத் தளங்களில் இயங்கி வருபவர்.**

289502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் திரும்பி வா நண்பனே!

- வே.இரவிகுமார், ப.தவநாதன், வை.கார்த்திக், ஜெ.ஜேம்ஸ், த.தர்மவாணன்

---

ஒரு மனிதனின் வாழ்வை மற்றவர்கள் போற்றவும், நினைக்கவும் பலவகையான காரணங்கள் உண்டு. தவேந்திரனது வாழ்க்கை வரலாறுக்கும் இது மிகப் பொருத்தமானது.

நோர்வே மண்ணில் பல தசாப்தங்களை தனது வாழ்நாளில் கழித்த தவேந்திரன், தனது சமூகம் சார்ந்த செயற்பாடுகளால் பலராலும் நினைவுகூரப்படுகின்றார்.

புலம்பெயர் ஈழத்தமிழர்கள், நோர்வேயின் பல பாகங்களில் காலூன்றி வாழத்தொடங்கிய தொடக்ககாலப் பகுதிகளில், வெகுசன, சமூகக் கட்டமைப்புகள் பலவற்றை உருவாக்கிக்கொண்டனர். இப்படியான அமைப்புகள் ஒருசிலவற்றின் உருவாக்கத்தின் ஆரம்பப்புள்ளிகளில் ஒருவராக தவேந்திரனும் இருந்துள்ளார். குறிப்பாக Asker og Bærum தமிழர் ஒன்றியத்தின் உருவாக்கத்தில் தவேந்திரனின் வகிபாகம் குறிப்பிடப்படவேண்டியதொன்று.

ஈழத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவரது பணிகள் பல. அவற்றுள் குறிப்பாக 2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்த நிவாரணம், 2009 இல் இறுதிப்போரின் விளைவாக வவுனியா நோக்கிவந்த ஏதிலிகளுக்கு அவசர நிவாரண உதவிகளை சேகரிப்பதிலும், அனுப்பிவைப்பதிலும் அக்கறையுடன் செயற்பட்டமையைக் கூறலாம். இவைதவிர தன்னை வெளிப்படுத்தாமல் பல சமூகப் பணிகளை அவ்வப்போது பலருடனும் இணைந்து செய்துள்ளார்.

தவேந்திரன் இணையற்ற ஒரு கலா இரசிகனும்கூட.

இப்படிப் பலவிடயங்களைக் குறிப்பிட்டாலும், எம்மால் பிரத்தியேகமாக நினைவுகூர, நட்பு, நேசம் என்ற பரப்பளவைக் கைகளில் எடுத்து, அவரை நினைவுகூர்ந்து அஞ்சலிக்கின்றோம்.

காலங்கள் யாருக்கும் காத்திருப்பதில்லை. ஆனால் கடந்துசென்ற, வாழ்ந்த காலங்களை இரைமீட்டுவதில், சுகத்துடன் ஒரு மெல்லிய சோகமும் ஆங்காங்கே இளையோடுவது பலருக்கும் பரீட்சியமான ஒன்று என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகின்றோம்.

எங்கள் நண்பர் தவேந்திரன், தனக்கான சில மனிதர்களைத் தனது வாழ்வின் இறுதிப்பகுதிகளில் மிகவும் நெருக்கமாக்கினார். அந்த சில மனிதர்களில் எம்மையும் உள்வாங்கி, முக்கியத்துவம் கொடுத்து, தனது நம்பிக்கைக்கும், நட்புக்கும் ஆட்கொண்டார்.

"சனிக்கிழமைக் குழு" என்ற ஒரு சிறு குழுவை உருவாக்கினோம். இதன் உருவாக்கத்தில் தவேந்திரனும் முதன்மைப் பாகம் வகித்தார். நாங்கள் ஆறு பேர் கொண்ட சிறு குழுவானோம். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருதடைவை ஒவ்வொருவர் வீடுகளில் கூடினோம். நடைப்பயிற்சி, படகுப் பயணங்கள், உள்நாட்டு & வெளிநாட்டுப் பயணங்கள் என்று சில விடுமுறைகளையும் ஒன்றாகக் கழித்தோம்.

பொதுவாகவே அமைதியான சுபாவம் கொண்ட அவர், ஆரம்பகால சந்திப்புகளில், தன்னைப்பற்றி எதையுமே வெளிப்படையாகப் பேசி நாம் கண்டதில்லை.

தவேந்திரன் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதிக்காலங்களில், தனது பொழுதுகளை எம்முடன் கழித்திருந்தார். அவரது இறுதி வெளிநாட்டு சுற்றுலாவை, போலந்து நாட்டில் (Gdansk, Poland) எம்முடனேயே கழித்திருந்தார். இது 26.10.2021 இல் நிகழ்ந்தது.

2021 இறுதிப் பகுதிகளில், தனது நோய் காரணமாக எம்முடன் பல விடயங்களை மனந்திறந்து பேசிப் பகிர்ந்துகொண்டார்.

சிறுவயதில் தனது வாழ்க்கை, தான் கண்ட மனிதர்கள், தனக்கு நிகழ்ந்த அவமானங்கள், தான் அடைந்த வெற்றிகள், தனது நிறைவேறாக் கனவுகள், நிறைவேறிய கனவுகள் என்று பலவற்றையும் ஒரு குழந்தையைப்போல் பகிர்ந்துகொண்டார்.

எங்கள் தவேந்திரனை வெகுவிரைவாகவே இழக்கப்போகிறோம் என்று நாம் கனவில் கூட நினைத்திருக்கவில்லை, நோயும் விட்டுவைக்கவில்லை. நல்ல ஒரு மனிதரையும், நண்பரையும் இழந்த சோகத்தில் இருந்து நாம் இன்னமும் மீளவில்லை.

அவரது பசுமையான நினைவுகள் எமக்குள் என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கும்!

அவரின் ஆத்மா அமைதிபெறட்டும்!

அவரின் மனைவி, பிள்ளைகள், உறவுகள் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவேந்திரன்!
மிக இளமையில் நோர்வே வந்து
தன்னையும், தன்னைச் சார்ந்தோரையும்,
தனது சமூகத்தையும்,
தான் பிறந்த மண்ணையும், மக்களையும்,
நேசித்த மனிதன்!

குடும்பம், சமூகம்,
மனிதம், ஈவிரக்கம்,
அத்தனையயும் தனது வாழ்வின்
பெரும் பகுதியாக்கி,
அவற்றுக்கு மிக முன்னுரிமை கொடுத்த மனிதன்!

கடமை, கண்ணியம்,
கடின உழைப்பு,
சக மனிதரை மதித்தல்,
அவரால் பேணிப் பாதுகாக்கப்பட்ட
விழுமியங்களுள் சில!

கருத்துவேறுபாடுகள்,
சக மனிதரிடம் தோன்றும் போதெல்லாம்,
வார்த்தைகளை அவதானமாகப்
பாவித்த மனிதர்!

தான் நம்பிய விடயங்களை,
தன்னால் தொடக்கப்பட்ட விடயங்களை
உறுதியாகவும், இறுதிவரையும்
பொறுப்புடனும், பொறுமையுடனும்
தயங்காமல் தோளில் சுமந்த மனிதன்!

நண்பர்கள் சிலருடன்
மனக்கசப்புகள் வந்தபோதெல்லாம்,
முதிர்ச்சியடைந்த மனிதனாக
சரி, பிழைகளை ஆராய்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணப்படப் பக்குவப்பட்ட மனிதன்!

அவசரமாக இவ்வுலகையும்,
எம்மையும் விட்டுச் சென்றாலும்,
எமது நினைவுகளில் நித்தியமாய்
வாழும் வல்லமை பெற்றுவிட்டீர்!

சென்று, முடிந்தால் திரும்பி வாரும்!
இல்லையேல்,
நாம் அங்கு வரும்போது
மீண்டும் சந்திப்போம்!




நட்புடன்

---

**வே.இரவிகுமார், ப.தவநாதன், வை.கார்த்திக், ஜெ.ஜேம்ஸ், த.தர்மவாணன்**
**:**

**தவேந்திரன் வாழ்ந்த அதே பாறும் பிரதேசத்தில் வாழ்ந்து வருபவர்கள்.**
**ஒன்றாகச் சேர்ந்து பல்வேறு நிறுவன ரீதியிலான பணிகளில்**
**நீண்டகாலமாக ஒன்றிணைந்து பணியாற்றிய நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இப்புவி காணா இனியோன்"

**50+ நட்புவட்ட நண்பர்கள் சார்பாக**
**காசிநாதன் நிர்மலநாதன்**

தவேந்திரன், இனி நீங்கள் நம்மோடில்லை என்பதை நம்ப மறுக்கிறது எங்கள் மனங்கள்.

நம் நட்புவட்டத்தில் ஒரு வெற்றிடம்.

மாதமொருமுறை இடம்பெறும் இந்நட்புவட்டச் சந்திப்புக்காய் நாம் அனைவரும் ஆவலுடன் காத்திருப்போம். மாறுபட்ட கருத்தியல் வேறுபாடுள்ளவர்களும் மகிழ்வுடன் பங்குகொள்ளும் தளம் அது.

வார இறுதியினை ஆரம்பித்து வைக்கும் வெள்ளிக்கிழமையில் தான் அந்த ஒன்றுகூடலும் நடந்தேறும். அனைவரும் கிழமைநாட்கள் முழுவதும் வேலைசெய்த களைப்பைக் கூடிக்குலாவித் தீர்ப்பதற்காக அங்கு ஒன்றுகூடுவோம்.

ஒஸ்லோவில் இடம்பெறும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொள்வதற்காக தவேந்திரனும் ஒஸ்லோவின் வெளிப்பகுதியான சன்வீக்கா*(Sandvika)* எனுமிடத்திலிருந்து வருகைதருவார்.

கண்டவுடன் அனைவரையும் கவரும் முகம் அவரினுடையது. ஒரு புன்முறுவலுடன் அதிகம் பேசமாட்டார். அப்படிப் பேசினாலும் மிகவும் பண்பாகவும் மற்றவர் மனம் நோகாமலும் மென்மையாக பேசும் சுபாவம் கொண்டவர்.

சுடச்சுடத் தேநீருடன் ஆரம்பிக்கும் எமது ஒன்றுகூடலானது நல்ல சாப்பாடு, குளிர்கழி, கோப்பியுடன் அது நிறைவுக்குவரும். அதற்கிடையே அங்கு வருபவர்கள் தாம் அறிந்தவிடயங்கள், நகைச்சுவைகள், போட்டி நிகழ்வுகள், பாடல் போட்டிகள் என எல்லாவிதமான பொழுதுபோக்கு விடயங்களையும் தமக்கிடையே பகிர்ந்து அந்தநாளை ஒரு மகிழ்வான நாளாக மாற்றிவிடுவார்கள்.

இதில் தவேந்திரனின் பங்கும் இன்றியமையாததாக இருக்கும்.

Bingo என்கின்ற நினைவாற்றலையும் வேகம் மற்றும் விவேகத்தையும் பரிசோதிக்கும் போட்டி விளையாட்டுக்கான சகல உபகரணங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டிலிருந்து எடுத்து வருவதுடன் அதில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்களையும் தானே ஒழுங்குசெய்து அந்தப் போட்டி நிகழ்வைச் சிறப்பாக நடாத்துவார். அதிற்கூட நாம் ஏதாவது சிறு சிறு குழப்பங்களை ஏற்படுத்தினாலும் ஒரு புன்முறுவலுடன் எல்லாம் ஒரு விளையாட்டுத்தானே என எல்லோரையும் சமாளித்துப்போகும் நல்ல மனம் படைத்தவர் இவர்.

நோர்வேயில் மட்டுமல்லாது தாயகத்திலும் பல பொதுப்பணிக்காக அவர் செலவழித்த நேரங்கள் கணக்கில் அடங்காது. எதனையும் செவ்வனே செய்துமுடிப்பதில் வல்லவர்.

இவர் விமானத் தொழில்நுட்பத்துறையில் நீரியல் (Hydraulic) பிரிவில் சிறப்புத்தேர்ச்சி பெற்று, *Hydraulic* பொருட்களுக்குப் பிரபல்யமான Parker Hannifin AS நிறுவனத்தில் பல ஆண்டுகளாக உயர் தொழில்நுட்ப அதிகாரியாகத் தொழில்புரிந்துள்ளார்.

தாயகப் பயணங்களின்போது யாழ். பல்கலைக்கழகத்திலும் நீரியல் துறை மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளையும், தொழில்நுட்ப அறிவுப்பரிமாற்றங்களையும் நடாத்தியிருக்கின்றார்.

இவர் கடந்த பல ஆண்டுகளாக நோர்வே தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகத்தில் தலைவராகவும், உப தலைவராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும் கடமையாற்றியிருக்கின்றார். தமிழ்ச் சங்க வருடாந்த நிகழ்வுகளான ஆண்டுவிழா, விளையாட்டுப்போட்டிகள், இசைநடன நிகழ்வுகளென அனைத்துச் செயற்பாடுகளிலும் இவரது கடினஉழைப்பு இருந்தே வந்துள்ளது. தமிழ்ச் சங்கத்தின் இன்றைய வளர்ச்சியில் தவேந்திரனின் பங்கு அளப்பரியது.

இவர் ஆன்மிகத்திலும் நம்பிக்கை கொண்டவர். ஒஸ்லோவில் அமைந்துள்ள சிவசுப்பிரமணிய ஆலயத்தின் ஆடி அமாவாசைத் தீர்த்தத்திருவிழா வெகுவிமர்சையாக இடம்பெறுவது வழக்கம். இந்நிகழ்வின் போது குளத்தினுள் பந்தல் இடுவது, குளக்கரையில் இசை நிகழ்வுகளை ஒருங்கமைத்து நடாத்துவது இவரது பணியாக இருந்ததை நாம் அவதானித்திருக்கிறோம்.

மொத்தத்தில் ஒரு நல்ல மனிதராக, ஒரு கௌரவமான வாழ்வு வாழ்ந்து இவ்வுலகைவிட்டுச் சென்றுள்ளார் எம் தவேந்திரன். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திப்போம்...

---

***காசிநாதன் நிர்மலநாதன் :***

***நோர்வேயில் நீண்டகால கல்விச் சமூகச்செயற்பாட்டாளர்.***

***50+ நண்பர் வட்டக்குழுவின் இணைப்பாளர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதங்களின் அற்புதம்

**- மயில்வாகனம் அமரசிங்கம்**

உயர்ந்த கொள்கைகளோடு சிறப்புற வாழ்ந்து, இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டிருக்கும் அமரர் கு. தவேந்திரனின் பிரிவு, அன்னாரின் குடும்பத்தவர், உறவினர்கள், நண்பர்களுக்கு மட்டுமின்றி நோர்வேவாழ் தமிழ்ச் சமூகத்துக்கும், குறிப்பாக எமது தாய்மண்ணுக்கும் ஏற்பட்டிருக்கும் பேரிழப்பாகும்.

அமரர் கு.தவேந்திரன் ஓர் அற்புதமான மனிதர். எனக்கு நெருங்கிய நண்பர் மூலம் சில வருடங்களுக்கு முன்பே இவரின் அறிமுகம் கிடைத்தது. பார்த்த மாத்திரத்திலேயே, அமைதியும் சாந்தமும் குடிகொண்டிருந்த அந்த முகத்தில் இழையோடிய புன்னகையானது, ஒரு தெளிந்த துறவியின் சலனமில்லாத அருட்பார்வையின் சக்தியைப் போல் என் மனதை ஊடுருவிச் சென்றது. அவரோடு பழகும் பல சந்தர்ப்பங்களின் போது, அந்த மனிதனுக்குள் நிரம்பி வழியும் நிறைவும், பூரணத்துவமும் பலவேளைகளில் என்னை ஆச்சரியமூட்டும்.

தன்னை முதன்மைப்படுத்தியோ, முன்நிலைப்படுத்தியோ காரியம் ஆற்றாத உயர்குணமும், அடையாளப்படுத்த விரும்பாத ஆற்றலும் அவருள் ஊறிக்கிடக்கும். எடுத்த காரியத்துக்காக திறம்பட உழைக்கும் செயல்திறனும், தடை கண்டு தளராத வல்லமையும் அவரின் தனிச்சிறப்பு.

தமிழ்ச் சமூகத்தின் இடர் நீக்க, தன்னால் முடிந்தவரை சிறிதாகவும் பெரிதாகவும் அமரர் எடுத்துச் செயல்படுத்திய திட்டங்கள் விரலெண்ணிக்கைக்குள் அடங்காதவை.

தான் செய்யும் உதவிகளுக்குத் தலைப்பிட்டுச் சாயம் பூசத் தெரியாத மாமனிதர். உயர்ந்த இலட்சியக் கனவுகளால் வடித்து வார்த்தெடுக்கப்பட்ட நிறைகுடம்.

எல்லோரையும் கவரக் கணிதம் கற்றிருக்கும் காலன், இந்த இனிய மனிதர் மீதும் தன் வலைவிரித்து விரைவில் கவர்ந்துவிட்டிருப்பது சற்றும் எதிர்பாராததொன்று மட்டுமின்றி தாங்கொணாத் துயர் நிறைந்ததுமாகும், இப்பேரிழப்பால் கவலையுற்று வாடும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார், உற்ற நண்பர்கள் அனைவரினதும் துயர் அகல கருணாமூர்த்தியாகிய கந்தக்கடவுளின் பேரருள் கிட்டுவதாக!

---

*மயில்வாகனம் அமரசிங்கம் :*

*முன்னாள் இந்து கலாச்சார மன்றத் தலைவர். சமூக ஆர்வலர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடன்...

**-கேசவராஜின் பிள்ளைகள்**

நெஞ்சம் நிறைந்த நினைவுகளுடனும், ஈர விழிகளுடனும், கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்கின்றோம்...

அரியாலை மண்ணில் பிறந்த அமரர் குகதாசன் தவேந்திரன் அவர்களது மரணச்செய்தியை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக உள்ளோம்.

எமது தந்தையான ந.கேசவராஜ் அவர்களின் சிறு பராய நண்பரான கு.தவேந்திரன் அவர்கள், அரியாலையில் வாழ்ந்த போதும் புலம்பெயர்ந்து சென்ற பின்னரும் எமக்காற்றிய உதவிகள், ஆறுதல்கள் மறக்க முடியாதவை.

புன்னகை பூத்த முகமும், இன்சொற்களாலும் அனைவரையும் கவர்ந்த தவேந்திரன் அவர்கள், அனைவருக்கும் வலிந்து உதவும் குணம் கொண்டவராகவும், அரியாலை மக்கள், நண்பர்கள் அனைவரதும் ஆர்வத்துக்கு ஏற்பவும் , அவர்களின் திறமைக்கு ஏற்பவும் வளங்களை ஒருங்கிணைத்து வழங்கி மேலும் அவர்கள் மேன்மையடைவதற்கு உதவுபவராக இருந்தார். அந்த வகையில் அன்னாரின் இழப்பானது அன்னாரின் குடும்பத்துக்கு மட்டுமல்லாது அரியாலை சமூகம், நண்பர்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

28.04.2019 ல் அரியாலை மக்கள் மன்றம் நோர்வே தமிழர் விருது. 03.10.2019 இல் ஈழம் சினிமாத்துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காக விருது என்பவற்றை தங்களது நண்பரும் எமது தந்தையுமான கேசவராஜ் அவர்களுக்கு பெற்றுக்கொடுத்திருந்தார்.

எமது தந்தையுடன் இணைந்து " குயில் கூடு" என்னும் திரைப்படத்தினை உருவாக்கவும் ,ஈழம் சினிமாத்துறையை மேம்படுத்தவும் விரும்பினார்.. ஆயினும் எமது தந்தையாரின் இழப்பானது அம்முயற்சியை இடைநிறுத்தியதாக கூறினார்.

எமது தந்தையை நோர்வேக்கு அழைத்து அவருக்கு வழங்கிய ஆதரவு , தங்களின் மனைவியின் அன்பான ஆதரவான விருந்தோம்பல் ஆகியன தொடர்பாக எமது தந்தையார் இறுதிவரை கூறி மகிழ்ந்திருந்தார். எமது தந்தையார் இறக்கும் தறுவாயில் தமது சுய நினைவை இழந்த நிலையில் தம்மையறியாமலே தமது நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடுவது போல உரையாடினார். அதில் அவர் இறுதியாக கூறிய பெயர் தவேந்திரனுடையதே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தந்தையின் இழப்புக்குப்பின்னர் எமது தந்தையாரின் நினைவு நிகழ்வுகளை நடாத்துவதற்கும், எமது தந்தை நினைவாக அறக்கட்டளை ஒன்றை நிறுவுவதற்கும் ஆர்வத்துடன் செயற்பட்டதுடன் தனிபட்ட எமது குடும்பத்தின் கல்வி நலன் மேம்பாட்டுக்காக கணணியையும் வழங்கி உதவினார். அனைத்தையும் விட எமது குடும்பத்திற்கு நல்ல ஆலோசகராக , வழிகாட்டியாகவும் இறுதிவரை இருந்தார்.

தன்னால் பேச முடியாத நிலையிலும் குறுஞ்செய்திகள் ஊடாகவும், வட்சப் ஊடாகவும் சில நிமிடங்கள் சிரமப்பட்டு பேசினார்;. இறுதிவரை தங்களின் நோய் தொடர்பாக எம்மிடம் எத்தகவலும் தெரிவிக்கவில்லை. அருணன் அவர்கள் ஊடாக தங்களது நோய் மற்றும் மரணச் செய்தியை கேட்ட போது ஒருவருட காலத்தினுள் எமது குடும்பத்தை சேர்ந்த இன்னொருத்தரை இழந்த உணர்வே தோன்றியது.

எமது தந்தையாரின் நெருங்கிய நண்பரான கு. தவேந்திரன் அவர்கள் எமது தந்தையாரின் ஓராண்டு நிறைவு காலப்பகுதியில் எம்மை விட்டு பிரிந்து தமது நண்பருடன் இணைந்து விட்டார்.


அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னரின் குடும்பத்தவர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களையும் ஆதரவையும் தெரிவிப்பதுடன் கு.தவேந்திரன் அவர்களது ஆத்மா சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

---

**திரைப்பட இயக்குனர் ந.கேசவராஜ் குடும்பம்.**

**அரியாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ப மறுக்கும் மறைவு

-நளாயினி குகநாதன்

எனது தம்பி போல் பழகிய நண்பன் தவேந்திரன் திடீரென்று எம்மைப் பிரிந்ததனால் ஏற்பட்ட வேதனையை விவரிக்க வார்த்தைகள் இல்லை. அவர் மீண்டும் வரப்போவதில்லை என்ற செய்தி இக்கணம் வரை நம்ப முடியாமலேயே இருக்கிறது.

அவர் இள வயதில் கல்வி கற்ற அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் அவர் கொண்ட அன்பு, பற்று, அதன் வளர்ச்சியில் அவர் கொண்ட உண்மையான அக்கறை, ஊரின் முன்னேற்றத்தில் அவரின் பங்களிப்பு, நோர்வே தமிழ் மக்களுக்காக அவர் புரிந்த தன்னலமில்லாத் தொண்டுகள், வசதிகள் குறைந்து வாழும் மக்களிடம் அவர் காட்டிய கருணை என்பன எவரையும் பிரமிக்க வைக்கும்.

அவர் போல் நேர்மை கொண்ட கடின உழைப்பாளியை நான் என்றுமே கண்டதில்லை. பல்துறைத் திறனாளி. கர்ம வீரன். புகழ் விரும்பா த பெருங்குடி மகன். உலகளாவிய ஸ்ரீ பார்வதி அபிவிருத்திச் சபையின் முதல் பொருளாளராக தவேந்திரன் அமர்ந்தது எங்கள் பாக்கியமே. அப்பதவியில் தன் பொறுப்புக்களையும் கடமைகளையும் இரவென்றும் பகலென்றும் பாராமல் சிரத்தையுடன் நிறைவேற்றினார். சபையின் நிதிப் பொறுப்பை தவேந்திரன் ஏற்றுக்கொண்டதனாலேயே இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை வேலைத்திட்டங்களையும் நாம் சாதிக்க முடிந்தது என்று அடித்துக் கூறுவேன். அவரின் கரிசனையான, உற்சாகமான பங்களிப்பை நினைத்துப் பார்த்து, வியப்பும் பெருமிதமும் கொள்கிறேன். சபையின் கட்டமைப்பை வடிவமைப்பதில் Zoom, WhatsApp சந்திப்புகளில் தவேந்திரன் பல மணத்தியாலங்களை செலவிட்டிருந்தார்.

எவ்வளவோ வேலைகள், அர்ப்பணிப்புகள் இருந்தபோதிலும், தவேந்திரன் தன் நூறு சதவீதத்தையும் எங்கள் அமைப்புக்கு தந்திருந்தார். உடல்நிலை நலிந்திருந்த நாட்களில்கூட தவேந்திரன் சபையின் கணக்குகளைப் பராமரித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பார்வதி பாடசாலைக்கு அவர் செய்த தயாளச் செயல்களில் சிலவற்றை மட்டுமே இங்கு கூறுகிறேன்.

1. அதிபர் பொன்னையா நடராசாவின் காலங்களில் பாடசாலைக்குப் பல மடிக் கணினிகளை வழங்கினார்.

2. சில வருடங்களின் முன் தனது மகள் டிசாந்தியின் பங்களிப்புடன் அவ்விஞ்ஞான கூடத்தை புனருத்தாரணம் செய்து கொடுத்ததுடன் புதிய தளபாடங்களையும், டிஜிற்றல் *Projector* ஒன்றையும் வாங்கிக் கொடுத்திருந்தார். இது எமது சபை தொடங்குவதற்கு முன்.

3. கடந்த வருடம் *Photo copier* ஒன்றை கொள்வனவு செய்யவும், வளாகத்தை துப்பரவாக வைத்திருக்க ஒருவரை பணியமர்த்தவும் உதவி செய்தார். மேலும் தனது பாடசாலையின் முகப்புப் பக்கம், ஆய்வுகூடம், மனையியல் கூடம் என்பவற்றுக்கு வண்ணத் தீந்தைப் பூசிக் கொடுத்தார்.

4. சபைக்குரிய சின்னத்தை வடிவமைத்ததுடன் அதனை *Letterheaed* ஐயும் வடிவமைத்துத் தந்தார்.

அண்மையில் என்னையும் என் மகன் கணேஷ் ஐயும் தன் வீட்டில் அன்புடன் வரவேற்று எங்கள் அமைப்பின் புதிய முன்னேற்றங்களைப் பற்றி ஆவலுடனும் அக்கறையுடனும் அளவளாவினார். குடும்பத்தினர் அனைவரும் எங்களுடன் மிகுந்த பாசத்துடனும் பழகினார்கள். என்னுடன் மேலும் பணியாற்ற முடியாதது தனது துரதிர்ஷ்டம் என்று தவேந்திரன் என்னிடம் கூறினார். நானோ, நாம் ஒப்புக்கொண்ட பணிகளைத் தொடர தவேந்திரன் எங்கள் குழுவில் இல்லாதது எங்கள் துரதிர்ஷ்டம் அல்லவா என்று நினைத்துக்கொண்டேன்.

நான் மட்டுமல்ல, அவருடன் பழகிய எல்லோருமே அவரின் இழப்பால் நொந்துபோயிருக்கிறோம். மனைவி மேஹலாவுக்கும் மகள்கள் ஜீவந்தி, டிஷாந்தி, துஷாந்திக்கும் குடும்ப உறவினருக்கும் தனிப்பட்ட முறையிலும் சபையின் சார்பாகவும் இதயத்தின் ஆழங்களிலிருந்து வரும் என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மரணங்கள் வருவது தவிர்க்க முடியாததுதான். ஆனால் தவேந்திரனின் மரணம் என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாதது.

அவரின் நினைவுகள் என்றும் என் மனதில் ஆழப்பதிந்திருக்கும்.

---

**நளாயினி குகநாதன்**

**அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசால அபிவிருத்திச் சங்கத் தலைவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யும் தர்மம் தலை காக்கும்

-தாரணி மகாலிங்கம்

தவேந்திரன் அவர்கள் சிறு வயதில் தனது ஆரம்பக்கல்வியை உலகளாவி வாழும் சில நண்பர்களுடனும், என்னுடனும் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர்கோயிலுக்கு அருகிலுள்ள அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலேயே பயின்றார். கோயிலில் பின் வீதியில் நாம் சிறு பிள்ளைகளாக சேர்ந்து ஓடி விளையாடிய நாட்களையும், பாடசாலையிலிருந்து வரிசையாக கூடிச்சென்று நாம் கரம் கூப்பி எம் விநாயகரைத் தொழுத காலத்தையும் நினைத்து இன்று கண்களில் கண்ணீர் மல்கிறது.

அரியாலை ஒன்றியத்தில் அமரர் கு. தவேந்திரன் அவர்களுடன் நாம் பலர் ஒருங்கே எமதூர் கல்விமான்களால் ஓய்வுநேரக் கல்வி புகட்டப்பட்டவர்கள். மேலும் நாம் புலம் பெயர்ந்த நாடுகளிலும் பல்துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் ஆனோம்.

நாம் சிறுவயதிலிருந்தே தவேந்திரனுடனும், அவரின் சகோதர சகோதரிகளுடன் ஓடியாடி விளையாடித் திரிந்தவர்கள் மட்டுமன்றி அவரின் நெருங்கிய உறவினர்களும் கூட. அவர் நோர்வேயில் வசித்து வந்த காலங்களிலும் அவருடன் எமக்கு அதீத தொடர்புகள் இருந்தது.மறக்க முடியாத தருணங்கள் அவை. நாம் துரொண்யம் என்னும் நகரிலிருந்து பாரும் (*Baerum*) என்ற இடத்திற்கு (அமரர் தவேந்திரன்குடும்பம் வாழ்ந்து வந்த இடம்) இடம் பெயர்ந்த போதும், நான் எனது கணவரையும், எனது அம்மாவையும் இழந்து நிர்க்கதியாய் நின்ற போதும் அடுத்த கணமே ஓடோடி வந்து உரிய உதவிகளைச் செய்து எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஆறுதலாக இருந்தவர்கள் அமரர் கு. தவேந்திரனும்அவரது பாரியாருமே. எனக்கு சகோதரன் இல்லாத குறையை தீர்த்து வைத்தவர் என்றால் அது அமரர் தவேந்திரன் என்னுடன் பழகிய பாசமே. எமக்கும் எமது குடும்பத்திற்கும் அமரர் தவேந்திரன் செய்த உதவிகள் சொல்லி முடியாதவை, எண்ணிலடங்காதவை.

நாம் ஆவலாக முன்னின்று செய்த உதவித்திட்டங்களான அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் பூந்தோட்டம், அரியாலை இந்து மாமன்றத்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்படும்கோயில் பிரசங்கங்கள் போன்ற சிறிய உதவிஅமைப்புகளுக்கு வலைத்தளங்கள்அமைத்துத் தந்து காசுப் பொறுப்பாளராக அவர் என்னுடன் கை கோர்த்து நின்று உதவிய பெருந்தகை. அத்துடன்அரியாலை சரஸ்வதி, அரியாலை மக்கள் மன்றம் நோர்வே போன்ற அமைப்புகளிலும் நாம் ஒன்று சேர்ந்து பணியாற்றியிருந்தோம். நாம் இறுதியாக 2019 ஆவணி மாதம் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் திருவிழாவில் சந்தித்தபோது "இப்படி இங்கு இருந்து பிரசங்கம் கேட்க எவ்வளவு சந்தோஷமாகவுள்ளது. நாங்கள் இனி ஒவ்வொரு வருடமும் திருவிழாவிற்கு வருவோம் தாரணி" என்று தன் மனைவியுடன் சேர்ந்து நின்று அவர் கூறும்போது அவரின் சந்தோசத்தின் உச்சக்கட்டம் அவர் கண்களில் பிரதிபலித்ததைக் கண்டேன். அதன்பின்னர் இரண்டு வருடங்கள் கொரோணா எமது சந்தோசத்தைப் பறித்துக் கொண்டது. கொரோணாவை மெல்லமெல்ல விரட்டி விடுவோம் என்ற உறுதியோடு இவ் வருடம் எமது விருப்பம் நிறைவேறும் என்று எண்ணியிருக்கும் தருணத்தில் வீழ்ந்ததே ஓர் பேரிடி!!! சமூக நலனினில் அக்கரையும் தூர நோக்குச் சிந்தனையும், அமைதியானதோற்றமும், மலர்ந்த முகமும் கொண்ட எமது தவேந்திரனின்

சொல்லொணாஇழப்பு!!! இவ்வளவு ஓர்குறுகிய காலத்தில்தவேந்திரனை இழப்போம் என்று யாம் கனவிலும் கண்டதில்லை. அவர்களின் இழப்பு எம்மைக் கதி கலங்க வைத்துள்ளது.இத்தகைய பாரிய பணிகளை சிறப்பாக நடத்திவரும் வேளையில் எமன் ஏன்தான் இவரை கொள்ளை கொண்டானோ என்று நினைக்க...மனம் ஆறுதல் பெற மறுக்கின்றது.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரின் மனைவி பிள்ளைகள், சகோதர சகோதரிகள் அனைவருக்கும், உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவன்பாதங்களைப் பற்றி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

---

**தாரணி :**

**அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசால அபிவிருத்திச் சங்கதின் நோர்வேக் கிளைப்பொறுப்பாளர். தவேந்திரனை பால்யகாலத்தில் இருந்தே நன்கு அறிந்தவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பியின் இழப்பு

-க.ரவீந்திரன்

என் குடும்பத்தின் சார்பில் தவேந்திரன் குடும்பத்திற்கு என் ஆழ்ந்த அனுதாபங்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு வயது முதல், அரியாலையில் சின்னத் தம்பியுடன் களித்த நாட்கள் என்றும் இன்ப நினைவுகளைத் தருபவை.

சிறு வயதில் சாந்தமான, கொடுத்துதவும் மனப்பக்குவமுடைய, சிந்தித்து செயல்படும் சிறுவனாக வலம் வந்த சின்னத்தம்பிக்கு, பிற்காலத்தில் அதுவே அவரது குணாதிசியமாக மாறியது.

மூன்று வருடங்களுக்கு முன் அவரை மீண்டும் அரியாலையில் சந்திக்க நேர்ந்த போது, அவரது மனமும் சிந்தனையும், தான் வாழ்நாள் முழுதும் பொதுச்சேவை செய்துதவிய அரியாலையிலேயே இருந்ததை உணர்ந்தேன்.

ஆனால், சிந்தனையில் மட்டுமின்றி, செயல் வீரனாகவும் திகழ்ந்து, தமிழ் சமுதாயத்திற்கு

நிதி உதவி செய்தும், பல்வேறு வழிகளில் அவர்கள் வாழ்வு மேம்பட நிதி சேகரித்தும் அவர் ஆற்றிய அளப்பரிய பணி, எம் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று நிலைக்கும்.

உலகெங்கும் வாழும் அவருடைய நண்பர்களாகிய நாம், அவர் பணி தொடர

அவருக்கு பெருமை சேர்க்க வழிவகுப்போம் என்று உறுதி கொள்கிவோம்.

---

**க.ரவீந்திரன் - மெல்பேர்ன் - அவுஸ்திரேலியா - பால்யகால நண்பர், ஊரில் அயலவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையுடன் கூடிய வாழ்வு

**-சுந்தர் கணேசன் (குட்டி மாஸ்டர்)**

சிரித்த முகத்தினையே, தனது 'முத்திரை' யாகக் கொண்டு வாழ்ந்தவர் தான் தவேந்திரன்.நோர்வேயில் பலரின் நட்பை தனதாக்கியவர்.

நோர்வே தமிழ்ச்சங்கத்தின் மூலம், கடந்த 15 வருடமாக அவருடன் தொடர்பில் இருந்திருக்கிறேன். நமது தொடர்புகள், பேச்சு வார்த்தைகள் முற்றும் முழுதாக இளைஞர்களின் எதிர்கால இசை சம்பந்தமாகவே இருந்திருக்கிறது. இங்குள்ள இளைஞர்களை வைத்து இசைக்குழுக்கள் அமைக்கவேண்டும் என்ற அவாஅவரிடம் எப்பவும் இருந்துகொண்டே இருந்தது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்ச்சங்கத்தில் ஒரு இசைப்பயிற்சிக்கான ஒரு இடமும், அதற்கு உதவியாக ஒரு ஒலிப்பதிவுக் கூடமும் அமைவதற்கு மிகவும் முன்னின்று உழைத்தவர்.

சென்ற வருடம் பங்குனி மாதம் ஒரு 10-15 நிமிடங்கள் என்னுடனும் எனது மனைவியுடனும் தொலைபேசியில் கதைத்திருந்தார். அதற்குள் அவர் சுமார் 25-30 தடைவைகள் இருமியிருந்தார். நானும் அது ஏன் என்று கடுமையாக விசாரிக்கவில்லை. ஏனெனில் நமக்கு மிகவும் பரிச்சியமான கொரோனாவின் பாதிப்பு என்று நினைத்து விட்டேன். அதுதான் கடைசிப்பாதையின் அறிகுறி என்று கனவிலும் நினைக்கவில்லை. எமது மனதில் அந்த சத்தம் இன்னமும் அகலவில்லை.

அவரது இசை சம்பந்தமான ஆசையை நிறைவேற்றி, அவரது ஆத்மா சாந்தியடைய வைப்போம்.

---

***சுந்தர் கணேசன் (குட்டி மாஸ்டர்) :***

***நோர்வேயில் 30 வருடங்களுக்கு மேலாக இசைத்துறையில் இயங்கிவருபவர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தவேந்திரனுக்கான அஞ்சலி

**-இரவிக்குமார் திருச்செல்வம்**

ஓர் மனிதனின் நற்செயற்பாடுகளை நினைவாகப் பகிரும்போது, அவரின் உணர்வுகளுக்குள் அடங்கிக் கிடந்த நற்சிந்தனைகளையும் கூறாமல் கடப்பதென்பது நல்லதல்ல.

தவேந்திரன் !

தனிப்பட்ட வாழ்க்கையில் யார் எவர் வந்து, எதைக் கேட்டாலும் இல்லை, முடியாது என்ற வார்த்தைகளை உதிர்க்கத் தெரியாத ஓர் மனிதர், இதன் பால் எமக்குள் ஓர் உள்ளார்ந்த ஒற்றுமையும் இருந்து கொண்டே இருந்தது. அதற்கும் மேல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவர் யாரையும் எதிர்த்துப் பேசுவதைக் கண்டதில்லை. அவர் என்ன கேட்டாலும் நான் மறுத்ததில்லை, நான் என்ன கேட்டாலும் அவர் .மறுத்ததும் இல்லை, ஆனால் எமக்குள் உதவி கேட்டல் மிக மிக அரிதானதே. எது முடியாவிட்டாலும் முயற்சி எடுத்துத் தோற்ற சில சந்தர்ப்பங்களில் நான் அவரை ஓர் சிறந்த வீரனாகவே பார்த்தேன்.

இன்றுவரை Ribm கல்வி நிறுவனம் சன்விக்கா இல் நடைபெறும் இடம், அவரின் பெரும் முயற்சியால் கிடைத்தது தான் (2007 முதல்), இதில் எனக்கு ஓர் இடம் தேவை என்றதும் தானாகவே முன்வந்து ஒழுங்கு செய்தார். அந்த இடம் இன்றுவரை வகுப்பு நடத்தக் கூடியதாக இருப்பதற்கு தவேந்திரன் அவர்களே முழு முதல் காரணம்.

பல மறக்க முடியாத சந்தர்ப்பங்கள் அவரோடு இருந்தாலும் சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்,

என் வாழ்நாளில் நான் இன்றுவரை முதல் முதலாக ஓர் சிறு இயந்திரப் படகை நானே இயக்கி வேகமாகக் கடலில் செலுத்தியது, அவருடைய படகுதான்.நீங்களே செலுத்துங்கள் என்றார்.நான் செலுத்த ஆரம்பித்தவுடனேயே உங்கள் தொலைபேசியைத் தாங்கோ நான் வீடியோ எடுக்கின்றேன் என்று வாங்கி, என் மனதில் இருந்த சிறு ஆசையை உணர்ந்து, கவனம் கவனம் மெதுவாக என்றவாரே என் முதல் முதலான முரட்டு ஓட்டத்தைச் சகித்தபடி என் விருப்பை நிறைவேற்றினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நாள் என்னை அழைத்து *Hydraulik power* விடயமாக நாம் தமிழில் குறிப்பாக இலங்கை மக்களுக்கு விளக்கங்களை வீடியோ வடிவில் வெளிவிடவேண்டும் உதவ முடியுமா என்றார். நீங்கள் தருவதை, சொல்வதை நான் தொகுத்துத் தருகின்றேன் என்று ஆரம்பித்து சஞ்சயன், தங்கன் ஆகியோரின் உதவியுடன் ஓர் வீடியோவை வெளியிட்டார்.

இக் கொரோனா காலத்திலும் எதாவது கலைகள் விடயமாக செய்வோம் என்று முடிவு செய்து நானும் அவரும் பாடல்கள் பாடும் இளையோர்களை அழைத்து, அவர்கள் பாடும் போது பல இயற்கையான இடங்களில் காட்சிப் படுத்த என சில திடங்களை வகுத்து முதல் கட்டமாக, அதற்கான பொருள்கள் வாங்கினோம்.கால தாமதங்கள் பல காரணங்களால் இருந்து கொண்டே வந்தது.

*Ribm* இன் எல்லா நிகழ்ச்சியிலும் ஆரம்பம் முதல் இறுதிவரை நின்று உதவியவர்களுள் தவேந்திரன் அவர்களே முதலானவர், எல்லாவற்றையும் அவராகவே செய்வார். *Ribm* இன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முதல் பக்திப் பாடல் அவரின் மகளே பாடுவாள் என்பது எனக்கும் அவருக்கும் உள்ள, எழுதப் படாத ஓர் ஒப்பந்தம், என் விருப்பின் பேரிலேயே இருந்தது.

தவேந்திரன் அவர்கள் எந்தவித இன, மத, ஊர்,நாட்டு வேற்றுமைகளும் இன்றி எல்லாரையும் ஒரேமாதிரியாகப் பார்க்கக் கூடியவர், மற்றும் உதவக் கூடியவர். இதற்காக வெளியில் உதாரணங்கள் தேடத் தேவையில்லை, கீழ்வீட்டில் வசிக்கும் வேற்று நாட்டவர்க்கு தவேந்திரனின் மரணச் செய்தியை சொன்னபோது அவர் வலம் விம்பி அழுதார். தவேந்திரன் எவ்வாறு அவர்களை நடத்திப் பழகி இருக்கின்றார் என்பதை நொடிப்பொழுதிலேயே உணர்ந்து கொண்டேன்.

உங்கள் பணிகள் தொடர உங்கள் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். உங்கள் பிள்ளைகளிடம் உள்ளூரப் பல சாதிக்கும் தன்மைகள் உண்டு, எனவே அமைதியாக ஆழ்ந்து நிம்மதியாக உறங்குங்கள் தவேந்திரன்.

ஒன்றாக காரில் பயணித்தோம், உங்கள் சிறு படகில் பயணித்தோம், மீன் பிடித்தோம், கடைத் தெருக்களில் சிற்றுண்டி சுவைத்தோம், கலை நிகழ்வுகளில் கலந்தோம், கல கலப்பாக பேசி மகிழ்ந்தோம், கலைகளின் இரசிகனே!, சிறந்த பாடகியாக ஒரு மகளையும், அதிசிறந்த ஓர் நடனக் கலை நாயகியாக ஓர் மகளையும், நாட்டையும் வீட்டையும் காக்கக் கூடிய மனத்தைரியம் கொண்ட கடைசி மகளையும் உருவாக்கிச் சென்றுள்ளீர்கள்.

ஓயாமல் பல தொண்டுகள் செய்ய உழைத்தவரே !ஆழ்ந்து உறங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

---

**இரவிக்குமார் திருச்செல்வம் : நோர்வே *Ribm* கல்வி நிறுவனத்தின் இயக்குனர் ஆசிரியர், தவேந்திரத்தின் பிள்ளைகளின் கணித ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓளிர்ந்த வழிகாட்டி அணைந்ததேனோ அண்ணலே

-சுரேன் நடராஜா

"இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்

பெருமை பிறங்கிற்று உலகு"

அரியாலை மண் பெருமையோடு பெற்றெடுத்த அருந்தவப் புதல்வன் அமரர் குககதாசன் தவேந்திரன் அவர்களுடன் எனக்கு இருந்த தொடர்பை வார்த்தைகளால் கூற முடியாது. இது 2013ம் ஆண்டில் இருந்து அமரர் இறைவனடி சேரும் வரை என்றால் மிகையாகாது.

அன்னார் அரியாலை தாய் மடியில் தவழ்ந்து வந்த வேளை காலத்தின் தேவை கருதி புலம் பெயர்ந்து நோர்வே நாட்டில் தூய சிந்தனைகளோடு வாழ்ந்து வந்தாலும் தாய் மண்ணில் மீது கொண்ட மிகையான பற்று காரணமாக அரியாலை மண்ணின் அற்புதத்தை வெளிப்படுத்தும் கலை, கல்வி, விளையாட்டு, சமூக சேவை மற்றும் புத்துருவாக்க செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்து முன்னுதாரணமாக திகழ்ந்தவர்.

மேலும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் செய்து வரும் பல்வேறுபட்ட வினைத்திறனான அபிவிருத்தி திட்டங்களின் வெற்றிகளிற்கு காரணகர்த்தாவாக திகழ்ந்தது மட்டுமல்லாமல் காலத்தின் தேவையால் நோர்வே நாட்டில் உருவாக்கப்பட்ட அரியாலை சரஸ்வதியின் நோர்வே கிளை அமைப்பின் ஸ்தாபகர்களில் அன்னாரும் ஒருவராக மிளிர்ந்தவர்.

2013ம் ஆண்டு தொடக்கம் 2021ம் ஆண்டு வரை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து மட்டுமல்லாமல் நோர்வே நாட்டிலும் எமது சரஸ்வதி சனசமூக நிலையம் சார்ந்த அனைவரையும் ஒன்றிணைத்து கல்வி தொடர்பான பல்வேறுபட்ட செயற்பாடுகள், கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் ஆயுள் அங்கத்தவர்களை புதிதாக இணைத்தல் போன்ற செயற்பாடுகளை வினைத்திறனாக செய்ததோடு மாணவர்களுக்கான கணணி தொடர்பான அறிவாற்றலை வளர்க்கும் செயற்பாடுகளிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

நிலையத்தில் நடைபெறும் செயற்பாடுகளுக்கான நோர்வே நாட்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நிதி சேகரித்தல், ஆலோசனை வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற செயற்பாடுகளில் முன்னின்று உழைத்த நபர்களில் அன்னாரும் ஒருவர் ஆவார். அக் காலப்பகுதியில் அன்னாருக்கும் எனக்குமிடையில் தொலைபேசி வாயிலாகவும், அரியாலைக்கு வரும் போது நேரடியாகவும் சிறந்த தொடர்பு, நட்பாக உருவெடுத்து காணப்பட்டது.

சரஸ்வதி சனசமூக நிலைய கலை நிகழ்வுகளின் போது தென்னிந்திய கலைஞர்களை எம் அரியாலை மண்ணிற்கு அறிமுகம் செய்தவர்களில் அன்னாரும் ஒருவராவர். கலையின் மீது கொண்ட அதீத பற்று காரணமாக தனது பிள்ளைகளை பல்துறை கலாவித்தகர்களாக வளர்த்தெடுத்து உள்ளார்.அன்னாரது பிள்ளைகள் அரியாலையின் பல மேடைகளில் தமது பல்திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கலை நிகழ்வுகளிலும், அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா கலை நிகழ்வுகளிலும் தமது கலைத்திறமைகளை மிகையாக வெளிப்படுத்தி ரசிகர்களின் மனங்களில் இடம் பிடித்தமை பெருமைக்குரிய விடயமே. அது மட்டுமல்லாமல் அன்னாரது பிள்ளைகள் புலம் பெயர் தேசத்தில் பிறந்து அந் நாட்டு கலாச்சாரத்தில் வளர்ந்திருந்தாலும் எமது ஊரின் கலாச்சாரம், பராம்பரியம், விழுமியங்களை முறையாகக் கற்பித்து வழிநடத்தியதோடு எமது ஊரிலே நடைபெறுகின்ற கலை நிகழ்வுகளிலும் ஏனைய செயற்பாடுகளிலும் அன்னாரது பிள்ளைகள் பங்குபற்றி அடுத்த தலைமுறைக்கு முன்னுதாரணமாக இருக்கின்ற பெருமை வழிநடத்திய அன்னாரையே சாரும்.

அன்னாரின் இழப்பு அன்னாரின் குடும்பத்திற்கும், அரியாலை மண்ணிற்கும், சமூக அமைப்புகளிற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

---

**சுரேன் நடராஜா**

**முன்னாள் பொருளாளர் - அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මගේ අංකය
எமது இல.
My Number

ඔබේ අංකය
உமது இல.
Your Number

යාපනය විශ්වවිද්‍යාලය - ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
UNIVERSITY OF JAFFNA - SRI LANKA

ඉංජිනේරු පීඨය பொறியியற்பீடம் FACULTY OF ENGINEERING

අරිවියල් නගර්,
කිලිනොච්චි
அறிவியல் நகர்.
கிளிநொச்சி
Ariviyal Nagar,
Kilinochchi

January 31, 2022

Condolence message

On behalf of Department of Interdisciplinary studies, Faculty of Engineering, university of Jaffna, I would like to offer our sincere sympathies on the death of our well wisher, late Mr. Thabendran. Mr. Thabendran was a highly respected and valuable contributor to our department. Mr. Thabendran set an example that will continue to be an inspiration to us all.

Yours sincerely,

P. Kathirgamanathan,
Head, Dept. of Interdisciplinary studies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிய நினைவுகள்

தவேந்திரன் அவர்களுடைய சமூகத் தொண்டுகளைப் பற்றி பலரும் வியந்து பாராட்டுவதை இந்த நூலில் நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள். இத்தகைய ஒரு சமூக ஆர்வலன் எங்கு, எப்படி உருவாகினான்?

*1970 களில் யாழ் அரியாலையில் 15 லிருந்து 18 வயதிற்கு உட்பட்ட ஒரு இளைஞர் / யுவதிகள் ( Teenager's ) குழுவொன்று ஒரு சமூகத் தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்தனர்.*

இதுதான் அரியாலை இந்து இளைஞர் ஒன்றியம்.

ஒரு ஐந்தாண்டு காலப்பகுதியில் இளைஞர்களின் கல்வி,சமயம்,கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் இந்நிறுவனம் ஆற்றிய பங்கு அளப்பரியது.

பதினைந்து வயது இளைஞனாக ஒன்றியத்தில் சேர்ந்த தவேந்திரனுக்கு இதுதான் சமூக சேவையின் முதல் அறிமுகம்.

ஒன்றியத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றிய தவேந்திரன் கோவிலை கழுவி சுத்தப்படுத்துவதில் இருந்து ஒன்றிய தண்ணீர் பந்தலில் பக்தர்களை உபசரிப்பது வரை எல்லா காரியங்களிலும் பொறுப்பேற்று செய்வார். அந்த இளம் வயதிலேயே அவரின் பிரத்தியேக குணமாக (outstanding characteristic) விளங்கியது அவருடைய விடா முயற்சி.

எதையாவது செய்வது என்று தீர்மானித்தால் அந்த விடயம் முடியும்வரை தவேந்திரன் ஓய்வதில்லை.

நாட்டு நிலைமையால் கிட்டத்தட்ட எல்லா அங்கத்தவர்களும் யாழ்ப்பாணத்தை விட்டு புலம் பெயர்ந்த பின்னர் நடைபெற்ற ஒன்றியத்தின் கடைசி வாணி விழாவை தவேந்திரன் முன்னின்று நடத்தினார்.

இத்தகைய சேவை அவரின் கடைசி மூச்சு வரை தொடர்ந்தது.

ஒன்றியத்தின் *mission statement* ஆகிய 'பணி என் அணி ' என்பதற்கு எந்நாளும் உதாரணமாக வாழ்ந்து மறைந்தவர் தவேந்திரன்.

எம் நண்பனுடைய குடும்பத்தினருக்கும் மற்றைய நண்பர்களுக்கும் ஒன்றிய உறவுகள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**அ. சுதர்சன், ந. நேதாஜி, ப. ஸ்ரீ ரங்கன், Dr. து ரவிச்சந்திரன், ச,அருணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reg. No: JMC/CC/474 Estd.1919
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
சரஸ்வதி மத்திய நூல் நிலையம்
ARIYALAI SARASWATHY COMMUNITY CENTRE
SARASWATHY CENTRAL LIBRARY
474, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் ariyalaisaraswathicc@gmail.com

# பல்துறையாற்றல் மிக்க சமூக சேவையாளன்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்றும்

பெருமை யுடைத்திவ் வுலகு"

அந்த வகையில் குகதாசன் தவேந்திரன் அவர்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் புலம்பெயர் நாட்டிலிருந்து அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. கிராமத்தில் உள்ள ஏழை மக்களுக்கு தொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்திருந்தமை, சில திட்டங்களுக்களைச் செயற்படுத்துகின்ற போது திட்டங்கள் நிறைவு பெற பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தமை போன்ற பல செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருந்தார். தற்பெருமை, சுயவிளம்பரம் அற்ற ஒரு அற்புதமான மனிதர். வெற்றிகரமான பல பணிகளுக்கு பின்னால் அவர் இருப்பார். தன்னுடைய ஊரவர்களின் வெற்றியிலும் மகிழ்ச்சியிலும் இன்பம் காணும் ஒருவர்.

நோர்வேயில், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கிளையை ஏனைய புலம்பெயர் அரியாலை மக்களுடன் இணைந்து ஸ்தாபித்து அது நல்ல முறையில் செயற்பட சிறப்பாகச் செயற்பட்டவராவார். பல்துறையாற்றல் மிக்க சமூக சேவையாளன் எம்மத்தியில் இருந்து மறைந்தது எமது நிலையத்திற்கும், கிராமத்திற்கும் எப்போதும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவர்களின் துன்ப துயரங்களில் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி...

**பொன்னம்பலம் சகிலன்**

***தலைவர், (103 வது நிர்வாகக் குழு)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்ட பணி தொடர்வோம்

வளங்கள் பல கொண்ட அழகிய ஊராம் அரியாலையில் பிறந்து, ஊரின் மத்தியில் மிடுக்குடன் விளங்கும் தொன்மை மிக்க ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் தனது ஆரம்பக்கல்வியை கற்று, நற்பண்புகளுடன் இறைபக்தியும் கொண்டு வாழ்ந்து வந்த அமரர் குகதாசன் தவேந்திரன் ஊரிலும், புலம் பெயர் நாடான நோர்வேயிலும் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் அரும் பாடுபட்டு உழைத்தார். அவ்வுழைப்பின் விளைவுகளில் ஒன்றுதான் நோர்வேயில் துளிர்விட்டு, லண்டன் வரை படர்ந்து, பின்பு உலகளாவி வளர்ந்து நிற்கும் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அபிவிருத்திச் சபை உலக நாடுகள் என்னும் அமைப்பு.

அதன் முதல் பொருளாளராக சேவை செய்த தவேந்திரனுடன் உழைக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது எம் அதிஷ்டமே. 'இப்படி ஒரு நல்ல மனிதனை இதுவரை நாம் காணவில்லையே! ' என்று எண்ணி வியந்திருக்கிறோம். தூய மனம், நல்ல குணம், இனிய பேச்சு, இறைபக்தி, நேர்மை, சினேகம், இரக்க சுபாவம், மனித நேயம், கடின உழைப்பு, விடாமுயற்சி, அறிவில் கூர்மை, கலைகளில் ஆர்வம், சமூக நலத்தில் நாட்டம், முற்போக்கு சிந்தனை... இப்படி கூறிக்கொண்டே போகலாம் தவேந்திரனின்பண்புகளை.

இந்தச்சபையின் வளர்ச்சிக்கு தவேந்திரன் காட்டிய அக்கறைக்கும் அர்ப்பணிப்புக்கும் ஈடுமில்லை இணையுமில்லை. அதன் அத்தனை திட்டங்களுக்கும் விவேகமான நல்லாசோசனைகள் வழங்கியதுடன் தன் ஓய்வு நேரத்தையும் செலவிட்டு சபைக்கு நற்பெயரை தேடித்தந்தார். சபையின் கணக்குகளை கச்சிதமாக கணனியில் *Google Sheets* இல் பதிவிட்டு பராமரித்து வந்ததுடன், *Goodle Sheets* மூலம் நிதி திரட்டலை இலகுவாக்கினார். சபையின் ஆறு அறிக்கைகளையும் தொகுத்து வடிவமைத்து வெளியிட்டவர் அவரே. பாடசாலைக்கென ஒரு ஒளிநகலெடுக்கும் இயந்திரத்தை வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்ததுடன், வளாகத்து உள் சுற்றாடலை அழகாகப் பராமரிக்க ஒரு தொழிலாளியையும் கண்டுபிடித்துத் தந்தார். 2004 இலிருந்து, மூன்று அதிபர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, கூட்டுறவாக பாடசாலைக்கு பணி புரிந்து வந்திருக்கிறார்.

அத்தகைய பெருமைக்குரிய ஒரு நற்பண்பாளனை, சமூகப் பற்றாளனை பாடசாலைச் சமூகம் இன்று இழந்து நிற்கிறது. துயர் சூழ்ந்து நிற்கும் இவ்வேளையில் நினைவில் மலரும் அவரின் சிரித்த முகமும் அவர் செய்த சேவைகளினால் விளைந்த பயன்களுமே எம்மை ஆறுதல் அடைய வைக்கின்றன. அவவரின் கனவுகளை நனவாக்குவதே அவர் ஆத்மசாந்திக்கு நாம் செய்யக்கூடிய சமர்ப்பணமாகும்.

வாழ்க தமிழ். வாழ்க ஸ்ரீ பார்வதி. வாழ்க ஸ்ரீ தவேந்திரன் புகழ்!

---

**நளாயினி குகநாதன், தர்மேந்திரா ஜெயசுந்தரா, ஸ்ரீ தேவா மயில்வாகனம், கமலவேணி இராமப்பிள்ள, தாரணி மகாலிங்கம், கணேஷ் (ரமேஷ்) ரவீந்திரன், ஸ்ரீ ரங்கன் பரமநாதன், விமலா சிவம், சுதர்சன் (முருகா) அருளானந்தம், ஸ்ரீராஜலிங்கம் அருளம்பலம்.**

**ஆக்கம் - க.குகநாதன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WeCan
Creative Jobs for Differently Abled
wecancj@gmail.com Reg.No: NP/MN/MW/SS/VOR/WCPWDCJ/28/2(
Address - WE CAN, Veddaiyamurippu, Manthai west, Mannar

# அமரர் தவேந்திரன் அவர்களுக்கு அஞ்சலி

அன்புநிறை புன்னகையும்

கனிவான பேச்சும்

கரம்பற்றி கவலை போக்கும் அன்புள்ளமும்

மாந்தை மேற்கு மாற்றுத் திறனாளிகளையும் எப்போதும் கண்ணுக்குள் வைத்துக் கவசமாய்க் கையாளும் கரிசனையும் நேற்றுப்போல் இருக்கிறது.....

மாற்றுத் திறனாளிகளையும் மானசீகமாக நேசித்து, செய்யும் உதவியை நிறைவாகச் செய்ய வேண்டும் என்று நேரம் செலவிட்டு, கிடைத்த உதவியில் நாம் நிறைவு காண்பதில் நிறைந்தவர் தவேந்திரன் அண்ணா.

மரணம் அவரை எங்களைவிட்டுப் பிரித்தாலும் எங்களுக்குச் செய்த உதவிகள் என்றென்றும் எங்களுடன் வாழும், வலுப்படுத்தும்.

அன்னாரது அன்புமிக்க நினைவுகள் எங்கள் உள்ளங்களில் வாழ்ந்திருக்கும்.

அவரது மரணம் எங்களுக்குச் சொல்லித்தருவது யாதெனில் எப்போதும் எல்லோரையும் நேசியுங்கள், மனித நேயத்தைப் பின்பற்றுங்கள் என்பதே.

அவரது அன்பை எமக்குள்ளும் ஏந்தி வாழ்வோம் என்ற வார்த்தைகளோடு அன்னாரது பாதங்களில் கண்ணீர் பூக்களை காணிக்கை ஆக்குகிறோம்.

அன்னாரது பிரிவால் துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆண்டவரின் ஆறுதல் நிறைவாகக் கிடைக்கவும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும் இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

---

**வெற்றிச் செல்வி**

***WeCan***

**மாந்தை மேற்கு மாற்றுத் திறனாளிகள் அமைப்பு - மன்னார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவேந்திரனை நினைவு கூறுகிறோம்

அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய நோர்வே உறுப்பினரும், எமது நண்பனுமாகிய திரு. தவேந்திரன் குகதாசன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த செய்தி நம்மைப் பெரும் வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது.

தவேந்திரன் அவர்கள் எமது அரியாலை ஊரின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். அத்துடன் நின்று விடாது இலங்கை தீவில் இன மத வேறுபாடு இன்றி வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என்று தனது உதவிக் கரங்களை நீட்டிய மனிதர் தான் தவேந்திரன்

நோர்வேயில் வாழும் தமிழ் மக்களது நலனிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். குறிப்பாக இளைஞர்களின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு நோர்வே தமிழ் சங்கத்தில் செயல்பட்ட மாமனிதர் தவேந்திரன்.

இவர் அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர். தனது சேவை காலங்களில் எந்த வித அரசியல் சாயமும் இன்றி பொது நலத்தில் அக்கறை கொண்டு செயல்பட்டவர். அரியாலை சரஸ்வதி சனசமூகநியைத்தின் வளரச்சிக்கும், நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட சமூக மேம்பாட்டுத்திட்டங்களுக்கும் தொடர்ச்சியாக தனது பங்களிப்புகளை வழங்கியவர் இவர்.

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி. இருப்பினும், காலன் இவருக்கான காலத்தை மிக குறுகியதாக்கி அவரை கூட்டிச் சென்றது, இவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, நோர்வேயிலும் இலங்கையிலும் வாழும் தமிழ் மக்களுக்கு பெருந்துயரைத் தந்திருக்கிறது. நோய்வாய்பட்ட செய்தி கிடைத்து சில மாதகாலங்களில், நோயிலிருந்து மீண்டெழுந்து வருவார் என நாமெல்லாம் எதிர்பார்த்துக் காத்திருந்தவேளையில், தவேந்திரன் மறைந்து விட்டார் என்ற செய்திதான் நம்மை வந்தடைந்து எம்மையெல்லாம் கலங்க வைத்தது. என்ன செய்வது? இயற்கையை வெல்ல எவரால்தான் முடியும்?

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர,நண்பர்களுடன் அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய நோர்வே தன்னை இணைத்துக் கொள்வதுடன், அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் - நோர்வேக் கிளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவேந்திரன் குகதாசன் என்றும் எம்முடன்......!

**- அரியாலை மக்கள் மன்றம் - நோர்வேக் கிளை**

இலங்கைத் திருநாட்டின் சிகரம் போல் விளங்கும் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாகத் திகழும் இயற்கை எழில் மிகு வளம்நிறைந்த அழகிய ஊராக மிளிருகின்றது எமது அரியாலையூர்.

இந்த மண்ணில் உதித்தவர் தான் தவேந்திரன். இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் பின்னர் யாழ் இந்துக்கல்லூரியிலும் கல்விபயின்றார்.

தவேந்திரன் தனது குடும்ப பொறுப்பில் மட்டும் நின்று விடமால் பொது தளங்களிலும் தனது சேவையை செவ்வனே செய்துவந்தார். அந்தவகையில் 2007ம் ஆண்டு அரியாலை மக்கள் மன்றம் நோர்வே ஆரம்பிப்பதற்காக ஒரு சிலர் ஒன்றுகூடிய முதல் சந்திப்பில் இவரும் கலந்து கொண்டார்.

2007 முதல் 2019 வரைக்கும் தெரிவாகியவர்களில் இவரும் ஒருவர். மக்கள் மன்ற செயல்வடிவங்களை கணணிமுறையில் பதிவு செய்ய உறுதுனையாய் இருந்தவர். அந்தவகையில் எமது அங்கத்தவர் விபரங்கள் அடங்கிய பட்டியலை இலகுவாக பதிவு செயய்யக்கூடிய முறையில் வழிவகுத்தார். மன்றத்தின் ஆண்டு விழா திட்டமிடல், கலைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், விழா அழைப்பிதல் தயாரித்தல் போன்ற விடயங்களில் ஆர்வத்துடன் செயற்பட்டவர்..

அரியாலையில் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா பாரம்பரிய கலைநிகழ்வுகளுடன் நடைபெறுவது வழக்கம். 2019ம் ஆண்டு 100வது சுதேசிய திருநாட் கொண்டாட்டவிழா, மக்கள் மன்றம் நோர்வேயின் பங்களிப்புடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதிலும் தவேந்திரன் முழுமனதோடு பங்கெடுத்துக் கொண்டார்.

ஊரை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதில் தவேந்திரன் மிகவும் கரிசனையாக செயல்பட்டவர். தனது ஆரம்பப் பாடசாலையான ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையை புனரமைப்பு செய்வதற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து செயற்பட்டவர்.

ஊருக்கும் தாயக மேம்பாட்டுக்கும் உதவவேண்டும் என்பது இவரது கனவாக இருந்தது. இப்படியான நற்சிந்தனையாளர் அன்பும் பண்பும் உடைய சிறந்த நல்ல உள்ளம் கொண்டவர். எளிதாக பேசிப் பழகக்கூடிய தவேந்திரன் என்றும் எம்முடன்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை உதவும் கரங்களுக்காக

எமது தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து வாழும் அரியாலை அன்பர்கள் சிலரால் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது "அரியாலை உதவும் கரங்கள் அமைப்பு".

எமது தாயகத்தில் உள்ள நலிவுற்றோரின் வாழ்வை மேம்படுத்துவதே இந்த அமைப்பின் குறிக்கோள்

இதை ஆரம்பித்தவர்களில் தவேந்திரனும் ஒருவர். இவரது இழப்பு இந்த அமைப்பின் முக்கிய தூண்களில் ஒன்று சரிந்தது போல் உள்ளது.

இந்த அமைப்பின் சகல வேலை திட்டங்களிலும் தவேந்திரன் பங்களித்தது மட்டும் அல்லாது ஒரு பார்வை அற்ற ஆசிரியைக்கு மடிக்கணினி ஒன்றை தன்னுடைய முழு செலவிலேயே அனுப்பி வைத்தார். தனது அன்பாலும் கரிசனத்தாலும் இவர் இலங்கையில் தான் உதவி புரிந்த பயனாளிகள் இன் உள்ளத்தில் நிறைந்துள்ளார்.

எமது தாய் மண்ணில் நலிவுற்ற வர்களுக்கு ஆக தொழிற்சாலைகளை உருவாக்கி அதன்மூலம் அவர்கள் வாழ்வாதாரம் சிறக்க உதவி புரிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

தவேந்திரனின் ஆசியுடனும் அவரது நினைவுடனும் நாம் அவர் கனவை நினைவாக்க நம்மால் முடிந்த வேலைதிட்டங்களை தொடர்ந்து செய்வோம்.

---

***அவுஸ்திரேலியா - த சற்குமரன், க ரவீந்திரன்***

***நோர்வே- ந நேதாஜி, ச ரமேஷ், ர கணேஷ், தா ஈஸ்வரன், கு புரந்தரன், அ ஜெயேந்திரன்***

***ஜேர்மனி - தா நகுலேஸ்வரன்***

***ஐக்கிய ராஜ்யம் - ச அருணன், Dr து ரவிச்சந்திரன், பா தர்மபாலா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச**
**அரியாலை சமூக அபிவிருத்தி சாங்கம்.**
**International Ariyalai**
**Community Development Society.**
*13, Millaias Gardens Edgware, HA8 5SZ.*

# தவேந்திரன் எனும் தவப்புதல்வன்

மனித வாழ்க்கை எப்பொழுதும் தன்னைக் கடந்து கொண்டிருக்கிற, தனக்கு அப்பால் இருக்கிற முழுமையடையாத ஒன்று. இந்த வாழ்க்கைக்கு மரணம் முற்றுப்புள்ளி வைக்கிறது. ஆனாலும் மரணம் திடீரென வந்து மனித சாத்தியப்பாடுகளை நிறுத்திவிடுகிறது.

தவேந்திரனின் இழப்பும் எமக்கு அப்படித் தான். மனதைச் சிதறடிக்கக்கூடிய, நம்பமுடியாத, ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு. நிறைய ஆசைகளையும் கனவுகளையும் சுமந்து நின்றவர்.

அவர் ஆற்றிய சமூக செயற்பாடுகளின் நீட்சியாகப் பல திட்டங்களைச் செயற்படுத்த நினைத்திருந்தார். காலம் கைகூடி வரவில்லை.

எமது சங்கத்தின் உறுப்பினராக இல்லாத காலத்திலும் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்ததுடன் எமது சங்கம் சர்வதேச சங்கமாக மாற்றம் பெற்ற போது உடனடியாகத் தன்னை அங்கத்தவராகப் பதிவு செய்து ஊக்கமளித்தவர்.

தவேந்திரனின் அர்த்தபூர்வமான தன்மை, அசலான வாழ்வுநிலை, தனிமனித ஆளுமை, எண்ணத்துக்குச் செயலுரு கொடுத்தல் போன்ற குணாதிசயங்கள் அவரை சமூகத்தில் முக்கிய பாத்திரத்தை வகிக்கச் செய்தது. அத்தகைய தோழரை சங்கம் இழந்து நிற்கிறது.

ஓம் சாந்தி

---

**சர்வதேச அரியாலை சமூக அபிவிருத்தி சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# In memory of our dear colleague and friend, Kugathasan Thavendren.

Asker, 31. Januar 2022

Thavendren started his journey in Parker Hannifin in 2007. We were moving headquarters from Langhus/Ski to Asker at the time, which would fit perfect for Thavendren living in Berum. It was quickly apparent that Thavendren knew hydraulics quite well, after spending many years in the company Hydronic AS. Ever since the late 1980's he started out at Hydronic working as a mechanic & technician, with his work consisting of mainly repairs and overhauls, as well as testing hydraulic equipment. The Hydronic company was later sold in an acquisition around the time Thavendren started his journey with Parker. His colleagues from the time, many of them still working in Parker, represented by Thorkild Solberg are quoted: "We remember our dear colleague as a constantly happy, positive, helpful, dutiful, responsible and dedicated co-worker".

With the knowledge Thavendren had built during the 90's and early 2000's - hydraulic became a passion and a profession he mastered. He had contacts all over Europe, and spoke daily the technical language with Germans, Czechs, Polish, Finnish colleagues, in order to offer Parker's customers smart solutions for mainly the oil & gas, and maritime market.

At Parker, Thavendren worked 15 years at Customer Support, and was known for his politeness, kindness, and conscientious behavior. He was truly service minded and was recognized numerous times by our reception calling team, classifying his manner to be outstanding, always available for the customers and showed great hospitality.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




He always had a charming smile and was a colleague that stepped up in difficult times. He was punctual, and consistently including - which was a great inspiration and help for all new employees, especially in Customer Service trade - as he always wanted to share his knowledge and expertise and wanted to develop our employees to get the good team dynamic and cooperation. Eventually Thavendren for the last decade has had great responsibility in Parker, handling amongst our biggest customers.

With his true passion for our technology, and his desire to make both colleagues and customers happy, it is with great regret loosing Thavendren for us in Parker, and he will be immensely missed.


Sincerely,

Customer Support department Norway & all his colleagues at Parker

Edvin Skaali,

Customer Support Leader, Parker Hannifin AB NUF

Parker Hannifin AB NUF Solbråveien 32b, 1383 Asker, www.parker.com/no



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேத் தமிழ்ச்சங்கம்
Norway Tamil Sangam
'ஒற்றுமையே எமது பலம்'
SINCE - 1979

# நினைவுக் குறிப்பு

வாழ்க்கையின் பெரும் பங்கினை, தான் சார்ந்த நிறுவனங்களுக்கும் சமூகத்திற்கும் சற்றேனும் தன்னலமின்றி அர்ப்பணித்து உழைத்து, அந்நிறுவனங்களின் முதுகெலும்பாகத் திகழ்ந்து, அவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி, தனது சேவைபற்றி பெருமை பேசாது தொடர்ந்து உழைக்கும் மிக அபூர்வமான மனிதர்களும் எம்மத்தியில் இருக்கிறார்கள். தவேந்திரன் அப்படியான ஒருவர்.

தவேந்திரன் நோர்வே தமிழ்ச்சங்க நிர்வாகத்தில் பங்குகொண்ட கடந்த ஒன்பது வருடங்களில் நோர்வே தமிழ்ச் சங்கம் பாரிய வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இதன் பின்னணியில் உள்ள அவரது உழைப்பு சாதாரணமானதல்ல. பெருமளவு நேரத்தினையும், சக்தியினையும், உழைப்பையும் அவர் சங்கத்தின் வளர்ச்சிக்காக முதலீடு செய்துள்ளார்.

சங்கத்தின் கலைநிகழ்ச்சிகளில் ஆரம்பித்த அவரது செயற்பாடுகள், பின்பு நாளாந்த அலுவல்கள், விளையாட்டு, சங்கத்தின் தொலைநோக்குச் சிந்தனை, வளர்ச்சி என அனைத்துத் துறைகளிலும் வியாபித்திருக்கிறது.

தமிழ்சங்கத்தின் முக்கிய விடயங்களை முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்கியதுடன், அவை இலத்திரனியல் முறையில் ஆவணப்படுத்தவேண்டும் என்று உழைத்த அவரது பணியின் காரணமாக, இன்று எம்மிடம் ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்குரிய அனைத்து விடயங்களும் பாதுகாப்பாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையின் காரணமாக அண்மையில் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள்பற்றிய அரச கண்காணிப்புக்குழுவின் பரிசோதனையின்போது, எம்மால் மிக இலகுவாகப் பதிலளிக்கக்கூடியதாக

இருந்ததுடன், அவர்களது நம்பிக்கையையும் பெறக்கூடியதாக இருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

*2014*ஆம் ஆண்டு பிரபல நகைச்சுவைக் கலைஞரான குட்டி ஹரியை அழைத்து, மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் ஆரம்பித்த பயணம்... இறுதிக்காலங்கள் வரை பெருங் கலைநிகழ்வுகளை ஒஸ்லோ நகரத்தின் பாரிய கலையரங்குகளில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துவதற்கு உழைத்தவர்களில் தவேந்திரன் முதன்மையானவர்.

நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையை விட, நிகழ்ச்சிகளின் தரத்திலும் உள்ளடக்கத்திலும் மிகுந்த கவனத்தைச் செலுத்துபவர் அவர். நேரம் தவறாது நிகழ்வுகளை ஆரம்பிப்பதிலும், நேரக் கட்டுப்பாட்டைப் பேணுவதிலும் மிகுந்த இறுக்கத்தினைக் கடைப்பிடிப்பவர்.

இளையோர் மத்தியில் இசை ஆவர்த்தினை ஏற்படுத்துவதற்காக உருவாகக்கபட்ட ஒலிப்பதிவுக்கூடம், பயிற்சிக்கூடம் ஆகிய திட்டங்களும் தவேந்திரனின் சிந்தனையில் உருவாக்கப்பட்டவையே. எமது 40ஆவது ஆண்டின்போது இசைக்குழுக்களிடையே போட்டி நிகழ்வை ஏற்படுத்தி, அதன் மூலமாக ஒஸ்லோ வாழ்

இளையோரிடத்தில் ஐந்து இசைக்குழுக்கள் உருவாகுவதற்கும் காரணமாக இருந்தவர். கலைநிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதில் இருந்து அவற்றில் கலந்துகொள்ளும் கலைஞர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைத்து, அவர்களை வரவேற்று, நிகழ்வுகளை நடாத்தி, மீண்டும் அவர்களை வழியனுப்புவது வரையில் தவேந்திரனின் அதீத உழைப்பு அங்கே காணப்படும்.

தமிழ்சங்கத்தின் மெய்வல்லுநர்போட்டிகளை மென்பொருள்களின் செயற்பாடுகளின் ஊடாக நடாத்துவதற்கான முன்னோடிகளில் ஒருவராகவும் தவேந்திரன் இருந்துள்ளார்.

நோர்வேயில் வெளிநாட்டவர்களைப் பெரும்பான்மை அங்கத்தவர்களாகக் கொண்ட எந்தவொரு விளையாட்டுக் கழகத்திடமும், உள்ளரங்க மைதானத்தினை நிர்வகிக்கும் பொறுப்பு, விளையாட்டுத் துறையினரால் இதுவரை கொடுக்கப்படவில்லை.

தமிழ்ச் சங்கத்தின் விளையாட்டுக் கழகத்தினர், உள்ளரங்க மைதானம் ஒன்றினை நிர்வகிக்க வேண்டும் என்ற நோக்கத்தினை முன்னிறுத்தி, அதற்கான திட்டங்களை வகுத்து ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் குழுவிலும் தவேந்திரன் இணைந்தது இயங்கியிருக்கிறார். இச்செயற்பாட்டின் பலனை நாம் அனுபவிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

விளையாட்டு நிகழ்வின்போது போட்டிகளையும், சிற்றுண்டிச் சாலையையும் நடாத்தி, விளையாட்டு நிகழ்வு முடிந்தபின், அனைத்துப்பொருள்களையும் கழுவிச் சுத்தப்படுத்தி, வாகனங்களில் ஏற்றி இறக்கி, உரிய இடங்களில் வைத்து, பணப்பரிமாற்ற அறிக்கைகளைத் தயாரித்து, பின்பு அனைத்து வேலைகளையும் முடித்து ஓயும்வரையில் அவர் ஓய்வதேயில்லை. விளையாட்டுப் போட்டிகளின்போது காலை ஏழுமணியில் இருந்து நடுநிசி கடந்தும் ஓடி ஓடி உழைத்த நாள்களும் உண்டு.

எமது இணையத்தளத்தின் வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும், தொடர்ச்சியாக அதனை புதுப்பிப்பதிலும்கூட, அவரது பங்களிப்பு இருந்திருக்கிறது. எந்த விடயத்திலும் துறைசார் நிபுணத்துவத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உள்ளவர்களை உள்வாங்கி, நன்றாகச் செயற்படவேண்டும் என்ற கருத்தினை உடையவர் அவர்.

இதன்காரணமாகவே எமது இணையத்தளம் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படுகிறது. எமக்கென்று ஓர் அலுவலகம் அவசியம் என்பதை உணர்ந்து, அதற்கேற்ற ஓர் இடத்தினைத் தெரிவுசெய்து, எமது அலுவலகத்தினை உருவாக்குவதிலும், அவ்வலுவலகத்தினைப் புதுப்பிப்பதிலும் அவர் முன்னின்று உழைத்தவர்.

தமிழ்ச்சங்கம் அரச மானிய உதவியின் ஊடாக கலை மற்றும் விளையாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்தவர்களில் தவேந்திரனும் ஒருவர். இதன் அடிப்படையில், வருடாந்தம் நாம் பெறும் அரச மானியக் கோரிக்கைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி, சங்கத்திற்குப் பெருமளவு வருமானத்தைத் தேடித்தந்தவர்களில் தவேந்தரனும் ஒருவர்.

அரச அலுவலகங்களுடனான தொடர்புகளைப் பேணுவதிலும், அவசியமான ஆவணங்களை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்புவதிலும் தவேந்திரனது பங்களிப்பு முக்கியமானது.

தமிழ்ச்சங்கத்தில் நிர்வாக உறுப்பினராக இணைந்து நிர்வாக உறுப்பினர், தலைவர், பொருளாளர், உபதலைவர் எனப் பல பதவிகளை வகித்து, நோர்வே தமிழ்ச் சங்கத்திற்கு பெரும் பங்களிப்பினைச் செய்தவர்களுள் ஒருவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவேந்திரனைப்போன்ற தன்னை முன்னிலைப்படுத்தாத, பொதுநலம் நாடும், தன்னார்வலத்தொண்டர்கள் கிடைப்பது அரிதானது. அவரை எமது அங்கத்தவராகப் பெற்றமைக்கு நாம் பெருமைகொள்வதோடு, அவர் விட்டுச்சென்றிருக்கும் இடைவெளியினை இலகுவில் நிரப்பிவிடமுடியாது என்பதனையும் நாம் புரிந்திருக்கிறோம்.

மனிதன் என்பவன் சமூகப்பிரக்ஞையுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதையும், அவன் எவ்வாறு வாழ்ந்து காண்பிக்கவேண்டும் என்பதற்கும் உதாரணமாக விளங்கியவர் தவேந்திரன்.

அவரது இழப்பில் துயருருறும் குடும்பத்தினரின் துயரில் நோர்வே தமிழ்ச் சங்கமும் பங்குகொள்கிறது.

---

**அகிலன் சண்முகலிங்கம்**

**தலைவர்**

***2022* நிர்வாகம் நோர்வே தமிழ்ச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாப் புகழோடு

அமரர் தவேந்திரன் அவர்கள் தமிழ்ச்சமூகத்தின் ஒரு பங்காளி. தமிழ்ச் சமூகம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சிபெற தன்னாலான பணிகளைச் செய்துவிட்டு நீண்ட ஓய்வு பெற்றுள்ளார்.

நாம் வாழும் அஸ்கர், பாரும் என்ற இரு பிரதேசங்களில் சிதறுண்டு வாழ்ந்த தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பை உருவாக்கியவர்களில் தவேந்திரனுடைய பங்கு முதன்மையானதும் அளப்பரியதுமாகும். அமரர் தவேந்திரன் தமிழ் மக்களுக்காகச் செய்த சேவை எண்ணிலடங்காதவை.

புலம் பெயர்ந்து வாழும் ஒரு சமூகம் இயல்பாகவே தமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைப் பேணிக்காக்க வேண்டியது அச்சமூகத்தின் கடமையாகும். இவ்வுணர்வைத் தவேந்திரன் அவர்கள் அதிகமாகக் கொண்டிருந்தார் என்பது மிகையாகாது. அவற்றை முழுமையாக செயற்படுத்தத் தவறியதும் இல்லை. தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பினூடாக அவ்வமைப்பின் அங்கத்தவர்களின் முழு ஒத்துழைப்போடு இவை அனைத்தையும் செயற்படுத்தி வெற்றியும் கண்டார்.

*1994* இல் தமிழர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டுதோறும் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் தம் பாரம்பரிய விழாக்களை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இவற்றோடு எமது பாரம் பரிய விளையாட்டுகளையும் விளையாடி வருகின்றனர். இவற்றையெல்லாம் ஆர்வத்தோடு முன்னின்று நடாத்தியவர் அமரர் தவேந்திரன் அவர்கள் ஆகும். இவையனைத்தும் இப்போதும் தொடர்வது மகிழ்ச்சியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் பூத்த மொழிப்பற்றின் காரணத்தால் எமது சிறுவர்களுக்காக தமிழ் அறிவாலயம் என்னும் பாடசாலையை ஆரம்பிப்பதில் ஆர்வம்காட்டி வெற்றிகண்டார். தமிழ்ப்பாடசாலையாக இருந்தாலும் மாணவர்கள் நலன்கருதி உப பாடங்களான ஆங்கிலம், கணிதம், நடனம், விஞ்ஞானம், கணனி, சுரஇசைத்தட்டு, போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு சிறந்த கல்வியாளர்களை நியமனம் செய்து கொடுத்து எமது மாணவர்களை ஊக்குவித்தார்.

இதுமட்டுமல்லாமல் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் மட்டும் அல்லாது ஏனையவர்களும் கணனி கற்பதற்கு முழுமுயற்சியெடுத்தார். அதன் பயனாக பலர் கணனிக்கான அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்கு உதவினார். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து அவர்தம் தேவைகள் மற்றும் பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்வதற்காக பறை எனும் சஞ்சிகை ஒன்றை பிரசுரிக்க முன்வந்து வெற்றிகண்டார். சஞ்சிகைக்காக Bærum Kommune இல் இருந்து நிதியுதவியும் பெற்றுத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் தமிழ்க்கல்வியின் முக்கியத்துவம் கருதி நோர்வேயிலும், வெளிநாடுகளில் இருந்தும் துறைசார்ந்த அறிஞர்களை வரவழைத்து கருத்தரஙகுகள் நடாத்தி மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வைப் பெறவைத்தார்.

அமரர் தவேந்திரன் அவர்கள் தமிழருக்காக செய்த சேவைகள் சொல்லில் அடங்காதவை. அஸ்கர் பாரும் தமிழர் ஒன்றியம் இருக்கும்வரை அமரர் தவேந்திரன் அவர்கள் புகழ் அழியாது நிலைத்திருக்கும்

**அமரர் தவேந்திரன் அவர்கள் ஆன்மா சாந்தியடையட்டும்.**

**அஸ்கர் பாரும் தமிழர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாதனா

மானுடம் வெல்ல நிகழும் கலை

# கலாசாதனா கலைக்கூடத்திற்கு தவேந்திரன் மாமா பேரிழப்பு!

எனது பதின்ம வயதிலிருந்து தவேந்திரன் மாமாவை அறிவேன் எனினும், கலாசாதனா கலைக்கூடம் தொடங்கிய காலத்தில் தவேந்திரன் மாமாவுக்கு என்னோடு முரண்பாடு இருந்தது. தவேந்திரன் மாமா எப்போதும் எல்லோரும் ஒன்றாக இயங்க வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டவர்.

அஸ்கர் பாரும் தமிழ்ச்சங்கம் ஒன்றில் என்னை நடன ஆசிரியராகப் பணிபுரியக் கேட்ட இடத்தில், நான் கலையில் சுயம்புவாக இயங்க விரும்புகிறேன் என்று விலகிக் கொண்டதில், அவருக்குப் பெருத்த மனவருத்தம். அவரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் சில வருடங்களிலேயே அவருடைய குழந்தைகளை கலாசாதனா கலைக்கூடத்தில் இணைத்துக் கொண்டார்.

தனது குழந்தைகளை நடனம் பயில எங்களிடம் அழைத்து வந்த நாளில் இருந்தே, அவருக்கும் எங்களுக்குமான பயணம் தொடங்கியது.

கலைகளில் பெரும் ஈடுபாடுகொண்ட மனிதராகவும், எங்கள் கலைக்கூடத்திற்கு பெரும் வளமாகவும் அவர் இருந்தார். ஒரு நல்ல படைப்போ, பொது விடயமோ நடக்குமாயின் தவேந்திரன் மாமா அதற்காகக் கைகொடுக்கும் ஒரு மனிதராக எப்போதும் இருப்பார். யார் செய்வது, யாருக்கு செய்யப்படுகிறது என்பதை விட, செய்யப்படும் விடயம் நல்லதா என்பதே அவருக்கு முக்கியமாக இருந்தது. எங்கள் அனைத்துக் கலைப்படைப்புகளின் பின்னாலும் அவரது கைகள் இருந்தன.

குருசேத்திரம், சிற்பியின் நரகம், ஞானரதம், பறை போன்ற அனைத்து படைப்புகளிலும் மேடை அமைப்பானாலும் சரி, மேடைப் பொருள்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்றாலும் சரி வேறு எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும் எந்த இடத்திலும் அவர் மறுப்புத் தெரிவித்ததே இல்லை. பிற நபர்கள் எம்மோடு முரண்பட்டால், அவர்கள் போன பின், "யார் என்ன சொன்னாலும் நீங்கள் செய்யுங்கள் கவிதா. நாங்கள் இருக்கிறோம்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் எம்மோடு துணைநின்ற மனிதர் தவேந்திரன் மாமா.

தனது மண்ணிலும் சரி, புலம் பெயர்ந்த மண்ணிலும் சரி மனிதர்களுக்கு உதவி செய்தல் என்பதைத் தனது வாழ்க்கையின் அம்சமாகக் கொண்டிருந்தார். அதேபோலவே தனது குழந்தைகளையும் தனது மண்ணிற்காக பல பணிகளைச் செய்யக் கற்றுக் கொடுத்திருந்தார் என்பதையும் காணக்கிடைத்தது.

பொது அமைப்புகளில் மிகுந்த ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்போடும் தன்னை இணைத்துக்கொண்ட மனிதர் மட்டுமல்ல, எந்தத் தருணத்திலும் தன்னை முன்னிருத்திக்கொள்ளாத மனிதராகவும் இருந்தார். தவேந்திரன் மாமா உண்மையில் மிகப்பெரும் ஆளுமை. அவரைப் போல அன்பு மனம் படைத்த மனிதர்கள் இருந்தால், பல பிரச்சினைகள், பிளவுகள் ஏற்படாமலே இருக்கும்.

தான் தொண்டாற்றிய பொது அமைப்புகளில் எங்கள் கலைக்கூடம் பங்குபற்றும் போதெல்லாம், தனது குழந்தைகள் பங்குபெறுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்வார். தன் சொந்த நலனுக்காகப் பொதுநலனில் ஈடுபடுவதாகி விடக்கூடாது என்பதில் எப்போதும் கவனமாகவே இருப்பார். அவருடைய எண்ணம் யாவும் கலை நிகழ்வுகள் தரமானதாக இருக்க வேண்டும் என்பதில் மட்டுமே இருந்தன.

எப்போது எங்கள் வீட்டிற்கு வந்தாலும் அதில் ஒரு பொது விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். பார்த்துப் பார்த்து ஒவ்வொரு விடயத்தையும் செய்து கொள்வார். தவேந்திரன் மாமா ஏதும் பொதுநலன் சார்ந்த வேலைகளைக் கேட்கும்போது எனக்கு எப்போதும் மறுக்கத் தோன்றியதேயில்லை. அத்தகைய முகமும் பேச்சும் வாய்க்கப்பெற்றவர்.

அவருக்குப் பல கனவுகள் இருந்தன. அக்கனவுகள் யாவும் இளம் தலைமுறையினரின் வளர்ச்சி தொடர்பாகவே இருந்தன.

சில மாதங்களுக்கு முன்பு கூட *(2021, ஐப்பசி மாதம்)* பாரும் நகரசபை அழைத்த ஒரு கூட்டத்திற்கு பெற்றோர்கள் சார்பில் அவரையே அழைத்துச் சென்றிருந்தேன். அவரே அதற்குப் பொருத்தமானவராகக் காணப்பட்டார். மிக உற்சாகமாக இளம் தலைமுறைகளுக்கு என்னென்ன செய்ய வேண்டும், எப்படிப்பட்ட வசதிகள் கலைக்கூடங்களில் அமைக்கப்படல் வேண்டும் என்று எத்தனையோ கனவுகளை ஆலோசனைகளாகச் சொல்லிக்கொண்டிருந்தார். எங்கள் கலைக்கூடத்திற்கு என்ன தேவை இருக்கிறது என்பது என்னைவிட, அவருக்கு அதிகம் தெரிந்திருப்பதாக உணர்ந்தேன். இதுவே அவருக்கும் எனக்குமான இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

தவேந்திரன் மாமாவின் துயரச் செய்தியை அறிந்து, அவரோடு நகரசபை நிறுவனங்களில் பணியாற்றிய பல்லினத்தவர்களும் என்னைத் தொடர்பு கொண்டு, அவருடைய இறுதிச் சடங்கிற்கு வரமுடியுமா என்றும், தமக்குத் தகவல்களைத் தந்துதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். தவேந்திரன் மாமாமீது அவர்கள் வைத்திருந்த மதிப்பினை அவர்களுடைய வார்த்தைகளும், அவர்களது துயரமும் பறைசாற்றின.

தனது சொந்த நலனுக்கு எக்காலத்திலும் பொது நிறுவனங்களை பாவித்துக்கொள்ளாமல் இருந்த ஓர் உயிர், எப்போதும் தனது கைகளைப் பிறருக்குக் கைகொடுக்கவே வைத்திருந்த உயிர், இனி எம்மோடு பயணிக்கப் போவதில்லை என்பது பெருந்துயரம்.

கலாசாதனா கலைக்கூடத்திற்கு தவேந்திரன் மாமா பெரும் இழப்பு!

---

***கவிதா லட்சுமி - கலாசாதனா கலைக்கூடம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

education & career forum Norway

# தோழர் தவேந்திரன் குகதாசனுடன் சில நொடிகள்

இவரைப்பற்றி நான் சில விடயங்களை அறிந்திருந்தும், இவருடனான முதல் சந்திப்பு சித்திரை மாதம் 2003ம் ஆண்டு நிகழ்ந்தது. தாயகத்தில் இருந்து முதன் முதலாக வருகை தந்திருந்த பொருண்மிய கட்டுமானத்தின் பணிப்பாளர்களைச் சந்திப்பதற்காக ஒஸ்லோவில் இருக்கும் *Bryn* பாடசாலைக்கு வந்திருந்தார். சிறு புன்முறுவலுடன், வேலைக்கான நேர்காணலுக்கு வருவதைப் போல், கையில் ஒரு கோப்புடன் நின்றிருந்தார்

அவரின் பணிவும், அமைதியான சிரிப்பும், எமது தேசத்தின் பொருண்மிய வளர்ச்சிக்கான எதிர்வு கூறல் திட்டவரைபை, அங்கு தான் கொண்டுவந்த கோப்பு அறிக்கை மூலம் பணிப்பாளர்களுக்கு விபரித்தார். இவரின் திட்ட வரைபு அனைவராலும் கவரப்பட்டிருந்தது. யுத்த ஓய்வு கால எல்லைக்குள், தான் கற்றுக்கொண்ட தொழில் நுட்பத்தை எப்படியாவது தாயகத்துக்கு கொண்டு செல்வதில் மிக ஆர்வமாகவும், ஆணித்தரமாகவும் இருந்தார். அதிலும் தான் கற்றுக்கொண்ட நீர்நிலை(*Hydrolic*) தொழில்நுட்பத்தை மாணவ, மாணவியருக்கு தொழில்நுட்ப கல்லூரிகளுக்கூடாக அறிமுகப்படுத்தி, அதன் ஊடாக வேலைவாய்ப்புகளை உருவாக்க முயற்சித்தார். எதிர்பாராதவிதமாக யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததால், அவரின் எண்ணக்கருவும், செயல்திட்டமும் ஒத்திவைக்கப்பட்டது.

*2003* ம் ஆண்டு தொடக்கம் *2010*ம் ஆண்டு வரை சிறு இடைவெளி. ஆனாலும்,இந்த இடைவெளிக் காலங்களில் நாம் தொலைபேசியில் அல்லது எமது கலை, கலாசார நிகழ்வுகளில் நேரடியாக உரையாடும்போது தாயக பொருண்மிய வாஞ்சனை அவர் எண்ணக்கருவில் இருந்தது.

*2015* ம் ஆண்டு, எல்லைக்கிராமம் ஆகிய பாணமை மக்களுடன் தன்னை இணைத்துக்கொண்டார்.அக்கிராமத்தில், எமது மொழியும், அடையாளமும் *79* ஆண்டுகளுக்கு மேல் மெல்ல, மெல்ல திட்டமிட்ட வகையில் அழிந்துகொண்டு செல்வதைத் தடுப்பதற்காக, முதன் முதலில் தனது தார்மீக பங்களிப்பைச் செய்ததன் மூலம் ஒரு வரலாற்று நாயகனாகத் திகழ்ந்தார். இந்த கிராமத்தில் இருக்கும் பாலர் முன் பள்ளி பாடசாலையான "ஒளி ஊட்டும் கரங்கள்" ஆரம்பிப்பதில் முன்னின்றவர். தொடர்ந்து இப்பாடசாலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்காக, நோர்வே தமிழ்ச்சங்கத்தில் ECFN உதவிதிட்டத்திற்காக அயராது பாடுபட்டார்.

2015 ம் ஆண்டு, 25 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த முன் பள்ளியின் மாணவர்கள் தற்போது 3ம், 4ம் வகுப்பில் படிக்கின்றார்கள். எதிர்காலத்தில், இந்த மாணவ, மாணவியர் ஒரு சிறந்த கல்விமான்களாகவும், சமூகத்தில் நல்ல பிரஜைகளாகவும் வருவது திண்ணம். இவரின் கனவை நிஜமாக்குவார்கள் என்பதில் ஒரு ஐயமும் இல்லை.

2019 ம் ஆண்டு ECFN ன் வாழ்வாதார உதவித்திட்டத்திற்காக, தான் பணிபுரிந்த வேலைத்தளத்தில் உதவியை நாடினார், அது ஒரு சில காரணங்களால் கைகூடவில்லை.

2015 ம் ஆண்டு தொடக்கம் 2022 ம் ஆண்டு வரை, ECFN ன் சகல வேலைத்திட்டங்களுக்கும், ஒரு தூணாக இருந்தார். அத்துடன் இவர் நோர்வே தமிழ் சங்கத்தின் ஊடாக இறுதிவரை, சளைக்காமல், ஒரு பங்காளியாக இருந்து தனது ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்தவர். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் எல்லைக்கிராமமாகிய கங்குவேலி விவசாயத்திட்ட உதவிக்கு முன்னின்று பங்காற்றினார்.

இவர் எந்தவொரு அரசியல் பின்னணிகளுமின்றி தன்னிச்சையாக செயற்படும் வல்லமையுள்ள ஒரு மனிதர்.

2012ம் ஆண்டு, எமது அமைப்பான "Education & Career Forum Norway (ECFN) கொள்கையை ஏற்றுக்கொண்டு, எம்முடன் இறுதி மூச்சு வரை தாயகத்தில் வறுமை கோட்டில் இருக்கும் மாணவர்களுக்கு உதவி செய்தவர். இவர் எம்மை விட்டு போகவில்லை, மாறாக எம்மை முழுவீச்சுடன் வானத்தில் இருந்து வழிநடத்த தொடங்கியுள்ளார்.

இவரின் கனவை நனவாக்குவது ECFN ன் கடமையாகும்.

நன்றிகள் பல தோழா!

---

**சிவகுமார் சிவசண்முகநாதன், ஒஸ்லோ, நோர்வே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOOLAHAM FOUNDATION

Noolaham Foundation
நூலக நிறுவனம்

# அஞ்சலிக் குறிப்பு

நூலக நிறுவனத்தின் 'ஊர் ஆவணப்படுத்தல்' என்னும் திட்டத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகளில் ஒன்றான "அரியாலை ஆவணப்படுத்தல்" எனும் செயற்றிட்டத்தினை, நாம் நூலக நிறுவனத்தின் நோர்வேக் கிளையின் ஊடாகவே ஆரம்பித்திருந்தோம்.

இத்திட்டம்பற்றி முதன் முதலாக தவேந்திரனிடமே எமது தொடர்பாளர் உரையாடியிருந்தார். அரியாலையை ஆவணப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தவேந்திரனிடம் ஏற்கனவே இருந்துள்ளது. எனவே, இத்திட்டத்திற்கு மிகுந்த ஆர்வத்துடன் தன் பங்களிப்பினைச் செய்துள்ளதோடு, நோர்வேயில் மட்டுமன்றி உலகெங்கும் இருந்தும் அரியாலையைச் சேர்ந்தவர்களை எமக்கு அறிமுகப்படுத்தியவர் இவர். இவரது வழிகாட்டலில் எமக்குக் கிடைத்த பல தன்னார்வலர்களின் உதவியினால் நாம் அரியாலையை ஆவணப்படுத்த முடிந்திருந்தது.

இத்திட்டத்தின் பெறுபேறுகளை நாம் மீளாய்வு செய்தபோது, இரண்டாம் கட்ட செயற்றிட்டத்தில் எவற்றை நாம் மேம்படுத்தவேண்டும், புதிதாக எவையெவை இணைக்கப்படவேண்டும் என்ற தனது கருத்துக்களையும் முன்வைத்திருந்தார்.

இவைமட்டுமல்ல, நோர்வே தமிழ்ச் சங்கம் தனது பாரிய பங்களிப்பினை நூலகத்திற்கு வழங்கியபோது, அவற்றின் பின்னணியிலும் இவரது உதவிகளும் ஆலோசனைகளும் இருந்திருக்கின்றன.

ஆவணப்படுத்தலில் ஆர்வமும் ஆவலும் கொண்ட ஒரு தன்னார்வலத்தொண்டரை நாம் இழந்துள்ளோம்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தவரின் துயரில் நூலக நிறுவனமும் பங்குகொள்கிறது. நன்றி!

ந.றஞ்சுதமலர்

தலைமை நிறைவேற்று அலுவலர் - நூலக நிறுவனம்

*No 55, Somasundaram Lane, Chundukuli, Jaffna.*

*Phone: +94 21 223 1292 | Email: noolahamfoundation@gmail.com*

*www.noolahamfoundatiom.org*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை**

**WORLD TAMIL BADMINTON FEDERATION**

WTBF I Im Zenrtum 11 a, 6043 Adligenswil, Switzerland I e-mail: info@wtbf.net I www.wtbf.net

WTBF Handelsregister: Firmennummer CHE-229.863.773

Honorable members: Ian Kiru Karan, Senator a.D Hamburg, Germany / Lawyer K.V Thavarasa, Sri Lanka / Dr. N.Tharmarajah (Agalangan), Sri Lanka

2019 இல் நோர்வே - ஒஸ்லோவில் நடைபெற்ற உலகத்தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் (WTBF) 7வது உலகக்கிண்ணப் போட்டியினை சிறப்பாக நடாத்தி முடிக்க பெரும்பங்காற்றிய தவேந்திரன் குகதாசன் (தவே அண்ணா ) அவர்கள் எம்மைவிட்டு நிரந்தரமாகவே விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

இவர் நோர்வே தமிழ்ச் சங்கத்தினூடாக நீண்டகாலமாகவே சமூக சேவையாற்றி வந்திருக்கின்றார். இக்கட்டமைப்பினூடாகவே தவே அண்ணா அவர்களை உலகத்தமிழர் பூப்பந்தாட்ட பேரவை இனம் காணக்கூடியதாக இருந்தது.

தவேந்திரன் அண்ணா அவர்கள் *WTBF* இனால் நடாத்தப்பட்ட உலக கிண்ணப் போட்டிகளின் போதான ஒவ்வொரு செயற்திட்டங்களிலும் சிரித்தமுகத்துடன் சிறப்பாக பங்காற்றியிருந்தமையை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

மிகவும் அமைதியான போக்குடைய, செயற்திறன் மிக்க தவேந்திரன் அவர்களது மறைவு எமது சமூகத்தின் அனைத்து துறை சார்ந்த அமைப்புகளிற்கும் மிகப்பெரிய பேரிழப்பாகும்.

துரதிர்ஷ்டமான இவரது இழப்பின் துயரில் உலகத்தமிழர் பூப்பந்தாட்டப்பேரவைக் குடும்பமும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா ஈடேறவும் பிரார்த்திக்கின்றோம் அத்துடன் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் உட்பட அனைவர்க்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

---

**உலகத்தமிழர் பூப்பந்தாட்டப்பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவேந்தல் நினைவு வணக்க நிகழ்வு


**20.02.2022**

**Frogner skole,**
**Trondheimsveien 362, 2016 Frogner**

- நிகழ்ச்சிநிரல்
- அகவணக்கம்
- சுடர் வணக்கம்
- பாடல் - ஜீவந்தி தவேந்திரன், இசை ரவிக்குமார் வேலாயுதம்
- உரை - கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம்
- காணொளிப்பதிவு உரை - ஸ்ரீஸ்கந்தன் பரமநாதன், கனடா
- காணொளிப்பதிவு உரை - வெற்றிச்செல்வி சந்திரகலா, மாந்தை மேற்கு மாற்றுத் திறனாளிகள் அமைப்பு
- காணொளிப்பதிவு உரை - ஸ்ரீபார்வதி வித்தியாலயம் அபிவிருத்திச் சங்கம். பாடசாலை அதிபர். திரு ரவிச்சந்திரன் கந்தையா
- காணொளிப்பதிவு உரை - ராஜரூபன் செல்வதுரை, லண்டன்
- இசைநிகழ்வு - *Morton Zakaria*
- உரை பாலசிங்கம் யோகராஜா
- காணொளிப்பதிவும் உரையும் - நோர்வே தமிழ்ச்சங்கம், சுரேன் சரவணமுத்து
- உரை - அருணன் சரவணமுத்து, லண்டன்
- உரை - அரியாலை மக்கள் மன்றம், நோர்வே. புலேந்திரன் கனகரட்ணம்
- உரை - கலாசாதனா கலைக்கூடம். கவிதா லட்சுமி
- உரை - ரவிக்குமார் திருச்செல்வம்
- பாடல் - லவங்கி ராஜேந்திரன்
- கவிதாநிகழ்வு - காற்று காவி வந்த சேதி கேட்டு. சாந்தகண்ணா
- பாடல் - அஞ்சனா ராஜகோபால்
- தவேந்தல் நினைவு விபரணம். விஜய் நாதன், சுரேஸ் சிவராஜா
- உரை- சிவகுமார் சிவசண்முகநாதன் (EFCN)
- "தவேந்தல்" - நூல்வெளியீடு - சரவணன் கோமதி நடராசா
- இசையஞ்சலி - அதிசயன் சரேஸ் (வயலின்), அபிசன் கணேசு (சுரத்தட்டு), சிபி அன்பழகன் (தபேலா)
- உரை - சஞ்சயன் செல்வமாணிக்கம்
- நன்றியுரை – குடும்பத்தினர்
- சிற்றுண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்


140823CC

# நன்றி நவிலல்

தவேந்திரன் நோயுற்றிருந்த காலத்தில், அவருக்குப் பக்கத்தில் பெருந்துணையாகவும் ஆறுதல் வார்த்தைகள் பல கூறியும், மருத்துவ வழிமுறைகளோடு மனதினுள் நம்பிக்கையூட்டி, அவரைத் தேற்றி வழிநடத்திய வைத்தியக் கலாநிதி ரவிச்சந்திரன் துரைசாமி (லண்டன்) மற்றும் பாலசிங்கம் யோகராஜா (நோர்வே) ஆகியோருக்கு எமது உளங்கனிந்த நன்றிகள்.

அத்துடன், அவர் அமரத்துவமடைந்த தகவலை அறிந்து, நேரிலும் வந்து தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு எம்மனதை ஆசுவாசப்படுத்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வினை வழிப்படுத்த முன்னின்று உதவிய அனைவருக்கும், உணவு தந்தவர்களுக்கும் மற்றும் மலர்செண்டு மலர்வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும் அத்துடன், இன்றைய நினைவுதின நிகழ்வுகளையும் அவருக்கான நினைவு மலரையும் ஒழுங்கமைப்புச் செய்து தந்தவர்களுக்கும் எங்கள் மனம் நெகிழ்ந்த பேரன்பையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

289502

- தவேந்திரன் குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ISBN 9788230353981
9 788230 353981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org